Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 22-6-2015 Issued : 22-6-2015

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, மார்ச் 30, 2015—தொகுதி 78—எண் 3**

**Monday the 30th March, 2015—Volume 78-No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

# 30–3–2015

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 259-321 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) திருவாரூர் மத்திய பல்கலைக்கழக கட்டட விபத்து | 321-323 |
| *திரு. மு.க. ஸ்டாலின் | 321 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 322-323 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 324-325<br>327-328 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 324-327 |
| திரு. துரைமுருகன் | 324 |
| மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 324 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 325 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 327 |
| திரு. எம். ஆறுமுகம் | 328 |
| திரு. என்.ஆர். ரெங்கராஜன் | 328 |
| (இ) வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் காரில் மோதி ஒருவர் மரணம் | 325-327 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 325-327 |

பக்கங்கள்

**3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

*(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015* 328-329

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 329

*(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2015* 350

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 350

*(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2015* 352-353

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 352, 353

**4. முன்பண மானியக் கோரிக்கைகள், 2015–2016, அளித்தல்—**

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 329-335

**5. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2014–2015, அளித்தல்—**

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 335-338

**6. அறிவிப்புகள்—**

*(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014–2015, முன்மொழிதல் (ஆ.செ.)* 343

*(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)* 349

*(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2015–2016, முன்மொழிதல் (ஆ.செ.)* 350-351

*(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)* 352





பக்கங்கள்

**7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014–2015, வாக்கெடுப்பு—** 343-344

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 351

**8. முன்பண மானியக் கோரிக்கைகள், 2015–2016, வாக்கெடுப்பு—**

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்

**9. அரசினர் தீர்மானம்—** 351

*விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்* 353

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

*(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2015* 354-355

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 354-355

*(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2015* 356-357

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 356,357

**11. வரவு–செலவுத் திட்டம், 2015–2016, பொது விவாதம்**—தொடர்ச்சி 358-471

முனைவர் வைகைச்செல்வன் 358-371

*திரு. துரைமுருகன் 371-387

*மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 373,431

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு 373-374

460-461

பக்கங்கள்

**11. வரவு–செலவுத் திட்டம், 2015–2016,**
**பொது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 376-379, 381-385 388-408 410-414, 416-417, 419,422-425 436-439, 450-454 |
| மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 380, 432 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 387-393 408-409 414-421,423, 425-428 |
| *திரு. மு.க. ஸ்டாலின் | 410-412 |
| திரு. எ.வ. வேலு | 411-412 |
| *மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 421-422, 461-463 |
| மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 426,440-443 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 429-430 |
| * திரு. அர. சக்கரபாணி | 431 |
| மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி | 433 |
| மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம் | 433-434 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால் | 434-435 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 435,448-449 |
| *திரு. பி.எல். சுந்தரம் | 439-440.442-450 |





பக்கங்கள்

**11. வரவு–செலவுத் திட்டம், 2015–2016,**
**பொது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| *** மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்** | 448 |
| **மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்** | 449-450 |
| *திரு. எம். ரெங்கசாமி | 454-458 |
| திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 459-467 |
| மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 463 |
| மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி | 464 |
| *திருமதி சீ. வளர்மதி | 467-471 |
| **12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 472 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஜய, பங்குனி 16, திருவள்ளுவர் ஆண்டு—2046

## 2015 மார்ச் 30, திங்கட்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்*
*ஆற்ற விளைவது நாடு."*

*மிகுந்த செல்வ வளம் உடையதாய், எல்லோரும் விரும்பக்கூடியதாய் பெருந்துன்பம் வந்தாலும் எதிர்த்து வெற்றியைக் காணுவதாய் உள்ளதே சிறந்த நாடாகும்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**76—**

### புதிய மின்மாற்றி

***32669—திரு. பி.கே. வைரமுத்து:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருமயம் தொகுதி, பனையூர் தெற்கு குடியிருப்புக் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

[2015 மார்ச் 30

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், பனையூர் தெற்கு குடியிருப்புக் கிராமத்திற்கு தற்போது அரிமளம் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம், பனையூர் தெற்கு குடியிருப்புக் கிராமத்தில் 100 கே.வி.ஏ. திறன்கொண்ட மூன்று மின்மாற்றிகள் இயங்கி வருகின்றன. அவற்றின் மொத்தத் திறன் 300 கே.வி.ஏ. ஆகும். அதாவது 270 கிலோ வாட் ஆகும். மேற்கண்ட கிராமத்தில் உள்ள மொத்த மின் பளு 264 கிலோ வாட். இந்த மின் பளுவிற்கு மூன்று 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகளே போதுமானதாகும். எனவே, மேலும் ஒரு 100 கே.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றி அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

**திரு. பி.கே. வைரமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மை கொள்ளட்டும் தமிழகம், மேலோங்கி நிற்கட்டும் தமிழினம் என்பதற்கே மெழுகாக தானுருகும் வாழும் வரலாறே! வரலாற்றுப் பெட்டகமே! வளர்காலைப் பொழுதாக வந்துதித்த வான்மேகமே! இயலாதவர்கள் தமிழகத்தில் படரவிட்ட இருட்டை, புரட்டை துடைத்திட்ட ஈகையே! தலைக் காவேரியை தமிழ் மண்ணுக்கு நடை கூட்டி அழைத்து வந்து தமிழருக்கு அமுதூட்டிய அட்சய பாத்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) அன்னைத் தமிழகமே! அனைத்திலும் முதல் மாநிலம் என்னும் பெருமைகளைப் படைத்திட்ட பேரறிவே! முல்லைப் பெரியாற்றின் சிறகுகளை விரிக்கவிட்டு, உழவினத்தின் பயிரையும், உயிரையும் ஒருசேரக் காத்திட்ட ஒப்பில்லா தாயே! உமையே தாள்பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதியில் பனையூர் தெற்கு குடியிருப்புக் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைத்துத் தர வேண்டும் என்று கேள்வியைக் கேட்டு, வினா அவைக்கு வரும்முன் புதிய மின்மாற்றி அமைத்து, கும்பிட்ட



2015 மார்ச் 30]

கரம் விலகுமுன் கோரிக்கையை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு மக்களின் முதல்வர் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமயம் தொகுதியில் விவசாயத்திற்கு மின்சாரம் அதிகம் தேவைப்படும்போது கூடுதலாக ஒரு மின்மாற்றி அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பனையூர் தெற்கு குடியிருப்புக்கு அரிமளம் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. மின்னூட்டி வழியாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–05

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மூன்று மின் மாற்றிகள் அங்கே இயங்கி வருகின்றன. ஆக மொத்தம் 300 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் அங்கே இயங்குகின்றன. ஆனால், அந்தப் பகுதியினுடைய மொத்த மின் பளுவே 264 கிலோ வாட்தான். அதாவது, அங்கே தற்பொழுதுள்ள உச்சபட்ச தேவையே 264 கிலோ வாட்தான். எல்லா மின் இணைப்புகளும் ஒரே நேரத்தில் இயங்கினால்தான் இந்த 264 கிலோ வாட் அளவிற்கு மின் பளு இருக்கும். ஆனால், அவை அனைத்தும் ஒரே நேரத்தில் இயங்காது. அதனால் 250 கிலோ வாட்டுக்கு மேல் மின் பளு வராது. ஆனால், தற்போது 270 கிலோ வாட் அளவிற்குத் திறன் கொண்ட மின்மாற்றிகள் அங்கே இருக்கின்றன.

தற்போது அந்தப் பகுதியிலுள்ள வீட்டு மின் இணைப்புகள் 80; அவற்றின் மொத்த மின் பளு 90 கிலோ வாட். வணிக இணைப்புகள் 4; அவற்றின் மின் பளு 4 கிலோ வாட். விவசாய இணைப்புகள் 56; அவற்றின் மின் பளு 164 கிலோ வாட்.

[2015 மார்ச் 30

மேல்நிலைத் தொட்டிகள் 4; அவற்றின் மின் பளு 6 கிலோ வாட். ஆக மொத்தம் 144 மின் இணைப்புகளுக்கு, 264 கிலோ வாட் அளவிற்குத்தான் மின் பளு இருக்கின்றது. ஆனால், தற்போது இந்த மின் பளுவிற்கு அதிகமாகவே, மின் பளுவைத் தாங்கக்கூடிய அளவிற்கு அங்கே மின்மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியிலே நாளுக்குநாள் மின் பளு அதிகரித்து வருகின்ற நிலையிலே, வருங்காலத்திலே இன்னும் மின் பளு அதிகரிக்கின்றபோது, தேவை ஏற்படும் நேரத்தில் அங்கே உடனடியாக புதிய மின்மாற்றிகள் அமைப்பதற்கு அல்லது இருக்கின்ற மின்மாற்றிகளைத் தரமுயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கும் மேலாக ஒரு தகவலையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் மிக அதிகமாக மின்மாற்றிகள் மாற்றப்பட்ட மாவட்டங்களில், உங்களுடைய மாவட்டமும் ஒன்று. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு, 2011–2012–ல் மட்டும் 105 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; 8 மின்மாற்றிகள் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன. 2012–2013–ல் 148 மின்மாற்றிகள் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன; 11 மின்மாற்றிகள் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன. 2013–2014–ல் 204 மின்மாற்றிகள் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன; 66 மின்மாற்றிகள் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன. 2014–2015–ஐப் பொறுத்தவரையில், இன்னும் 2015 ஆம் ஆண்டு முடிவடையவில்லை. ஆனால், இதுவரையிலேயே 174 மின்மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; 15 மின்மாற்றிகள் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம், நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே, 631 புதிய மின்மாற்றிகள் உங்களுடைய மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, 100 மின்மாற்றிகள் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றன.

நான் எதற்காக இந்தப் புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன் என்றால், எங்கே தேவை ஏற்படுகின்றதோ, அங்கேயெல்லாம் நீங்கள் கேட்காமலேயே செய்கின்ற அரசு, மாண்புமிகு அம்மா



2015 மார்ச் 30]

அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்கு என்னென்ன தேவையோ, அவற்றைக் கேட்காமலேயே செய்கின்ற ஒரு தலைவிதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தேவை ஏற்படுகின்ற பகுதிகளிலெல்லாம் நிச்சயமாக மின்மாற்றிகளை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, மின் பளு அதிகரிக்கின்றபோது, உங்களுடைய கோரிக்கையை ஏற்று, புதிய மின்மாற்றி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

**திரு. பி.கே. வைரமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையூர் தெற்கு குடியிருப்புக் கிராமத்தில் விவசாயத்திற்குக் கூடுதலாக மின் தேவை ஏற்படும்போது, புதிய மின்மாற்றி அமைத்துத் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காகவும், புதுக்கோட்டை மாவட்டத்தில் கூடுதலாக மின்மாற்றிகள் அமைத்துத்தந்திருப்பதற்காகவும் மாண்புமிகு மக்களின் முதல்வர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**77—**

## வீட்டு வசதி வாரிய வீடுகள்

***32471—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மடத்துக்குளம் தொகுதி, தளி, சங்கராமநல்லூர், மடத்துக்குளம், கொமரலிங்கம், கணியூர் ஆகிய பேரூராட்சிகளில் நிலங்களைக்

[2015 மார்ச் 30

கையகப்படுத்தி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், மக்களின் முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதிதாக உருவாக்கப்பட்ட மடத்துக்குளம் வட்டத்தில், மடத்துக்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை, தாலுகா அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்தி, அதற்குத் தேவையான நிதியினையும் ஒதுக்கீடு செய்து தந்த மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தர வாய்ப்புகள் இல்லையென்று கூறினார்கள். இருந்தாலும்கூட, மடத்துக்குளம் தொகுதியில் தளி, சங்கராமநல்லூர், மடத்துக்குளம், கொமரலிங்கம் மற்றும் கணியூர் ஆகிய பேரூராட்சிகளில் நிலங்களைக் கையகப்படுத்தி, அந்தப் பகுதிகளில் வீட்டு வசதி வாரியம் மூலமாக நிலம் தேர்வுசெய்து, வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூறியிருந்தேன்.

மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் வட்டம், மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவின்படி, மடத்துக்குளம் தனி வட்டமாக 1–9–2012 முதல் செயல்பட்டு வருகிறது. பல துறை சார்ந்த அலுவலகங்கள் மடத்துக்குளத்திலே செயல்பட்டு வருகின்றன. அலுவலகப் பணியாளர்கள் தற்போது வெளியூர்களிலிருந்து வந்து மடத்துக்குளம் அலுவலகங்களில் பணிபுரிகின்றார்கள். குடும்பத்துடன் தங்கி வேலை பார்ப்பதற்கு மடத்துக்குளம் பகுதியில் போதுமான குடியிருப்பு வசதிகள் இல்லை. புதிய வட்டத்திற்கு அனைத்துத் துறை சார்ந்த பணிகள், அரசு நலத் திட்ட உதவிகள் பொது மக்களுக்கு எளிதில் கிடைக்க, அரசு அலுவலர்கள் தலைமையிடத்தில் பணியாற்ற வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். மேலும், அரசு அலுவலர்களுக்குத் தேவையான வீட்டு வசதிக் குடியிருப்புக் கட்டடங்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்மூலம் மடத்துக்குளத்திலே அமைத்துத் தருவதற்கு, மைவாடி கிராமம், நரசிங்கபெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடம், புல எண் 605–லே 14.39 ஏக்கர் நிலம் துறையின் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளதால், நடப்பு நிதியாண்டிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசுப் பணியாளர் குடியிருப்புகள் கட்டுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.



2015 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர் குடியிருப்புகள், மாவட்டத் தலைநகரம், கோட்டாட்சியர் உள்ள தலைநகரத்தில்தான் கட்டப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், அரசு ஊழியர்கள் அதிகமாக அங்கு பணியாற்றுகின்றார்கள். அவர்களுக்குக் குறைந்த வாடகையில் வீடுகள் கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில், வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக மாவட்டத் தலைநகரம், கோட்டாட்சியர் உள்ள தலைநகரத்தில் கட்டப்படுகின்றன. மடத்துக்குளம் ஒரு பேரூராட்சி. அங்கு அதிக அரசு அலுவலகங்கள் இல்லை. அரசு ஊழியர்கள் பணியாற்றவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், மடத்துக்குளத்திலிருந்து 8 கி.மீ. தூரத்திலுள்ள கொழுமம் சாலையில், மருள்பட்டி என்ற கிராமத்தில் 1997 ஆம் ஆண்டு 277 வீடுகள் கட்டப்பட்டு, விற்கப்பட்டுள்ளன. மீதம் 39 வீடுகளுக்குப் போதிய வரவேற்பு இல்லை.

[2015 மார்ச் 30

அதேபோல், அரசு ஊழியர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளில், வீடுகள் சென்னை தலைநகரத்தைத் தவிர, மற்ற மாவட்டங்களில் கிட்டத்தட்ட 3,000 காலியாக இருக்கின்றன. அதனால் மடத்துக்குளத்தில் தேவை இருப்பின், ஆய்வு செய்து, அரசு அலுவலர்கள் அதிகமாக வாடகை வீடுகளில் குடியிருக்கிறார்கள் என்று தெரிய வந்தால், அதன்படி, தேவைப்பட்டால் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று கூறினார்கள். மடத்துக்குளம் புதிய வட்டமாகும். அங்கு பணியாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கூறினேன். மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலே, 5 பேரூராட்சிகள் மட்டும் உள்ளன. நகராட்சிகள் இல்லை. அந்தப் பேரூராட்சிப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட பசுமை வீடுகள் மற்றும் தொகுப்பு வீடுகள் கிடைக்கப் பெறுவது இல்லை. ஆகவே, அப்பகுதிகளில் இருக்கக்கூடிய ஏழை, எளிய மக்களுக்கு வீட்டு வசதித் துறையின் மூலமாகவோ அல்லது குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவோ, ஏதாவது ஒரு வகையிலோ வீடுகள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் குறிப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு ஏதாவது ஒரு வகையிலே வீடுகள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்று கேட்டார். இப்போது குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுமா என்று கேட்கிறார். குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, குடிசையில் வசிக்கின்ற ஏழை, எளியோர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. முதலில் மாநகராட்சிகளில் (Corporations), மத்திய அரசு 50 சதவிகிதம், மாநில அரசு 50 சதவிகிதம் என்ற அளவில், ஜவஹர்லால் நேரு திட்டம், ராஜீவ் வீட்டு வசதித் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. 13–வது நிதிக் கமிஷன் மூலமாக பேரூராட்சிகளில் குடிசைகளுக்குப் பதிலாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இப்போது, 14–வது நிதிக் கமிஷனின் நிதி பெறப்பட்ட பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இந்தப் பேரூராட்சிகளில் குடிசைகள் அதிகமாக இருப்பின், ஆய்வு செய்து, நிச்சயமாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

*முற்பகல் 10–15*

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவிடைமருதூர், திருப்புவனம், ஆடுதுறை ஆகிய 3 பேரூராட்சிகள் நகராட்சிக்கு இணையாக உள்ள அமைப்புகளாகும். முன்னதாக உரையாற்றிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல பேரூராட்சிகளுக்குத் THAI திட்டத்திலோ IAY திட்டத்திலோ வீடு கட்டிக்கொள்ளக்கூடிய வசதியில்லை. ஆனால், ஆடுதுறையில் நெல் ஆராய்ச்சி மையமும், திருப்புவனத்தில் பட்டு கூட்டுறவுச் சங்கமும் உள்ளன. அரசு ஊழியர்கள் நிரம்பி இருக்கிற மூன்று பேரூராட்சிகள் ஒரு நகராட்சியைப்போல் சுற்றமைப்புடைய பகுதியாக இருக்கிற காரணத்தால், அவற்றை நகராட்சிகளாகவே கருதி, ஒட்டுமொத்தமாக 3 பேரூராட்சிகளில் இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள் குறைந்த வாடகையில் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை அமைத்துக்கொள்ள, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2015 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அந்த 3 பேரூராட்சிகளுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் அமைத்துத் தரப்பட வேண்டுமென்று கேட்டார்கள். அம்மூன்றுமே பேரூராட்சிகள். ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. கும்பகோணத்தில் அரசு அலுவலர் குடியிருப்புகள் நிறைய இருக்கின்றன. கும்பகோணத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில்தான் அவர் சொல்கின்ற திருவிடைமருதூர், திருப்புவனம் போன்ற பேரூராட்சிகள் இருக்கின்றன. அங்கு பணிபுரிகின்ற அரசு ஊழியர்கள் கும்பகோணத்திலிருந்துதான் திருவிடைமருதூர், திருப்புவனத்திற்குச் செல்கிறார்கள். கோட்டாட்சியர் தலைமையிடம், மாவட்ட ஆட்சியர் தலைமையிடத்தில்தான் இதுவரைக்கும் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது பேரூராட்சி. அதனால் இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதியிலே 30 ஆண்டுகளுக்கு முன்பாக குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியத்தால் வீடுகள் கட்டப்பட்டன. சுமார் 16 ஏக்கர் நிலம் 30 ஆண்டு காலமாக கிடப்பிலே இருக்கிறது. சமீபத்தில்தான் தருமபுரியிலே 30 ஆண்டுகளுக்குப் பிறகு புதியதாக வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, ஒரு வார காலம் முன்பாக வீடுகள் கட்டப்படுகின்றன. அரூரிலே வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம், கல்லூரி இப்படி அரூர் நகரமே வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில், நமது நிலம் சுமார் 16 ஏக்கர் காலியாக இருக்கிறது. அங்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடு கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?



2015 மார்ச் 30]

அதேபோல, குடிசை மாற்று வாரியத்திலே வீடுகள் பெற்றவர்களுக்குப் பெயர் மாற்றம் செய்வதற்காக ஏற்கெனவே சென்ற ஆண்டு, ஓராண்டுகாலத்திற்குள் பெயர் மாற்றம் செய்யப்படுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுநாள்வரை சுமார் 50,000 மக்களுக்கு அந்தப் பிரச்சினை தீராமலேயே இருக்கிறது. ஆகவே, ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி பெயர் மாற்றம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு காலக்கெடுவை அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக தருமபுரியில் வீடு கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்கின்றார். திருவிடைமருதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மடத்துக்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன். மாவட்ட ஆட்சியர் தலைமையிடம், கோட்டாட்சியர் தலைமையிடத்தில்தான் வீட்டு வசதி வாரியம் மூலமாக அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அதனால் கோட்டாட்சியர் அலுவலகம் அரூரில் இருப்பதால், அரசு ஊழியர்கள் அதிகமாக இருக்கின்றார்களா என்பதை ஆய்வு செய்து, தேவைப்படின் நிச்சயமாக அங்கே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

அடுத்தது, குடிசை மாற்று வாரியத்தில் sale deed கொடுக்கப்படவில்லை. ஒரு தேதியை நிர்ணயித்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. வாங்கியவர்கள் விற்றுவிட்டுப் போய்விடுகின்றார்கள். அதிலே வாரிசுப் போட்டி மற்றும் பல சிக்கல்களினால் தாமதமாகின்றது. அதை ஒரே நேரத்தில்—one time ஆக கொடுக்க வேண்டுமென்பதற்காக இப்பொழுது ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் விரைந்து கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை குடிசை மாற்று வாரியம் செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வி.எஸ். விஜய், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**78—**

**வட்டச் சாலை**

*51311—**டாக்டர் வி.எஸ். விஜய்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் தொகுதி, வேலூரில் வட்டச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாநகரில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேலூர் மாநகரத்திற்கு வட்டச் சாலைப் பகுதி–1 அமைக்க நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

**டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் வாழவைத்துக் கொண்டிருக்கின்ற வாழும் மனித தெய்வம், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் ஒரே வாரிசு, தமிழினத்தின் ஒரே தலைவி, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றியது மட்டுமல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தன்னுடைய இயக்கத்தின் தேர்தலைக்கூட அமைதியாக நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன்.



2015 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேலூர் மாநகரம் கல்வி, சுகாதாரம் மற்றும் ஆன்மிகத்திலே ஒரு சிறந்த நகரமாக இருந்து கொண்டிருக்கின்றது. அதனால், மாவட்டத்திலிருந்து மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களிலிருந்தும் வருகின்ற மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே ஒரு வட்டச் சாலை அமைக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். அந்த வட்டச் சாலை அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளை இன்னும் துரிதப்படுத்தி, இந்த ஆண்டே நிறைவு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் இந்த ஆண்டே திறப்பதற்கு வழிவகை செய்யும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாநகரத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, வேலூரில் வட்டச் சாலை அமைப்பதாக மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிப்புச் செய்ததன் தொடர்ச்சியாக, ஆலோசனை குழுமம்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. வட்டச் சாலைகள் பகுதி–1, பகுதி–2 மற்றும் பகுதி–3 ஆக எடுத்துக்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. வேலூர் வட்டச் சாலை பகுதி–1, கடலூர்–சித்தூர் சாலை கிலோ மீட்டர் 198/6–ல் கீழ்புத்தூரில் தொடங்கி, கிருஷ்ணகிரி–இராணிப்பேட்டை தேசிய நெடுஞ்சாலை எண் 46–ல் கிலோ மீட்டர் 128/4–ல் அரம்பாக்கத்தில் முடியும் வகையில் அமைந்துள்ளது. தற்போது 10 கிராமங்களில் இதற்கான நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேலூர் வட்டச் சாலை பகுதி–2 மற்றும் பகுதி 3–க்கான நேர்ப்பாடு ஆய்வில் உள்ளது. ஆய்வுப் பணிகள் இறுதி செய்யப்பட்டவுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 மார்ச் 30

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனைத்து வகையிலும் விரைந்து செயல்பட்டு, சுற்றுச் சாலை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வி.எஸ். விஜய் அவர்கள்.

**டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது வேலூர் மையப் பகுதியில் C.M.C. மருத்துவமனைக்கு அருகிலே ஒரு மேம்பாலமும், கிருஷ்ணா திரையரங்கம் அருகிலே ஒரு இரயில்வே மேம்பாலமும் கட்டுவதாக மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதியளித்தார்கள். அவற்றுக்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த இரண்டு பணிகளையும் துரிதமாக முடித்து, இந்த ஆண்டே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறந்து வைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் C.M.C. மருத்துவமனை அருகில் மேம்பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பாலம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால், மைய அரசின் அனுமதி பெறப்பட வேண்டியிருக்கிறது. மைய அரசுக்கு அனுமதி கேட்டு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அனுமதி கிடைத்தவுடன் வேலூர் C.M.C. மருத்துவமனை அருகில் மேம்பாலம் கட்டுவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.



2015 மார்ச் 30]

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை வட்டப் பாதைத் திட்டம் பாதியில் நின்றுகொண்டிருக்கின்றது. இதற்கு முன்னால் இந்த அவையிலே இதே கேள்வியை எழுப்பியபோது, அங்கே நில எடுப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக நமது மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்போது 20 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்து அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இதற்கான கடிதத்தை நான் ஏற்கெனவே மரியாதைக்குரிய நமது முன்னாள் முதல்வர் அம்மா அவர்களிடமும், இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் கொடுத்திருக்கின்றேன். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் பல முறை கேட்டிருக்கின்றேன். தற்போது 8,000 கோடி ரூபாய் அளவுக்கு நெடுஞ்சாலைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள். எனவே, இந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து, இந்த நிதியாண்டிலேயே இப்பணி எடுத்துக்கொள்ளப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டுக்கோட்டையிலே புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அரசின் நிதிநிலைக்கு ஏற்ப ஒவ்வோர் ஆண்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

*முற்பகல் 10–25*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள இராமேஸ்வரம் நகரத்திற்கு வெளியூர்களிலிருந்து சுற்றுலாப் பயணிகளும்,

[2015 மார்ச் 30

இராமநாதசுவாமி கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்களும் வருவதால் போக்குவரத்து மிகுதியாக இருக்கக்கூடிய சூழல் இருக்கிறது. மேலும், இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்களை ஏற்றிச் செல்லக்கூடிய சரக்கு வண்டிகள்கூட இராமேஸ்வரம் நகரத்திற்குள்ளே வந்துதான் செல்லக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. இதன்காரணமாக மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடிய ஒரு சூழலிலே, நேரடியாக இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கக்கூடிய வகையில், வட்டச் சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இராமேஸ்வரம் பகுதியிலே போக்குவரத்து நெரிசல் இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி, படிப்படியாக எங்கெங்கெல்லாம் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றதோ, அந்தப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும், நிதிநிலைக்கேற்ப புறவழிச் சாலைகள் அமைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போரூர் மேம்பாலம் கட்டும் பணி குறித்து தொடர்ச்சியாக நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அந்த மேம்பாலம் கட்டப்படுவது தொடர்பான பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். இருந்தாலும், அண்ணா தி.மு.க. கட்சியினர் உட்பட அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் ‘மேம்பாலம் கட்டும் பிரச்சினை தீர்ந்தது என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்னீர்கள்.



2015 மார்ச் 30]

ஆனால், பிரச்சினை இன்னும் தீரவில்லையே’ என்று கேட்கிறார்கள். அந்தப் பகுதி உண்மையிலேயே போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதி. காலை மற்றும் மாலை நேரங்களில் இலட்சக்கணக்கான வாகனங்கள் அந்தப் பகுதியில் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, போரூர் மேம்பாலம் எந்தக் காலகட்டத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இராமாவரத்திற்கு ஒரு மேம்பாலமும், நொளம்பூருக்கு ஒரு மேம்பாலமும் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். எனவே, இந்த இரண்டு மேம்பாலங்கள் கட்டுவதற்கான ஆய்வுப் பணிகளையும் மேற்கொண்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போரூர் மேம்பாலம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். போரூர் மேம்பாலம் கட்டும் பணிக்காக டெண்டர் விடப்பட்டு தற்போது CoT-னுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதாவது அந்த மேம்பாலம் கட்டுவதற்கான ஒப்பந்தம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட—above, அதிக அளவிலே மதிப்பை போட்டிருந்த காரணத்தால், அது அரசின் பரிசீலினையில் இருந்து கொண்டிருக்கிறது. ஒப்பந்த மதிப்பு இறுதிக் கட்டத்திற்கு வந்த பிறகு, ஒப்பந்ததாரர் முடிவு செய்யப்பட்டு, போரூர் மேம்பாலம் கட்டும் பணிகள் தொடங்கப்படும் எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கடந்த

[2015 மார்ச் 30

சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒரு வினாவை நான் எழுப்பியிருந்தேன். திண்டுக்கல்லிலிருந்து குமுளி வரை நகர்ப் பகுதியில் இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலைக்குச் சொந்தமான சாலைகளை அரசே எடுத்து, அந்தப் பணியைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருந்தேன். இரண்டு மாத காலத்திற்குள் அந்தப் பணிக்கு டெண்டர் விடப்பட்டு, அந்த வேலைகள் நடைமுறைக்கு வருகிறது என்ற செய்தியைக் கேட்டவுடன், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உசிலம்பட்டி–ஆண்டிப்பட்டி–போடி பை–பாஸ் சாலை அமைக்க வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாக கோரிக்கை இருந்து வருகிறது. போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால் அந்த பை–பாஸ் சாலையை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி–போடிநாயக்கனூர்–தேனி ஆகிய இடங்களில் புறவழிச் சாலை அமைக்கின்ற பணி மைய அரசின் 2014–2015 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, நில எடுப்புப் பணிகளுக்கான கருத்துரு மத்திய அரசால் கேட்கப்பட்டுள்ளது. அது கிடைக்கப்பெற்றவுடன், அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி–திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் பணி கடந்த 2010 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டு 50 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டன. இன்றைக்கு அந்தப் பணிகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளன. அதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆட்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கடந்த



2015 மார்ச் 30]

நான்கு ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து பல முறை இந்த அவையிலே மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேள்வி கேட்கிறபோது, உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்று வரையிலே அந்தப் பணிகள் அதே நிலையில்தான் இருக்கின்றன. ஆகவே, அந்தச் சாலைப் பணிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தக்க விளக்கங்களைப் பெற்றுத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம்–கிருஷ்ணகிரி சாலைப் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தப் பணியை எடுத்த ஒப்பந்ததாரர் பாதியிலே நிறுத்தப்பட்டுவிட்டார். அதுதான் காரணம். கடந்த மத்திய அமைச்சரவையில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அப்போது, நல்ல ஒப்பந்ததாரருக்கு டெண்டர் விடப்பட்டிருந்தால் அந்தப் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கும். ஆனால், ஒப்பந்தம் எடுத்தவர் சரியான முறையில் பணிகளைச் செய்யாத காரணத்தினால், அந்தப் பணிகள் நிலுவையில் உள்ளன. எனவே, இதுகுறித்து மைய அரசுக்கு பல நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அந்தப் பணிகளை விரைவாகத் துவங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்கத்தாவுக்குச் செல்கின்ற வடக்கு மகா நெடுஞ்சாலை GNT தொடங்குகின்ற இடம் வியாசர்பாடி ஆகும். இரயில்வே அடிப்பாலத்தால் அது ஒரு bottleneck போல்

இருக்கிறது, இரயில்வே மேம்பாலப் பணிகள் முடியாத காரணத்தினால், போக்குவரத்து நெருக்கடி தொடர்கிறது. அந்த 'Y' வடிவப் பாலத்தில் ஒரு புறம் முடிந்துவிட்டது; தண்டவாளத்திற்குமேல் இணைப்பு மட்டுமே பாக்கி இருக்கிறது. அப்பணியும் கடந்த 1 வருட காலமாக நிலுவையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்பணிகளை உடனடியாக முடித்துத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், மூலக்கடை பாலம், அதே சாலையில் இருக்கிற அடுத்த bottleneck. அப்பணியும் விரைந்து முடிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வியாசர்பாடி பாலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுக் கேட்டார்கள். இப்பாலம் மூன்று பிரிவுகளாகக் கட்டப்பட்டு வருகின்றன. அதில், இரண்டு பிரிவுகளின் பணிகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளன. இரயில்வே பாலப் பணி முடிவடைந்தவுடன், ஒருபுறத்தில் வியாசர்பாடி, பேசின் பிரிட்ஜ் பகுதிகளில் போக்குவரத்திற்காகத் திறந்துவிடப்படும். மற்றொரு பகுதியில் கழிவுநீர்க் குழாய் மாற்றியமைக்கப்பட்டு, தற்போது பாலத்தின் தூண்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், மூலக்கடை சந்திப்பு மேம்பாலப் பணிகள் தற்போது 80 சதவிகிதம் நிறைவு பெற்றிருக்கின்றன. வரும் ஜுன் மாதம் 2015—க்குள் அப்பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு, போக்குவரத்துப் பயன்பாட்டிற்குத் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.





**79—**

### தென்னை சார்ந்த தொழிற்சாலை

***20110—திரு. செ. அருண் பாண்டியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதியில் தென்னை சார்ந்த தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தென்னை சார்ந்த தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களேயானால், அவர்களுக்குத் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 25 விழுக்காடு மானியம், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 25 விழுக்காடு மானியம், தொழில்ரீதியாக பின்தங்கிய பகுதிகளுக்கான 25 விழுக்காடு முதலீட்டு மானியம், 20 விழுக்காடு குறைந்த அழுத்த மின் மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம், மின்னாக்கி மானியம், கயிறு வாரியத்தின்மூலம் ரிமோட் (REMOT) திட்டத்தின்கீழ் 40 விழுக்காடு மானியம் என 7 வகையான மானியங்கள் அரசால் வழங்கப்படுகின்றன. தொழில்முனைவோர்கள் தஞ்சாவூர் மாவட்டத் தொழில் மையத்தை அணுகி, மேற்கண்ட மானியங்களைப் பெற்று பயன் பெறலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

[2015 மார்ச் 30

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதியில், தனியார் உதவியுடன் தென்னை சார்ந்த தொழில் முகமை* (Industrial Cluster) *அமைக்க அரசு ஆவன செய்யும் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், அருப்புக்கோட்டையிலிருந்து புலம்பெயர்ந்த ஏழை நெசவாளப் பெருமக்கள் விருதுநகர் ஒன்றியம், சங்கரலிங்காபுரத்தில், பட்டாசுத் தொழிலின் முக்கியமான, ஆபத்தான அங்கமான கருந்திரி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்கள். சுமார் 1,200 குடும்பங்களின் வாழ்வாதாரமாக உள்ள கருந்திரி உற்பத்தியைப் பாதுகாப்பான முறையில், அரசின் வழிகாட்டுதல்களோடு நடத்திட, இந்தத் தொழிலாளர்களுக்காக தொழிற் கூட்டுறவுச் சங்கம்* (Industrial Co-operative Society) *அமைத்திட மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி பகுதியில் கருந்திரி உற்பத்தித் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அத்தொழிலுக்கென்று, தனியாக கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். ஏழுக்கு மேற்பட்ட நபர்கள் முன்வருவார்களேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதல்களோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்நல்லரசு அந்தச் சங்கத்தை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*



2015 மார்ச் 30]

**80—**

## அங்கன்வாடி மையம்

***51659—திருமதி செல்வி ராமஜெயம்:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புவனகிரி தொகுதி, மந்தாரக்குப்பம், பாலாஜி நகரிலுள்ள குறு அங்கன்வாடி மையத்தை முதன்மை அங்கன்வாடி மையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, மந்தாரக்குப்பம், பாலாஜி நகரில் புதிய குடியேற்றம் காரணமாக மக்கள்தொகை அதிகரித்து வருவதால், அங்கு செயல்பட்டுவரும் குறு அங்கன்வாடி மைய எண் 004–ஐ முதன்மை அங்கன்வாடி மையமாக மாற்றுவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

**திருமதி செல்வி ராமஜெயம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத்தின் விளைநிலம், வெற்றித் திருமகள், கருணையின் பிறப்பிடம், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவி, எங்களின் இதய தெய்வம், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய வினாவை முன்வைக்கிறேன்.*

*புவனகிரி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் 001–ன் நிருவாகத்திற்காக சுரங்கப் பகுதியின் அருகிலிருந்த குடியிருப்புகளை அப்புறப்படுத்தியபோது,*

[2015 மார்ச் 30

அங்குக் குடியிருந்தவர்கள் கங்கைகொண்டான் பேரூராட்சி, பாலாஜி நகருக்கு அருகிலுள்ள கே.வி.ஆர். நகர், காந்தி வீதி, துரைராஜ் நகர் போன்ற பகுதிகளுக்குக் குடிபெயர்ந்துள்ளதால், அப்பகுதியில் தற்போது 385 குடும்பங்களில், 1,635 பேர் வசித்து வருகின்றனர். ஆனால், கங்கைகொண்டான் பேரூராட்சி, பாலாஜி நகரில் அமைந்துள்ள குறு அங்கன்வாடி மையத்திற்கு 15 குழந்தைகள் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே, புதிய குடியேற்றம் காரணமாக மக்கள்தொகை அதிகரித்து வருவதால், அப்பகுதிவாழ் மக்களின் நலன் கருதி, அங்கு செயல்பட்டுவரும் குறு அங்கன்வாடியைத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வரும் என்று கூறிய அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புவனகிரி சட்டமன்றத் தொகுதியில் 222 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், 121 மையங்கள் அரசு சொந்தக் கட்டடங்களிலும், மீதம் உள்ள 51 மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட 171 கட்டடங்கள் எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வருடத்திற்கு நான்கு கட்டடங்கள் வீதம் கட்டிக் கொடுத்து, இதுவரை 16 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. எனவே, வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் மீதி 51 மையங்களுக்கு அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசும் முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மந்தாரக்குப்பம், பாலாஜி நகரிலுள்ள அங்கன்வாடி மையம் 10–12–2010-ல் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் பகுதி மக்கள்தொகை 350 பேர்தான். ஆகவேதான், குறு மையம் அங்கே தொடங்கப்பட்டது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, புதிய



2015 மார்ச் 30]

குடியேற்றம் காரணமாக 1,635 பேர் அங்கே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், ஏற்கெனவே சொல்லப்பட்ட பதிலில், புதியதாக அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்துவருகிறது என்பதைச் சொன்னேன்.

புவனகிரி தொகுதியில் 222 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. இவற்றிலே, கம்மாவரம் வட்டத்தில் மட்டும் 150 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 138 முதன்மை மையங்களும், 12 குறு மையங்களும் அடங்கும். அரசுக் கட்டடங்களில் இயங்கக் கூடியவை. மொத்தம் 112 அங்கன்வாடி மையங்கள், கம்மாவரம் வட்டத்தில், அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 171 அங்கன்வாடி மையங்கள், புவனகிரி வட்டாரத்தில் அமைந்துள்ளன. மீதி இருக்கக்கூடிய மையங்களில், அரசுக் கட்டடங்களில் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில் இயங்கக் கூடிய அனைத்து மையங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டி, அவற்றில் அங்கன்வாடி மையக் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விருப்பம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இடங்களைத் தேர்வு செய்து, விரைவில் அரசுக் கட்டடங்களுக்கு அங்கன்வாடி மையக் குழந்தைகளை மாற்றி, கல்வி பயில வைப்பதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அங்கன்வாடி மையங்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என்னுடைய கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[2015 மார்ச் 30

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதி, திருவட்டாற்றில் இருக்கும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. அது தற்போது இட வசதி குறைந்த வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. திருவட்டாறு வட்டாரத்தில் மொத்தம் 147 குழந்தைகள் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அங்கே அனைத்துப் பணியாளர்களும் ஒரே நேரத்தில் ஒன்றுகூடி அவசரப் பணிகளைச் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. திருவட்டாற்றில்* S.S.A. *கல்வி அலுவலகம் செயல்படும் வளாகத்தில் சுமார் 2 ஏக்கர் அரசு நிலம் உள்ளது. இந்த நிலத்தில் திருவட்டாறு குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு ஏக்கர் நிலம் இருப்பதாகச் சொன்னார்கள். அது எந்தப் பகுதியில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தேர்வு செய்து, அதற்குரிய சர்வே எண்ணை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும். பொத்தாம் பொதுவாக அங்கே 2 ஏக்கர் நிலமிருக்கிறது, இங்கே 2 ஏக்கர் நிலமிருக்கிறது என்று—ஏற்கெனவே இலவசமாக நிலம் தருகிறேன் என்று சொன்னவர்கள், இந்த அங்கன்வாடி மையத்திற்கும் இலவசமாக அங்கே 2 ஏக்கர் நிலம், இங்கே 2 ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால் எப்படி நிலத்தைத் தேர்வு செய்ய முடியும்? ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே இடமிருக்கிறது என்று சர்வே எண்ணோடு சொல்வார்களேயானால் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தங்கள் மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2015 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**81—**

### மகளிர் கலைக் கல்லூரி

***47697—திரு. கு. லிங்கமுத்து:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குடியாத்தம் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலூர் மாவட்டம், குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியில் புதிதாக பெண்களுக்கென கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படுமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். ஏற்கெனவே குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியில், 50 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட அரசு திருமகள் ஆலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. கடந்த 28–3–2015 அன்று 50–வது ஆண்டு பொன்விழா அங்கே கொண்டாடப்பட்டது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட அந்த விழாவில் கலந்து கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன். அந்தக் கல்லூரியில் 9 முதுநிலை பட்ட மேற்படிப்பு–*P.G. Courses-*செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 12 இளநிலை பட்டப் படிப்பும் அங்கே இருக்கிறது. அங்கே மொத்தம் 3,110 மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். அதிலேகூட 1,043 மாணவியர்தான் அதிகமாக படித்து வருகிறார்கள்.*

[2015 மார்ச் 30

அதோடுமட்டுமில்லாமல், கடந்த 4 ஆண்டுகளில் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 19 புதிய பாடங்களையும் அங்கே வழங்கியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக மகளிருக்கென தனியாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். கல்லூரி துவக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக, தனியாக இருந்த பேரணாம்பட்டு தொகுதி குடியாத்தம் தொகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளது. குடியாத்தம் தொகுதியிலிருந்த அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, கீழ்வைத்திணான் குப்பம் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது குடியாத்தம் தொகுதியில் ஓர் அரசுக் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ, I.T.I. என்று எதுவும் கிடையாது. எனவே, குடியாத்தம் தொகுதியில் பெண்களுக்கென்று தனியாக ஒரு கல்லூரியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் 76 கல்லூரிகள் இருக்கின்றன. நிதியுதவி பெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 139 Aided கல்லூரிகள் இருக்கின்றன. Self Financed கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 448 கல்லூரிகள் இருக்கின்றன. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 37 கல்லூரிகள் இருக்கின்றன. ஆக மொத்தம், தமிழகத்திலே 700 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசுக் கல்லூரிகள் மூன்றும், அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள் ஏழும், சுயநிதி கல்லூரிகள் பதினெட்டும், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் இரண்டும், ஆக மொத்தம்



2015 மார்ச் 30]

30 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வேலூர் மாவட்டத்தில், வாலாஜா, வேலூர் மற்றும் குடியாத்தம் பகுதிகளில் அரசுக் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10–45

உறுப்புக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதல்வராக பொறுப்பேற்ற பின்பு, திருப்பத்தூரிலே ஒரு கல்லூரியும், அரக்கோணத்திலே ஒரு கல்லூரியும் தொடங்கப்பட்டு, அங்கே இடங்களெல்லாம் தேர்வு செய்யப்பட்டு, கட்டடங்களுக்கான நிதியும் ஒதுக்கப்பட்டு, இப்போது கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, திறக்கும் தருவாயில் உள்ளன. அதிலேயும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 50 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியில் இருந்தது. தற்போது தொகுதி மறுசீரமைப்பின் காரணமாக அந்தக் கல்லூரி கீழ்வைத்திணான் குப்பம் சட்டமன்றத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து, கோரிக்கை ஒன்றை வைத்திருக்கிறார்கள்.

சட்டமன்றத் தொகுதியின் அடிப்படையில் கல்லூரி தொடங்கப்படுவதில்லை. பொதுவாக எந்த இடத்தில் மாணவ, மாணவிகளுக்குக் கல்லூரி வசதிகள் இல்லை; போக்குவரத்து வசதிகள் இல்லை; எந்தப் பகுதி தொலைதூரமாக இருக்கின்றது; ஏழையெளிய மாணவ, மாணவிகள் எந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள்; பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் மக்கள் எங்கு அதிகமாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து, அந்தப் பகுதிகளிலெல்லாம் கல்லூரிகளைத் தொடங்க மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், கடந்த நான்கு ஆண்டுகளில், இதுவரை இல்லாத அளவிற்கு, 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு நிதியை ஒதுக்கீடு செய்து, வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப அங்கே மகளிர் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு ஆராய்ந்து முடிவு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் பீடித் தொழிலாளர்கள், தோல் பதனிடும் தொழிலாளர்கள், தோல் பொருட்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களில் பணிபுரிவோர் அதிகமாக இருக்கின்றனர். இப்படிப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் அந்தப் பகுதியில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். சமுதாயத்திலும், பொருளாதார நிலைமையிலும், கீழ்நிலையிலுள்ள சிறுபான்மை முஸ்லிம்கள், தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த பெண் பிள்ளைகள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த குடும்பங்களில் வாழ்கின்ற பெண் பிள்ளைகள் ஆகியோர் அதிகமாக இருக்கின்ற பகுதி. நல்ல மதிப்பெண்கள் பெற்றும்கூட, மேற்படிப்பு, கல்லூரிக் கல்வி பெறமுடியாத சூழ்நிலையில் அவர்கள் உள்ளனர். கல்லூரிக் கல்வியைப் பெற வேண்டுமென்றால், 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குடியாத்தம் ஆலைக் கல்லூரிக்குப் போக வேண்டும். அப்படியில்லையென்றால், 50 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வேலூருக்குச் சென்று படிக்க வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற குடும்பங்களைச் சார்ந்த பெண் பிள்ளைகள் கல்லூரிக் கல்வியைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கின்றது. கல்லூரியை அமைப்பதற்குத் தேவையான அரசு நிலங்களும் அந்தப் பகுதியில் நிறைய இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. லிங்கமுத்து, நீங்கள் துணைக் கேள்வியாகக் கேளுங்கள். நீங்கள் ஏதோ மானியக் கோரிக்கைமீது பேசுவது போன்று பேசிக் கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** எனவே, அங்கே ஒரு பெண்கள் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய ஒரே தலைவி மாண்புமிகு மக்களின் முதல்வர்



இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் பள்ளிப் படிப்பை முடித்து உடனடியாக அனைவரும் உயர் கல்வியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், இந்தியாவிலேயே இதுவரை இல்லாத அளவிற்குப் பெண் கல்வியை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, பட்டயப் படிப்பு படித்திருந்தால் 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையும், பட்டப் படிப்பு படித்திருந்தால் 50 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையும் வழங்குகிற ஒரேயொரு மாநிலம், மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற தமிழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், பெண் கல்வியை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, மாண்புமிகு மக்களின் முதல்வர் பல்வேறு வகையிலே நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளில் பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட 38 கல்லூரிகளில், பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு பெண்கள் கல்லூரியையும், தருமபுரி மாவட்டத்தில் ஒரு பெண்கள் கல்லூரியையும் ஆரம்பித்த பெருமை மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களையே சாரும். அந்த வகையிலே, தமிழகத்தில் பெண் கல்வி படிப்படியாக முன்னேறி வருகிறது. அந்த வகையிலே, உயர் கல்வியிலே பெண்கள், ஆண்களின் சதவிகிதம் எவ்வளவு என்று பார்த்தால், 2011 ஆம் ஆண்டு, பெண்கள் 47 சதவிகிதமாக இருந்தது; ஆண்கள் 53 சதவிகிதமாக இருந்தது. அதாவது, உயர் கல்வியிலே சேரும் பெண்களுடைய எண்ணிக்கை ஆண்களைவிட 6 சதவிகிதம் குறைவாக இருந்தது. ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிற நல்ல பல நடவடிக்கைகளின் காரணமாக, 2014 ஆம் ஆண்டு, பெண்கள் 55.77 சதவிகிதமும், ஆண்கள் 44.23 சதவிகிதமும் உயர் கல்வி பெற்று வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, உயர் கல்வியில் பெண்களைவிட ஆண்கள் 6 சதவிகிதம் அதிகமாக இருந்த நிலை மாறி, தற்போது ஆண்களைவிட பெண்களுடைய சதவிகிதம் 11.54 அளவிற்கு அதிகமாக உயர்ந்திருக்கிற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிற பெருமை மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களைச் சாரும். அந்த வகையில், பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிற தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அந்த வகையில்,

எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தப் பகுதியில் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**82—**

**சொந்தக் கட்டடம்**

***36347—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியிலுள்ள வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

மதுரை வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின்கீழ் இயங்கிவரும் வாடிப்பட்டி பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்தில் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அதனை போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு மதுரை மாவட்ட ஆட்சியருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி நிலம் போக்குவரத்துத் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டவுடன், வாடிப்பட்டி பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழைச் சொல்லி, தமிழர்களைச் சொல்லி, எல்லாவற்றிற்கும் அரசியல் ஆதாயம் தேடும் அசுரர் குணம் கொண்டவர்கள் மத்தியில், தெய்வீக குணம் மிக்கவர் நம்முடைய அம்மா அவர்கள் மட்டுமே. மனிதன் செதுக்காவிட்டால் விக்கிரகம் எழுவதில்லை. பிரதிஷ்டை செய்யாவிட்டால் பிராணன் கிடைப்பதில்லை. அதற்குப் பூஜை செய்யாவிட்டால் போதிய சக்தி பெறுவதில்லை. அனைத்தும் மனித உணர்வின் வெளிப்பாடு. அதனால் மனிதன் மகான்களைக் கடவுளுக்கு ஒப்பாகப் பார்க்க வேண்டும் என்பதில் தவறேதும் இல்லை. அம்மா, நீங்கள் மனிதத் தன்மையில் கடவுள் தன்மை மிக்கவர். அம்மா, மனிதக் கடவுளாக நீங்கள் இருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கோயிலாகக் காண்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) கோயிலின் புனிதம் காப்பதும், கோயிலில் உள்ள கடவுளைத் தரிசிப்பதும் தொண்டனின் அன்றாட கடமை. அம்மா, இதுதான் அம்மா எங்கள் அன்றாடக் கடமை தாயே. அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டி இரயில் நிலையத்திற்கு அருகில் சர்வே எண் 271/7-ல் அரசு புறம்போக்கு நிலம் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அந்த இடத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அந்த இடத்தில் இந்த ஆண்டே சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் வரலாற்றில் இதுவரை

இல்லாத அளவிற்கு 7 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 6 பகுதி அலுவலகங்கள், ஒரு சோதனைச் சாவடி, 2 இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்கள், 14 ஓட்டுநர் தேர்வுத் தளம் என 32 பணிகளுக்கு ரூ.34 கோடியே 73 இலட்சம் நிதி ஒதுக்கிக் கொடுத்து, அந்த அலுவலகங்கள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டு, பல்வேறு அலுவலகங்களும் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை இல்லாத அளவிற்கு மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போக்குவரத்துத் துறையில் இயங்கக்கூடிய அனைத்து அலுவலகங்களும் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என்பதற்காக நிதி ஒதுக்கிக் கொடுத்து, படிப்படியாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் இயங்கக்கூடிய வாடிப்பட்டி பகுதி அலுவலகத்திற்கு, சர்வே எண் 277, உட்பிரிவு 7, 1 ஹெக்டேர் 25.5 ஏர் பரப்பளவு கொண்ட நிலம் அங்கு இருக்கிறது. அதில் துறைக்குத் தேவையான அளவு நிலம் ஒதுக்கீடு செய்து தருமாறு மாவட்ட ஆட்சியருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு, இன்னும் நில உரிமை மாற்றம் செய்து தரப்படவில்லை. நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு, துறைக்குக் கிடைக்கப்பெற்றவுடன் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் ஒன்றியம், வாவிடைமருதூர் உட்கடை, 15 பி. மேட்டுப்பட்டியில் அரசு போக்குவரத்துப் பணிமனை அமைக்க பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் கண்டறியப்பட்டு, அந்த இடத்தில் அரசுப் போக்குவரத்து பணிமனை அமைக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் பணிமனை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன்





பேசி, இந்த ஆண்டே அந்த இடத்தில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கும் பணிகளைத் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்த இடம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம். பொதுப் பணித் துறையிடமிருந்து அந்த இடத்தை போக்குவரத்துத் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டவுடன், போக்குவரத்துப் பணிமனை அமைக்கும் பணிகளை விரைவாகத் துவங்க போக்குவரத்துத் துறை சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டு, அலுவலகம் அமைப்பதற்கான நிலத்தை பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எனது தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்பொழுது அந்த அலுவலகம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் அமைப்பதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க அரசாணை எண் 867, நாள் 27–11–2014 அன்று

[2015 மார்ச் 30

வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான இடம் தேர்வு செய்யும் பணி நிறைவு பெற்றவுடன் விரைவாக உசிலம்பட்டி தொகுதியில், உசிலம்பட்டி போக்குவரத்துப் பகுதி அலுவலகம் திறப்பதற்கு துறை சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**83—**

## கால்நடை மருந்தகம்

**49928—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், காடாம்புலியூரிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென கேட்டிருக்கிறார். ஒரு கால்நடைக் கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால், அங்கு 5,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கிளை நிலையத்தில் 5,000 கால்நடைகள் இல்லாத காரணத்தினால், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த



2015 மார்ச் 30]

சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்.*

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணமே! ஈடில்லா வெற்றிகளின் இருப்பிடமே! எனக்கென ஏதுமில்லை, எல்லாமும் மக்களுக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஏழையரைத் தாங்கி நிற்கும், இறை தந்த கொடையாம் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். பின்தங்கிய மக்கள் அதிகம் உள்ள, தானே புயலால் பாதிக்கப்பட்ட தொகுதி நெய்வேலி ஆகும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எதிர்வருகின்ற காலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லி, காடாம்புலியூர் பகுதியில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடாம்புலியூர் கிராமத்திற்கு அருகிலுள்ள பத்திரக்கோட்டை மற்றும் மருங்கூர் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, வருங்காலத்தில் காடாம்புலியூரில் 5,000-க்கு மேலாக கால்நடைகள் உயரும்போது, இங்கே மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

[2015 மார்ச் 30

**84—**

## மருத்துவக் காப்பீடு அட்டை

*47683—**திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்களுக்குப் புதிய மருத்துவக் காப்பீடு அட்டை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் இரண்டாம் முறையாக ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதே 2005–2006 ஆம் ஆண்டு முதல் கைத்தறி நெசவாளர்களின் உடல் நலன்களைப் பேணிப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், நெசவாளர்கள் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தினை ICICI Lombard என்ற நிறுவனத்தின்மூலம் செயல்படுத்த ஆணையிட்டு, அதன் மூலமாக ஒரு நெசவாளர் குடும்பத்தில் உள்ள நான்கு நபர்கள், ஆண்டு ஒன்றிற்கு ரூ.15,000/– வரை மருத்துவ உதவி பெற்று வந்தனர். இத்திட்டம், 30–9–2014 வரை செயல்பாட்டில் இருந்தது. நெசவாளர்கள் நலனில் அக்கறை கொண்ட மக்கள் முதல்வர், மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்த நேரத்திலே முதலில் ஆரம்பித்து வைத்த காப்பீட்டுத் திட்டத்தினை வேறு எவரும் சிந்திக்காத வேளையிலே, அத்திட்டத்தை மேம்படுத்தும் வகையில், நெசவாளர்களுக்குக் கூடுதல் பயன் அளிக்கக்கூடிய வகையில், மத்திய அரசுடன் இணைந்து Rashtriya Swasthya Bima Yojana என்னும் நெசவாளர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினை United India Insurance நிறுவனத்தின்மூலம் 1–10–2014 ஆம் தேதி முதல் செயல்படுத்த உத்தரவிட்டார்கள். அதன்படி புதிய மருத்துவக் காப்பீட்டுத்



2015 மார்ச் 30]

திட்டத்திலே எந்தெந்த மருத்துவமனைகள் மூலமாக அவர்கள் சிகிச்சை பெற முடியும் என்ற சிறிய விவரம் கொண்ட Smart cards வழங்கப்பட்டுள்ளன. அதன்மூலமாக புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்திலே நெசவாளர்களுக்கு அதிகமான பயன்பாடுகள் கிடைக்ககூடிய வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பழைய திட்டத்தில் தமிழ்நாட்டில் மட்டுமே மருத்துவ சிகிச்சைகள் பெற முடியும் என்ற நிலை மாறி, புதிய திட்டத்தின் மூலமாக அகில இந்திய அளவில், அவர்கள் வைத்துள்ள அந்த Smart card மூலமாக எங்கு வேண்டுமானாலும் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்ற வகையிலும், குடும்பத்தில் ஐந்து நபர்கள் இருக்கக் கூடியவர்களுக்கு 37,500/– ரூபாய் வரை வருடத்திற்கு, உள் நோயாளியாகவும், புற நோயாளியாகவும் இருந்து, தனிப்பட்ட குடும்பத்திற்கு அவர்கள் மருத்துவச் சிகிச்சை பெறலாம் என்ற புதிய திட்டம் அமலுக்கு வந்து, Smart card–கள் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்குப் புதிய மருத்துவக் காப்பீடு அட்டை 2014 செப்டம்பரிலே முடிவடைந்து, அதற்குப் பின்னால் இதுவரையிலும் தமிழ்நாடு முழுவதும் 70 சதவிகிதம் நெசவாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அனைத்து நெசவாளர்களுக்கும் மருத்துவக் காப்பீடு அட்டை வழங்குவதை அரசு விரைவில் உறுதிப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். வழங்கப்பட்ட காப்பீடு அட்டையில் தொழில்நுட்பக் கோளாறுகளின் காரணமாக குடும்பத் தலைவர் படம் மட்டும் விழுகிறது. இதர விவரங்கள் அந்தக் கணினியில் விழாத காரணத்தினால், சில குடும்பங்கள் அந்த சிகிச்சையைப் பெற முடியவில்லை. உதாரணத்திற்கு, மதுரை அவனியாபுரம் பி.கே. கோபாலன் என்பவர் கண் ஆபரேஷனுக்காக புதூர் அருகே இருக்கக்கூடிய ஆனந்தா கண் மருத்துவமனைக்குச் செல்கிறார். அவருடைய படத்தைத் தவிர வேறு எந்த விவரமும் விழாத

[2015 மார்ச் 30

சூழ்நிலையில் மருத்துவ சிகிச்சை அளிக்க மருத்துவமனை மறுத்துவிட்டது. இதுபோன்ற குறைபாடுகளைக் களைவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கான இந்தப் புதிய திட்டத்தின் மூலமாக, தற்போது 1–10–2014 முதல் செயல்படுத்தப்பட்டு வரக்கூடிய இந்தப் புதிய நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தில் இதுவரை ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 10 கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு Smart Card எனப்படும் மின்னணு மருத்துவக் காப்பீடு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் ஒரு நெசவாளர் குடும்பத்தில் 5 உறுப்பினர்கள், 175 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் ஆண்டு ஒன்றிற்கு ரூ.37,500/– வரை உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளாக சிகிச்சை பெறலாம் என்ற வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 70 சதவிகிதம் மட்டுமே வழங்கப்பட்டதாகக் கூறியிருக்கின்றார்கள். அது உண்மைக்குப் புறம்பான செய்தி. தமிழகம் முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள், பெடல் தறி நெசவாளர்கள், குறிப்பாக நெசவாளர் குடும்பங்கள் இருக்கக்கூடிய 19 மாவட்டங்களிலே 100 சதவிகிதம் அவர்களின் புகைப்படம் எடுத்து இந்த Smart Card வழங்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இருப்பினும், ஆய்வு செய்யப்பட்டு எங்கெங்கெல்லாம் விடுபட்டிருக்கின்றதோ அங்கெல்லாம் கொடுக்க ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அவனியாபுரத்திலே உள்ள நெசவாளருக்குக் கண் நோய் சிகிச்சை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அங்கே உள்ள அதிகாரிகளிடம் தெரிவித்து அந்தக் குறிப்பிட்ட நெசவாளருக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் தொகை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, 37,500 ரூபாய் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே 30,000 ரூபாய் உள்நோயாளிகளுக்கும், 7,500 ரூபாய் வெளிநோயாளிகளுக்கும் என்று அனுமதிக்கப்படுகிறது. இன்றைய மருத்துவச் செலவினங்கள் கடுமையாக உயர்ந்து வரக்கூடிய சூழ்நிலையில் இதை ஒரு இலட்சம் ரூபாயாக அதிகரிக்க வேண்டுமென்று ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டோம். எனவே, அதை ஒரு இலட்சம் ரூபாயாக அதிகரிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, தற்போதைய திட்டத்தின்படி நோயாளிகளுக்கு வழங்கப்படும் தொகை மிகக் குறைவாக உள்ளது. உதாரணத்திற்கு, ஒருவருக்கு மூல நோய் ஆபரேஷன் என்று சொன்னால், அதற்கு ஆகக்கூடிய செலவு 60,000 ரூபாய் வரை உள்ளது. ஆனால், இப்போதைய திட்டத்தின்படி அதற்கு எவ்வளவு வழங்கப்படுகிறது என்று சொன்னால் 3,000 ரூபாய்தான் வழங்கப்படுகிறது. எனவே, ஏழை நெசவாளர்களுக்கு இந்த 60,000 ரூபாய் என்பது பெரிய தொகையாக இருக்கிறது. 3,000 ரூபாய் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, அவர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். எனவே, இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு இந்தத் தொகையை அதிகரிப்பதற்கும், இன்றைய மருத்துவச் செலவினங்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு ஒரு இலட்சம் ரூபாயாக அறிவிப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவை தலைவர்:** மாண்புமிகு மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்கள், நெசவாளர்களுக்குள்ள சிறப்பு மருத்துவக் காப்பீடுத் திட்டத்திலும் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ள விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திலும் அவர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்.

[2015 மார்ச் 30

*முற்பகல் 11–05*

மத்திய அரசோடு இணைந்து இருக்கக்கூடிய இந்தத் திட்டத்திலே பிரீமியம் தொகையாக ஒரு நெசவாளர் குடும்பத்திற்கு ரூ.179/– செலுத்தப்பட வேண்டும். இதிலே மத்திய அரசு ரூ.134.25–காசும், மாநில அரசு ரூ.44.75–காசும், இதுதவிர பயனாளிகளின் பங்காக, பதிவுக் கட்டணமாக ரூ.30/–ம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிலையிலே, அந்தப் பதிவுத் தொகை ரூ.30/–ம் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசே வழங்குகிறது. மாநில அரசு மொத்தம் ரூ.44.75 பைசாவுடன், பயனாளி செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணம் ரூ.30/–ம் சேர்த்து ரூ.74.75 பைசா செலுத்துகின்றது. இதன்மூலமாக மத்திய அரசுக்குச் சரிசமமாக இந்தத் தொகையினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செலுத்தி வருகின்றது.

மேலும், அதிகக் கட்டணம் உள்ள உயர் சிகிச்சைக்காக, அவர்களுக்குப் பொதுவாக உள்ள மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக சிகிச்சைப் பெற்று வருகின்றார்கள். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூ.37,500/–லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக அறிவிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது மத்திய அரசின் திட்டமாக இருக்கக்கூடிய நிலையிலே, இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று மத்திய அரசுடன் ஆலோசனை செய்து அவர்கள் உயர் சிகிச்சைப் பெறுவதற்கான சிறப்புத் திட்டங்களை அறிவிக்கக்கூடிய வகையில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**85—**

## சுற்றுலாத் தலம்

*__13088—திரு. மு. திராவிடமணி:__

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2015 மார்ச் 30]

(அ) நீலகிரி மாவட்டம், தேவாலா பேரூராட்சி, பொன்னூரிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டாரம், தேவாலா பேரூராட்சியில் உள்ள பொன்னூரில் அமைந்துள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையைச் சுற்றுலாத் தலமாக்கி அங்கு சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியில் ஒரு சின்ன திருத்தம். தேவாலா பேரூராட்சி இல்லை. தேவாலா ஒரு கிராமம் ஆகும். தேவாலா பேரூராட்சி என்று தவறுதலாகப் பதிவாகியுள்ளது. அதனை மாற்றி தேவாலா கிராமம் என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கூடலூர் மேற்குத் தொடர்ச்சி மலையின் இயற்கை எழில் சூழ்ந்த தமிழகத்தின் ஒரே catchment area–வாக அமைந்துள்ளது. தேவாலா தென்னிந்தியாவின் சிரபுஞ்சியாகவும் அமைந்துள்ளது. பொன்னூர் என்பது பெயரில் மட்டும் பொன்னூர் இல்லை. தங்கச் சுரங்கம் இருக்கும் இடம். இங்கு 200 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு அரசு தோட்டக்கலைப் பண்ணை அமைந்துள்ளது. இதில் பத்து ஏக்கரில் மட்டும்தான் நர்சரி வைத்துள்ளார்கள். மற்றுமொரு பத்து ஏக்கரில் வாசனைத் திரவியங்கள் பூங்கா அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று, அப்பணிகளும் அப்படியே நின்றுகொண்டுள்ளன.

[2015 மார்ச் 30

மேலும் உள்ள இடங்களை abandoned ஆக அப்படியே விட்டுவிட்டிருக்கிறார்கள். அதுவும் தரிசு நிலமாக உள்ளது. ஆகவே, மீதியுள்ள அந்த இடத்தில் அனைத்து வகை பூங்காக்களையும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இதன் நடுவே ஒரு ஆறும் வற்றாத ஜீவ நதியாக ஓடிக்கொண்டிருக்கின்றது. இதில் Boat house அமைத்து பல பொழுதுபோக்கு வசதிகளைச் செய்து குழந்தைகள் விளையாடும் இடமாக மாற்றி அமைத்தும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் கேள்விக்கு வாருங்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திற்கு அண்டை மாநிலமான கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் உள்ளவர்கள் இவ்வழியாகத்தான் வருகின்றார்கள். எனவே, இவ்விடத்தினைச் சுற்றுலாத் தலமாக அறிவித்தால் வருமானம் பெருகும். வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அவ்விடத்தினைச் சுற்றுலாத் தலமாக மாற்றித் தருவதற்கு முயற்சி எடுப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வனத் துறைக்குச் சொந்தமான 2,000 ஏக்கரில் ஜீன் பூங்காவும் அருகில் உள்ளது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுலாத் தலமாக அறிவிக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பொன்னூர் அரசு தோட்டக்கலைப் பண்ணை, தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பண்ணையில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் தேயிலை, மிளகு, சில்வர் ஓக், கிராம்பு மற்றும் ஜாதிக்காய் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, தேவையைப் பொறுத்து விவசாயிகளுக்கு நேரடியாக



2015 மார்ச் 30]

விநியோகம் செய்யப்படுகிறது. எனவே, இப்பண்ணையைச் சுற்றுலாத் தலமாக மாற்றி, சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பதற்கான திட்டம் தற்போது இல்லை என்று தோட்டக்கலைத் துறை ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2014–2015ஆம் நிதியாண்டில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 20 இலட்சம் ரூபாய் வண்ணத்துப் பூச்சி பூங்கா அமைக்க பணி தொடங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி செலவு செய்யப்பட்டதா? அப்படியென்றால் வண்ணத்துப் பூச்சி பூங்கா அமைத்தால் அது சுற்றுலாப் பயணிகள் பார்வைக்குத் திறந்துவிடப்படுமா? இவ்வளவு தகுதியிருந்தும் சுற்றுலாத் தலமாக அறிவிக்க ஏன் அரசு முன்வரக்கூடாது என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான இடம். தோட்டக்கலைத் துறை இயக்குநர் அவர்கள், அந்த இடம் நாற்றுப் பண்ணைக்காக தேவைப்படுகிறது, சுற்றுலாத் துறைக்குக் கொடுக்க முடியாது என்று பதில் அனுப்பியிருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்மீது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன் அவர்கள்.

**திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். இந்தியாவிலே

[2015 மார்ச் 30

இருக்கின்ற சுற்றுலாத் தலங்களில் சிறப்புமிக்க சுற்றுலாத் தலமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எனது தொகுதியான உதகையிலே அமைந்திருக்கின்ற அவலாஞ்சி, அப்பர் பவானி போன்ற இயற்கை எழில் சூழ்ந்த பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள எந்தவொரு குறிப்பிட்ட இடத்தையும் சுற்றுலாத் தலம் என அறிவிப்பது இல்லை. இருப்பினும் குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அந்த இடத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் மதிப்பீடுகள் பெறப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**86—**

## பள்ளியைத் தரம் உயர்த்துதல்

*42353—**திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டாத்தூர் அரசு ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2015 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டாத்தூரில் இயங்கிவரும் அரசு ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியினை, அப்பள்ளி அமைந்திருக்கும் பகுதியிலுள்ள ஆதி திராவிடர் மாணாக்கர் எண்ணிக்கை, திட்டத்தின் பயன்பாடு மற்றும் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் நல்லரசால், நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னரும் கலைகள் பயின்ற பண்பாட்டின் சிகரமே, இன்னலோ, இடுக்கணோ எந்நிலை எய்தினும், பொன்னகையின்றி புன்னகை பூக்கும் போயஸ் தோட்டத்து புரட்சித் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து வரியில்லாத பட்ஜெட்டை வாரி வழங்கி மக்களுக்காக நாளெல்லாம் உழைத்திடும் மாதர்குல மாணிக்கமே. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் சிறந்த மாநிலமாக்கிட எண்ணில்லா திட்டங்களைத் தீட்டி செயலாற்றும் எங்கள் குல தெய்வமே, மாண்புமிகு கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

முற்பகல் 11–15

துறையூர் தொகுதிக்குட்பட்ட முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டாத்தூர் சுமார் இரண்டாயிரம் மக்கள்தொகை கொண்ட ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதி. கோட்டாத்தூர் ஆதி

[2015 மார்ச் 30

திராவிட நல தொடக்கப் பள்ளியில் 24 மாணவர்களும், 39 மாணவியர்களும் கல்வி பயின்று வருகின்றனர். தற்போது அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தினால் மேலும் அதிக மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். பின்வரும் காலங்களில் அதனைப் பரிசீலனை செய்ய வேண்டுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் ஒன்றியம், பச்சைமலை, மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதியான செம்புளிச்சாம்பட்டி உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியில் 95 மாணவர்களும், 115 மாணவியர்களும் கல்வி பயின்று வருகின்றனர். செம்புளிச்சாம்பட்டி கிராமத்தைச் சுற்றி தாளூர், எருமைப்பட்டி, ஏரிக்காடு, கொண்டூர் மற்றும் போந்தை ஆகிய பகுதிகளிலுள்ள மாணவர்கள் மேல்நிலைக் கல்வி கற்க அவர்களுடைய நலன் கருதி, இந்த ஆண்டு அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த ஆண்டே அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டாத்தூரில் இயங்கிவரும் அரசு ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியானது 1928 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. தற்போது, 24 மாணவர்கள், 39 மாணவிகள். ஆக மொத்தம் 63 மாணவ, மாணவிகளுடன் இரண்டு இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் ஒரு தலைமை ஆசிரியர் ஆகியோருடன் இப்பள்ளி இயங்கி வருகிறது. கோட்டாத்தூரில் வசிக்கும் 4,532 மக்களில் 2,204 நபர்கள் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். கோட்டாத்தூர் தொடக்கப் பள்ளியிலிருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவில் கோட்டாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இருப்பினும், ஆதி திராவிடர் மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்



2015 மார்ச் 30]

தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இப்புனித அரசு, கோட்டாத்தூரில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான இட வசதி, திட்டத்தின் பயன்பாடு மற்றும் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டாத்தூரில் இயங்கிவரும் அரசு ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியினை ஆய்வு செய்து, வாய்ப்பு இருப்பின் நிதிநிலைமைக்கேற்ப அரசு ஆதி திராவிட நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இப்புனித அரசு, அடித்தட்டு மக்களின் விடிவெள்ளியாகத் திகழ்கின்ற அம்மா அவர்களால் 2014–2015 ஆம் ஆண்டில் இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ரூ.1,998.36 கோடியில் 80 சதவீதம் கல்விக்காக மட்டுமே செலவு செய்து வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பள்ளி பழங்குடியினர் படிக்கும் பள்ளியாக இருப்பதால், அதை ஆய்வு செய்து, வரும் நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டாத்தூர் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், செம்புளிச்சாம்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்திட ஆவன செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 மார்ச் 30

**87—**

## பறவைகள் சரணாலயம்

***34399—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தேரூர் குளம், தத்தையார் குளம், சுசீந்தை குளம் ஆகிய பகுதிகளில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திசை நோக்கி வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேரூர் குளம், தத்தையார் குளம் மற்றும் சுசீந்தை குளம் ஆகிய இடங்களில் குளங்களை உள்ளடக்கிய 484.77 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.1.61 கோடி செலவிலே வன உயிரின பாதுகாப்புச் சட்டம், 1972–ன்கீழ் சுசீந்திரம், தேரூர் மற்றும் மணக்குடி பாதுகாப்பு ஒதுக்கீடு பகுதி என அறிவிக்கை செய்யப்பட்டு, அரசு ஆணை எண் 41 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 19–3–2015–ல் மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி செயல்படும் இவ்வரசால் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

முற்பகல் 11–20

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 2011 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகிய உடனேயே இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தேன். அப்போது



2015 மார்ச் 30]

ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கி இருந்தன. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கக்கனேரி குளம், புத்தேரி மாணிக்கவேல் குளம், இறச்ச குளம், பறக்கை குளம், தேரூர் குளம், சுசீந்தை குளம், தத்தையார் குளம் உட்பட 9 குளங்களில் தற்போது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் பேசும்போது, இந்தக் கேள்வியை சட்டமன்ற உறுப்பினர் ஆனவுடன் கேட்டேன் என்று சொன்னீர்கள். 4–4–2013–ல்தான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். அப்போதுதான் நீங்கள் சட்டமன்ற உறுப்பினரானீர்களா?

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–லேயே ஒரு முறை கொடுத்த கேள்வி, இரண்டாவது முறையாக 2013–ல் கொடுத்திருந்தேன். ஏனென்றால் அது list ஆகவில்லை என்பதால் மீண்டும் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இந்தக் கேள்வியைத்தான் எடுத்திருக்கிறோம், அதைச் சொல்லுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–ல் கேட்ட கேள்வி list ஆகவில்லை. 2013–ல் மீண்டும் இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். அதை நீங்கள் இப்போது list செய்திருக்கிறீர்கள். அதற்காக உங்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். Late ஆனாலும், latest ஆக வாய்ப்புத் தந்திருக்கிறீர்கள். அந்த அளவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 9 குளங்களில் தற்போது வனத் துறை சார்பில் பறவைகள் சரணாலயம் அமைக்க ஆயத்தப் பணிகள் நடைபெற்றன.

கன்னியாகுமரி மாவட்டம் இயற்கை எழிலும், நீர் வளமும், நில வளமும் கொண்ட மாவட்டம். ரஷ்யா, சைபீரியா, சீனா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலிருந்து ஊசிவால் வாத்து, மூக்கறை நாரா, சாதா வாத்து, விஜியன், மலாடு, நீலச் சிறகு வாத்து, சாதா போச்சாடு, கொண்டைப் போச்சாடு, வெண்கண் போச்சாடு, மணல் உள்ளான், கொசு உள்ளான் போன்ற பறவைகள் 5,000 முதல் 8,000 கிலோ மீட்டர் தூரம் பறந்து குமரிக்கு வருகின்றன. Variwal godwit பறவை 8 நாட்கள் தொடர்ந்து. . .

[2015 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். நேரம் இல்லை, கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டு, சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பறவைகள் சம்பந்தமானது, அதற்காக முக்கியத்துவம் தருவோம். 8 நாட்கள் தொடர்ந்து non-stop ஆகப் பறந்து 16 ஆயிரம் கிலோ மீட்டர் சைபீரியா, அலாஸ்கா போன்ற நாடுகளுக்கெல்லாம் செல்லும் இந்தப் பறவைகள் குறித்த ஆராய்ச்சி சுற்றுலாப் பயணிகள் மூலமாக நடக்கிறது. அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் பல்வேறு ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தச் சுற்றுலாப் பயணிகளால் வருமானம் பெருகுகிறது. தற்போது காட்சிக் கோபுரம், குளத்தைச் சுற்றி வேலி மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது சுற்றி வரும் சாலை, வாகன நிறுத்தம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்றவற்றை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுசீந்திரம், தேரூர் மற்றும் மணக்குடி போன்ற பகுதிகள் பல்லுயிர் பறவைகள் கொண்ட சூழல் அமைந்த நன்னீர் பகுதிகளாகும். இது பல்வேறு வகையான வெப்ப மண்டல தாவர மற்றும் விலங்கினங்களுக்குப் புகலிடமாக உள்ளது. இங்கே 110 வகையான நீர்த் தாவரங்கள், 44 வகையான மீன்கள் மற்றும் 90 வகையான பறவைகள் காணப்படுகின்றன. 90 வகை பறவை இனங்களில் கிட்டத்தட்ட 50 வகையானவை வலசை வரும் பறவைகளாகும். பருவத்தின் உச்சத்தில் 25,000 வலசை வரும் பறவைகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கொக்கு வகைகள், ibises நாரை இனங்கள், உள்ளான் மற்றும் Plover போன்ற பறவைகள் முக்கியமானவை. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களால் இந்தப் பகுதியை ஒதுக்கீடு பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்டு, இந்த நிலையில் அங்கே பறவை இனங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கை தொடர்பாக, மேலாண்மைக் குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், கன்னியாகுமரி மாவட்ட வன அலுவலரை உறுப்பினர்–செயலராகவும், பொதுப் பணித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மைத் துறை, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு குழு அமைக்க உரிய நடவடிக்கைகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2015 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பறவைகள் இங்கே வருவதால் குளத்தைச் சுற்றியுள்ள சுமார் 3 கிலோ மீட்டர் தூர நெல் வயல்களில் உள்ள நாற்று, நெல் மணிகளைப் பறவைகள் உணவாக உண்டு விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகின்றன. வேளாண் விளைபொருட்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட சுற்றுலாமூலம் கிடைக்கும் வருமானத்தில் 30 சதவீதத்தை இழப்பீடாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பறவைகளை வயல்வெளிகளில் வரவிடாமல் தடைசெய்ய பரண் அமைத்தல், மின்சாரம்மூலம் ஒலி எழுப்புதல் போன்ற உபகரணங்களை வாங்க விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மேற்படி கோரிக்கைகளை ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 மார்ச் 30

**88—**

### காற்று மாசு

*52837—**திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காரைக்குடி தொகுதி, வீரசேகரபுரம் ஊராட்சி, புதுநகரில் உள்ள எண்ணெய் தொழிற்சாலையினால் ஏற்படும் காற்று மாசினைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம்,
வாரி வாரி வழங்கும்போது வள்ளல் ஆகலாம்,
வாழைபோல தன்னைத் தந்து தியாகி ஆகலாம்,
உருகி ஓடும் மெழுகுபோல ஒளியை வீசலாம்,
ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகள் ஆகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்கள் ஆகலாம்”

என்ற வரிகளுக்கு ஏற்ப கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு வாழ்ந்து, எங்களை வழிநடத்தி வருகின்ற மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், காரைக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதுவயல் கிராமத்தில் திருவாளர் மலர் சால்வண்ட் எக்ஸ்டிரக்ஷன் லிமிடெட் நிறுவனம், நெல் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையை இயக்கி வருகின்றது. இத்தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு சொந்த நிலத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் காற்று மாசினைக் கட்டுப்படுத்த காற்று மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள் பொருத்தப்பட்டு இயக்கத்தில் உள்ளன. புகைப்போக்கி வழியாக வெளியேறும் காற்றின் தரம் நிர்ணயிக்கப்பட்ட தர



2015 மார்ச் 30]

அளவிற்கு உட்பட்டுள்ளது. தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் சாம்பல் திடக்கழிவு விவசாய நிலங்களுக்கு உரமாகப் பயன்படுத்த அனுப்பப்படுகிறது. தொழிற்சாலையின் இயக்கத்தை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. வாரியத்தினுடைய நிபந்தனைகள் மீறப்படுகின்றபட்சத்தில் ஆலைமீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். காரைக்குடி தொகுதி, வீரசேகரபுரம் ஊராட்சியில் இருக்கக்கூடிய மலர் சால்வண்ட் நிறுவனத்தில் நெல் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும்போது வெளியேறும் தூசுகளால் காரைக்குடி-அறந்தாங்கி நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனங்களில் செல்பவர்களும், பொதுமக்களும் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர். அந்தத் தூசு கண்ணில் படும்போது கண் எரிச்சல் ஏற்பட்டு, வாகன ஓட்டிகள் விபத்துக்குள்ளாகிறார்கள். ஆகவே, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி அந்தத் தொழிற்சாலையிலிருந்து வரக்கூடிய தூசினைக் கட்டுப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், எனது தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை தாலுகா, ஊரவயல் கிராமத்தில் அமைந்துள்ள அண்ணாமலையார் பேப்பர் மில்லில் இருந்து கழிவுநீர் மிகக் கூடுதலாக அங்கே இருக்கக்கூடிய வீரையன்குடி, அண்டக்குடி, பிரம்பவயல், திருத்தங்கல் போன்ற பொதுப் பணித் துறை கண்மாய்களில் விடப்படுகிறது. அதனால், ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாதிப்படைந்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அண்ணாமலையார் பேப்பர் மில்லில் இருந்து வரக்கூடிய கழிவுநீரை உடனடியாக நிறுத்துவதற்கும், அந்த மில்லின்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2015 மார்ச் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தொழிற்சாலையிலிருந்து வெளிவருகின்ற காற்று மாசினைக் கட்டுப்படுத்துவதற்கு காற்று மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்களை அந்த ஆலை அமைத்து செயல்படுத்தி வருகிறது. அது வாரியத்தின் மூலமாக தினந்தோறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அந்த ஆலை காற்று மாசினை மீறப்படுகின்ற பட்சத்தில் அந்த ஆலைமீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–30*

அடுத்ததாக, காகிதத் தொழிற்சாலை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியிருக்கின்றார்கள். அந்தத் தொழிற்சாலையானது பழைய காகிதங்களை மூலப்பொருட்களாகக் கொண்டு எழுதும் தாள் மற்றும் அச்சிடும் தாள் என, நாள் ஒன்றுக்கு 20 டன் தயாரிக்கின்றது. அந்தத் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 275 கிலோ லிட்டர் கழிவுநீரை வெளியேற்றுகிறது. இந்தக் கழிவுநீரை சுத்திகரிப்புச் செய்ய, சுத்திகரிப்பு கழிவுநீர் நிலையத்தை அந்த ஆலை அந்தப் பகுதியில் அமைத்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் முழுவதும் மறுசுழற்சி செய்வது கண்டறியப்பட்டிருக்கின்றது. இந்தக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளிவருகின்ற திடக் கழிவுகளைக் காகித அட்டை தயாரிக்கும் குடிசைத் தொழிற்சாலைகள் எடுத்துச் செல்கின்றன. கொதிகலன் சாம்பல் விவசாய நிலங்களுக்கு உரமாகப் பயன்படுத்தப்படுவதாக அறியப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பொதுப் பணித் துறை பராமரிக்கின்ற கண்மாய்களில் வெளியேற்றப்படுவதாக புகார்கள் வந்துள்ளன. இந்தத் தொழிற்சாலையை 16–10–2014 அன்று ஆய்வு செய்தபோது, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மறுசுழற்சி செய்வது கண்டறியப்பட்டுள்ளது. தொடர்ந்து செய்யப்படும் ஆய்வுகளிலும் கழிவுநீர் வெளியேறாவண்ணம் மறுசுழற்சிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையில் அமைக்கப்பட்டுள்ள கொதிகலனிலிருந்து வெளியேற்றப்படும் காற்று மாசைத் தடுக்க 25 மீட்டர் உயரம் உள்ள புகைபோக்கிமூலம்



2015 மார்ச் 30]

அந்தக் காற்று மாசு வெளியேற்றப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் காற்று மாசு மற்றும் கழிவுநீர் பற்றிய புகார்கள் எழுகின்றபட்சத்தில், தொழிற்சாலைகள்மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காகித ஆலையிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுநீர் மூலமாக விவசாய நிலங்கள் பாதிப்பதோடு, மழையை நம்பி இருக்கக்கூடிய எங்களுடைய மாவட்டம், எங்களுடைய தொகுதி, மழைநீரில்கூட அந்த விவசாயத்தைச் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, முற்றிலுமாக அந்த ஆலையிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுநீரை நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே காகித ஆலைகளிலிருந்து வெளியில் வரக்கூடிய கழிவுநீரை மறுசுழற்சி செய்து அந்த ஆலைக்கு உட்பட்டு இருக்கின்ற விவசாய நிலங்களுக்கு உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கழிவுநீரை அந்த ஆலையிலிருந்து பொதுப் பணித் துறையினுடைய கண்மாய்களுக்கு அனுப்புகின்றபட்சத்தில், அந்த நிலை கண்டறியப்பட்டால், அந்த ஆலையின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 மார்ச் 30

**89—**

**மாணவியர் விடுதி**

*47575—**திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி ஒன்றால் மட்டுமே ஒரு நாடு சமூக, பொருளாதார முன்னேற்றம் அடைய முடியும் என்பதற்கிணங்க, இன்று கல்வித் துறைக்கு மட்டும் 24,633.32 கோடி ரூபாயை அள்ளித் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் கல்லாமை இல்லாமை ஆக்கிட்ட தமிழகத்தினுடைய கல்வித் தாய், வாழும் மனித தெய்வம், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் நகராட்சியில், நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி சுமார் 2,000 மாணவியரைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்தப் பள்ளியில் ஆண்டுக்காண்டு தேர்ச்சி சதவிகிதம் 100 சதவிகிதத்தை எட்டுகின்ற அளவிற்கு கல்வியினுடைய தேர்ச்சி சதவிகிதம் இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், இங்கே ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர் கல்வி பயின்று வருகின்றார்கள். மேலும் கிராமப்புறங்களிலிருந்து அதிகமான அளவில் மாணவியர் இந்த நகராட்சிப் பள்ளியில் படித்து வருகின்ற காரணத்தினால், தொலைதூரத்திலிருந்து வரும் மாணவியர் அங்கே தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் நல விடுதியைக் கட்டிக்கொடுத்தால் எதிர்காலத்தில் அவர்களுடைய கல்வியை சிறப்பாக கற்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைக் கூறி, அதனை மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, அங்கே ஒரு மாணவியர் விடுதியைக் கட்டிக்கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.



2015 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலைப்பெற்று, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

முற்பகல் 11–35

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட தென்பொன்முடி இ.ஏ.பி. அரசு உயர்நிலைப் பள்ளி தற்பொழுது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. இந்தப் பள்ளி கிராமப்புறத்திலே அமைந்திருக்கின்றது. ஏறத்தாழ 5–6 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து மாணவர்கள் இங்கே வந்து படித்துச் செல்கின்றார்கள். ஆகவே, மாணவர்கள் விடுதி ஒன்றை அமைத்துக் கொடுத்தால் அந்த

[2015 மார்ச் 30

*மாணவர்கள் அங்கே தங்கி கல்வி பயில்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இ.ஏ.பி. அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர் விடுதி ஒன்றைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

*எனது மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், கடந்த 2001 முதல் 2006 ஆம் ஆண்டுவரை இருந்த அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், வெள்ளியங்காடு, புஜங்கனூர், சீலியூர், காரமடை, மேட்டுப்பாளையம் மற்றும் பெத்திக்குட்டை ஆகிய பகுதிகளிலே மாணவர் விடுதிகள் கட்டப்பட்டு, சிறப்பாக இயங்கி வருகின்றன. அங்கு மாணவர்களுடைய சேர்க்கை தொடர்ந்து பத்தாண்டு காலமாக முழுமையாக இருந்து வருகிறது. ஆகவே, பத்தாண்டுகளுக்கு மேலாக ஆகிவிட்ட காரணத்தாலே, மேற்கூறிய அந்தக் கட்டடங்களெல்லாம் சற்று பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. ஆகவே, அந்தக் கட்டடங்களைப் பழுதுநீக்கி புதுப்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறையின் மூலமாக ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**90—**

### தரம் உயர்த்துதல்

*__8320—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:__

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2015 மார்ச் 30]

*ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், அத்தானி கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், அத்தானி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த 21–2–2014 அன்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஆணை வெளியிடப்பட்டு, ரூபாய் ஒரு கோடியே ஐந்து இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, தற்போது கட்டடப் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* "It is health that is real wealth and not pieces of gold and silver" *என்ற மகாத்மா காந்தியின் கூற்றுக்கு இணங்க, நோயற்ற சமுதாயத்தை உருவாக்க மக்களின் நல்வாழ்வுக்கு தன்னிகரில்லா திட்டங்களை வாரிக் கொடுத்துக் கொண்டிருக்கும் வரலாற்றுத் தாய் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற வரிகளுக்கொப்ப, இந்த வினா அவையில் எழுவதற்கு முன்னமே, கேட்காமலேயே அத்தானி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியை உரித்தாக்குகிறேன்.*

[2015 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், வெள்ளித்திருப்பூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, வெள்ளித்திருப்பூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட அவனியாபுரம் நெசவாளர் ஒருவரின் கண் சிகிச்சை சம்பந்தமாக சில தகவல்களைச் சொன்னார்கள். அங்கீகரிக்கப்பட்ட அந்தப் பகுதியிலே, மதுரையிலே உள்ள ஆனந்த் கண் மருத்துவமனைக்கு அவர் செல்லும்பட்சத்தில், எல்லாவிதமான சிகிச்சைகளும் அவருக்கு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, அவர் அங்கே செல்ல வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.



2015 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) திருவாரூர் மத்திய பல்கலைக்கழக கட்டட விபத்து

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒவ்வொருவராக என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) என்னவென்று ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. மு.க. ஸ்டாலின், சொல்லுங்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், திருவாரூர் மத்திய பல்கலைக்கழக கட்டடம் இடிந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். அது சம்பந்தமாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக கட்சியைச் சார்ந்தவர்கள் காலை 9—47 மணிக்கும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் 10—25 மணிக்கும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்தவர்கள் 9—47 மணிக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் 10—38 மணிக்கும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் 9—47 மணிக்கும், மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் 10—57 மணிக்கும் மற்றும் புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி 10—14 மணிக்கும் ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம். (குறுக்கீடு) இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு முதலமைச்சர் பதில் சொல்லவிருக்கிறார். உட்காருங்கள். நீங்கள் கேட்டதற்குப் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்கிறார். நீங்கள்

உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) கவன ஈர்ப்பு என்றால் Agenda–ல் கொண்டு வரப்படும். நீங்கள் தகவல் கேட்டீர்கள். கேட்டதற்கு, உடனே பதில் சொல்கிறார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் தகவல் கேட்டிருக்கிறீர்கள். நீங்கள் கேட்டதற்கு respond செய்து, மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்கிறார், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–40

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், நாகக்குடி வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள மத்திய பல்கலைக்கழக வளாகத்தில், மத்திய பொதுப் பணித் துறை சார்பில் விருந்தினர் மாளிகை கட்டட கட்டுமானப் பணி நடந்து வருகிறது. இந்தக் கட்டடங்கள் கட்டும் பணியை ஐதராபாத்தைச் சேர்ந்த D.E.C. Infrastructure and Projects (India) Pvt. Ltd., என்ற தனியார் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

29–3–2015 அன்று காலை சுமார் 9–00 மணியளவில், விருந்தினர் மாளிகைக்கான கட்டடத்தில், மூன்றாம் தளத்தில், மேற்கூரை கான்கிரீட் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அந்தக் கட்டடத்தின் ஒரு பகுதி திடீரென இடிந்து விழுந்தது. இந்த விபத்தில், பணியில் ஈடுபட்டிருந்த 21 பணியாளர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர்.

இச்சம்பவம் குறித்து, தகவலறிந்ததும், காவல் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர், வருவாய் துறையினர், பொதுப் பணித் துறையினர் மற்றும் மருத்துவக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். மத்திய மண்டலக் காவல் துறை தலைவர், தஞ்சாவூர் காவல் துறை துணைத் தலைவர், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று மீட்புப் பணிகளை மேற்பார்வையிட்டனர்.

மாநிலப் பொதுப் பணித் துறையின் மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் 3 செயற்பொறியாளர்கள், 3 உதவி செயற்பொறியாளர்கள், 5 உதவிப் பொறியாளர்கள், 12 பணி





மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் J.C.P. இயந்திரங்கள் உள்ளிட்ட தேவையான உபகரணங்களுடன் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கட்டட இடிபாட்டில் சிக்கிய 21 பேர் மீட்கப்பட்டு, ஆம்புலன்ஸ்கள்மூலம் திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் 5 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 16 தொழிலாளர்களுக்கு திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் 16 பேர்களில், 10 பேர்களுக்கு எலும்பு மற்றும் சிதைந்த காயங்கள் (Bone and Crush injuries) ஏற்பட்டுள்ளன. திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் தலைமையில் நரம்பியல், எலும்பு, பொது அறுவை சிகிச்சை, மயக்கவியல் போன்ற 12 சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கொண்ட குழு மற்றும் பொது மருத்துவர்கள், பயிற்சி மருத்துவர்கள், முதுநிலை மருத்துவ மாணவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட 60 இதர மருத்துவப் பணியாளர்களுடன் காயம் அடைந்தவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக, சன்னாநல்லூர் வருவாய் ஆய்வாளர் அளித்த புகாரின்பேரில், நன்னிலம் காவல் நிலையத்தில் கு.எண் 63/15–ல் இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 304 (ii), 336 மற்றும் 338 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுமான நிறுவன மேலாளர் மற்றும் களப் பொறியாளர் உள்ளிட்ட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த விபத்தில் பலியான இருவர் ஒடிசா மாநிலத்தையும், ஒருவர் உத்தரப் பிரதேச மாநிலத்தையும் சேர்ந்தவர்களாவர். இரண்டு தொழிலாளர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். இந்த விபத்தில் இறந்த 5 பேரின் குடும்பங்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்த ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் தலா 5 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும். காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் 16 பேருக்கும், தலா 50,000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[2015 *மார்ச்* 30

## (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், என்ன? (குறுக்கீடு) என் ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பதில் வந்தவுடன் எடுத்துக் கொள்ளலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியிலேயிருந்து 8 பேர் எழுந்திருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) எல்லோரும் எழுந்தால் எப்படி? எல்லோருக்கும் நான் எப்படி வாய்ப்புத் தருவது? (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்தீர்கள். நான் ஆய்வில் இருக்கிறது என்று பதில் சொல்லிவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆய்வில் இருக்கிறது என்று சொல்லிவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடு) இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொம்பன் திரைப்படம் சம்பந்தமாக . . . (குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** *தலைவர் அவர்களே வேலூரில். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து இவற்றையெல்லாம் அனுமதிக்கவேண்டாம்.*

முற்பகல் *11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதனை அவைக் குறிப்பில் ஏற்றவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். எதை வேண்டுமானாலும் பேசக்கூடாது. திரு. துரைமுருகன், நீங்கள் ஆதாரம் இல்லாமல் எதை வேண்டுமானாலும் பேசக்கூடாது. நீங்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது. ஆய்வில் இருக்கும்பொழுது, நீங்கள் எழுந்து உங்கள் இஷ்டத்திற்குப் பேச முடியாது. உங்கள் இஷ்டத்திற்குத் தேவையில்லாத வார்த்தைகளெல்லாம் பேசக்கூடாது. உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.*



2015 *மார்ச்* 30]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரமில்லாத குற்றச்சாட்டை இந்த அவையில் கூறியிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பில் ஏறவில்லை. திரு. துரைமுருகன் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறவில்லை. (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. அ. சவுந்தரராசன் சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள், நான் அனுமதித்திருக்கிறேன் அல்லவா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசட்டும். ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய பிறகு நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

## (இ) வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் காரில் மோதி ஒருவர் மரணம்

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22–3–2015 அன்று வேலூர் மாவட்டம், கார்ணம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. உதயசூரியன் என்பவர் அதே கிராமத்தைச் சேர்ந்த தனது நண்பர் திரு. ராஜ்குமார் என்பவருடன் இரு சக்கர வாகனத்தில் காட்பாடி–சென்னை சாலையில் தங்கள் கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது, இரவு சுமார் 9–30 மணியளவில் எதிர்பாராத விதமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த கார் ஒன்றின்மீது மோதியதில் தானும், வாகனத்தை ஓட்டிய திரு. ராஜ்குமாரும் கீழே விழுந்ததில் காயங்கள் ஏற்பட்டதாகவும், திரு. ராஜ்குமார் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், தான் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், காட்பாடி காவல் துறையினரிடம் அளித்த புகாரின்பேரில் காட்பாடி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.*

*விசாரணையில், சம்பவத்தன்று திரு. ராஜ்குமாருக்கு துணி எடுக்க இருவரும் அன்று மாலையில் இரு சக்கர வாகனத்தில் காட்பாடி சென்று, பின்னர் அவர்கள் இரவு சுமார் 9–30*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 30

மணியளவில் தங்கள் கிராமத்தை நோக்கி இருவரும் இரு சக்கர வாகனத்தில் திரும்பியுள்ளனர். அப்போது, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அரசு வாகனத்தில் வாகன ஓட்டுநர் திரு. மோகன் வாகனத்தை ஓட்ட, தனது உதவியாளர்கள் இருவருடன் வேலூர் நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது கார்ணம்பட்டு கிராமத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த திரு. ராஜ்குமாரின் இரு சக்கர வாகனம் மாவட்ட ஆட்சியரின் கார்மீது மோதியுள்ளது. இதில் திரு. ராஜ்குமார் காயமடைந்து சம்பவ இடத்தில் இறந்துள்ளார். பின்னால் அமர்ந்திருந்த திரு. உதயசூரியனுக்குக் காயங்கள் ஏற்பட்டுள்ளன. உடனடியாக மாவட்ட ஆட்சியர் விபத்து குறித்து மாவட்டத் தனிப் பிரிவு காவல் ஆய்வாளருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

இதற்கிடையில், தகவல் அறிந்து காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்துள்ளனர். காயமடைந்த திரு. உதயசூரியனை உடனடியாக வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ்மூலம் அனுப்பி வைத்ததுடன், இறந்த திரு. ராஜ்குமாரின் பிரேதத்தை மற்றோர் ஆம்புலன்ஸ்மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கிருந்து வேலூர் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இறந்த திரு. ராஜ்குமாரும், காயமடைந்த திரு. உதயசூரியனும் விபத்து நடந்தபோது குடிபோதையில் இருந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. இவ்வழக்கில், 23–3–2015 அன்று திரு. ராஜ்குமாரின் பிரேதம் வேலூர் அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர், பிரேதத்தை அவரது பெற்றோர் பெற்றுக்கொண்டனர். திரு. ராஜ்குமாரின் தாயார் வளர்மதி கார்ணம்பட்டு கிராம பஞ்சாயத்துத் தலைவியாக இருந்து வருகிறார்.

இந்நிலையில், துக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்ள கார்ணம்பட்டு சென்ற தி.மு.க.–வைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் மற்றும் தி.மு.க.–வினர் மாவட்ட ஆட்சியரின் வாகன ஓட்டுநரைக் கைது செய்யக் கோரி திடீரென கார்ணம்பட்டு இரயில்வே மேம்பாலத்தின்மீது சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். தகவலறிந்த காவல் துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்றவுடன் அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்று, பின்னர் காட்பாடி–வேலூர் சாலையில் சித்தூர் பேருந்து நிறுத்தம் அருகில் சாலை



2015 மார்ச் 30] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மறியலில் ஈடுபட்டனர். காவல் துறையினர் புலன் விசாரணை அடிப்படையில் ஓட்டுநர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியதன்பேரில் அவர்கள் கலைந்து சென்றனர்.

தி.மு.க.–வினர் இரண்டு இடங்களில் சாலை மறியல் செய்து, போக்குவரத்திற்குத் தடை ஏற்படுத்தியதற்காக திருவலம் மற்றும் காட்பாடி காவல் நிலையங்களில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்குகள் புலன் விசாரணையில் இருந்து வருகின்றன. சாலை விபத்து குறித்த வழக்கின் புலன் விசாரணை அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–50*

**(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சிறிது நேரம் இருங்கள். உங்களைப் பேச அனுமதியளிக்கிறேன். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொம்பன் திரைப்படத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இல்லை. எல்லா subject பற்றியும் பேசுவதற்கு அனுமதியில்லை. திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அது பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். பார்த்துவிட்டுச் சொல்கிறேன், உட்காருங்கள்.

*(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)*

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பொறியாளர், முத்துக்குமாரசாமி அவர்கள். .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது C.B.C.I.D. விசாரணையில் இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது C.B.C.I.D. விசாரணையில் இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எம். ஆறுமுகம், என்னவென்று சொல்லுங்கள்.

[2015 மார்ச் 30

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பொறியாளர், திரு. முத்துக்குமாரசாமி இரயில் முன் பாய்ந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது C.B.C.I.D. விசாரணையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) பிறகு பார்க்கலாம். (குறுக்கீடுகள்) விசாரணைக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விசாரணைக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது விசாரணையில் இருக்கிறது. பதில் வரட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விசாரணை முடிந்து அறிக்கை வரட்டும், உட்காருங்கள்.

*(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவையிலிருந்து வெளியேறினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் விவசாயத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படியெல்லாம் திடீரென்று அவையில் கேட்கக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2015

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*



2015 மார்ச் 30]

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. முன்பண மானியக் கோரிக்கைகள், 2015–2016, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2015–2016 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.

**2015–2016 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 20,40,06 | – | 1 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 17,48,17 | – | – |
| 3 | நீதி நிருவாகம் | 340,52,14 | – | – |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 950,48,85 | 100,55,68 | 1 |
| 5 | வேளாண்மைத் துறை | 3,070,99,78 | 160,59,20 | 75,25,00 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 522,85,22 | 25,85,83 | 1 |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை | 217,96,40 | 146,37,56 | — |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 21,01,70 | 29,32,32 | 1 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 457,93,32 | 42,55,61 | 1 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 169,20,15 | — | 1 |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 157,66,05 | — | — |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 255,42,88 | 73,38,66 | 6,21,42 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 2,754,22,97 | 268,78,01 | 1 |
| 14 | எரிசக்தித் துறை | 5,223,15,94 | 1,900,00,03 | 1,398,40,06 |
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 8,24,28 | 25,00,00 | 10,00,00 |
| 16 | நிதித் துறை | 482,84,24 | 1,000,00,00 | 53,05,12 |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 521,96,28 | 1 | 28,32,18 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 84,56,81 | 1 | 1 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 4,059,16,24 | 62,98,52 | 1 |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 20 | உயர் கல்வித் துறை | *1,767,85,54* | *80,55,22* | *1* |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | *654,11,18* | *3,460,00,96* | *1* |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | *2,504,06,09* | *269,24,51* | *10,00,02* |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | *99,47,40* | *1* | — |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | *103,33,11* | *10,18,13* | — |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | *105,31,32* | *15,34,78* | — |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | *537,87,70* | *155,58,02* | *286,00,00* |
| 27 | தொழில் துறை | *814,30,88* | *36,68,30* | *162,42,54* |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | *31,39,18* | *2,00,00* | — |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 29 | சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாட்டு மற்றும் அறநிலையங்கள் துறை) | *45,70,36* | *85,22,58* | *1* |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | *51,25,10* | *9,79,66* | — |
| 31 | தகவல் தொழில் நுட்பவியல் துறை | *26,46,86* | *1* | *15,00,00* |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | *459,78,94* | *9,87,42* | *1* |
| 33 | சட்டத் துறை | *13,86,26* | — | *1* |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | *3,297,19,78* | *2,323,42,42* | *135,02,77* |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | *39,26,56* | *1* | *18,75* |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | *114,20,84* | *87,92,50* | *1* |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை) | *51,24,02* | — | — |
| 38 | பொதுத் துறை | *174,68,88* | *2* | *20,32,50* |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 138,99,93 | 399,43,92 | 1 |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 899,52,46 | 963,66,17 | — |
| 41 | வருவாய்த் துறை | 3,017,99,64 | 45,01,74 | 1 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 8,311,50,65 | 926,78,01 | 12,50 |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 10,251,84,95 | 216,37,48 | 2,70 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 157,45,33 | 25,50,00 | 1 |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 2,040,61,06 | 2 | 1 |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 23,38,32 | — | 1 |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 37,89,59 | 1 | — |
| 48 | போக்குவரத்துத் துறை | 532,56,27 | 175,00,03 | 62,50,01 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 73,09,78 | 1,75,00 | 1 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 10,036,10,32 | — | — |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 339,86,62 | — | — |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 182,31,17 | 1 | — |
| 53 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | 1,551,43,54 | — | 1 |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 244,80,69 | 89,04,14 | — |
| | **பெருமொத்தம்** | **68,066,91,80** | **13,223,82,52** | **2,262,85,79** |

## 5. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2014–2015, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014-2015 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தலைவணங்குகிறேன்.

2014–2015 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையின் முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 7,650.38 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன. இவற்றில் 3,903.49 கோடி ரூபாய் வருவாய்க்

@ 338 முதல் 343 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

கணக்கிலும் 3,746.89 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. 2014 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாளன்று 2014–2015 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் “புதுப் பணிகள் மற்றும் “புது துணைப் பணிகள்” குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடுசெய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

3. குடிநீர்ப் பற்றாக்குறையைக் கையாள்வதற்காகவும், வறட்சியைத் தணிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் இயங்கும் இந்த அரசு மாநிலப் பேரிடர் பொறுப்பு நிதியிலிருந்து 95.50 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

4. தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் ஒரகடம் தொழில் வழித்தடத் திட்ட வளர்ச்சியின் ஒரு பகுதியாக, சிங்கப்பெருமாள்கோவில்–ஸ்ரீபெரும்புதூர் சாலையின் 0/6 கி.மீ. முதல் 12/6 கி.மீ. வரையிலான நான்குவழிப் பாதையை 115 கோடி ரூபாய் செலவில் ஆறுவழிப் பாதையாக மேம்படுத்துவதற்கு அரசு நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/– “மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–55

5. பல்வேறு வணிக வங்கிகள் / நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு வழிவகை முன்பணமாக அரசு 40 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் 29.99 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை” என்பதன்கீழ்



சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

6. சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 58.65 கோடி ரூபாய் செலவில் புறநோயாளிகள் மற்றும் இதர பிரிவுகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு நிருவாக அனுமதியளித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/– “மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு மாநில விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 252 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக குறுகிய காலக் கடனாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 36.21 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. தரமணியில் உள்ள மத்திய தொழில்நுட்ப நிலைய வளாகத்தில் 22.77 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த பயிற்சிப் பட்டறைக்கு கட்டடம் கட்டுவதற்காக நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/– “மானியக் கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

9. நிலத்திற்கான தொகை வழங்கவும், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்த்தல் செலவினங்களுக்காகவும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு துணைக் கடனாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 598.22 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், எருக்கூர் கிராமத்தில், மொத்தம் 50,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 16 காற்று புகாத தொழில்நுட்ப தானிய சேமிப்புக் கிடங்குகள் (silos) கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 58.48 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 30

அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/ "மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

11. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–2015 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

**2014–2015 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 1 | — | — |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 5,51,68 | — | — |
| 3. | நீதி நிருவாகம் | 44,58,67 | — | — |
| 4. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 39,04,81 | 2 | 16,24 |
| 5. | வேளாண்மைத் துறை | 139,15,98 | 56,61,34 | — |
| 6. | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 20,71,39 | 24,98,15 | 47,64 |
| 7. | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 19,56,39 | 6,79,28 | — |
| 8. | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 30,07,86 | 21,66,85 | — |



2015 மார்ச் 30]

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 33,62,98 | 5 | — |
| 10. | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 72,42,78 | — | — |
| 11. | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 10 | — | — |
| 12. | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 41,19,70 | — | 29,01,11 |
| 13. | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 8 | 3 | — |
| 14. | எரிசக்தித் துறை | 2 | 2,165,66,99 | 114,04,47 |
| 15. | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 8,41,64 | 1 | 1 |
| 16. | நிதித் துறை | 30 | — | 11,65,60 |
| 17. | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 93,64,80 | 37,27,43 | 47,30,53 |
| 18. | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 46,46,06 | 1,22 | — |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 19. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 98,56,54 | 34,72,44 | 32,49 |
| 20. | உயர் கல்வித் துறை | 55 | 72,08,96 | 20,49 |
| 21. | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 13,58,11 | 21 | 27,23,99 |
| 22. | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 522,76,10 | 106,91,96 | 31,98 |
| 23. | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 13 | 1,00,00 | — |
| 24. | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 14,72,10 | 6,09,04 | — |
| 25. | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 20,95,23 | — | — |
| 26. | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 12 | 2 | 628,21,99 |
| 27. | தொழில் துறை | 5 | 26,89,88 | 1 |
| 28. | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 47,48,59 | — | — |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 29. | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 28,62 | 8 | 15,98,50 |
| 30. | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 14,15,64 | 24,11,99 | — |
| 31. | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 6 | — | — |
| 32. | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 37 | 7,48,30 | — |
| 33. | சட்டத் துறை | 3,97,73 | — | 24,99 |
| 34. | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 10 | 10 | 188,73,85 |
| 35. | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 11,33,79 | 8,72 | 1,53,25 |
| 36. | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 68,89,27 | 15,48,54 | — |
| 37. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 6,41,26 | — | — |
| 38. | பொதுத் துறை | 97,34,23 | — | 1 |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 39. | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 19 | 24 | 22,99 |
| 40. | பாசனம் (பொதுப் பணித் துறை) | 229,76,47 | 81 | — |
| 41. | வருவாய்த் துறை | 155,08,12 | — | 32,50 |
| 42. | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 40,18,29 | 2 | — |
| 43. | பள்ளிக் கல்வித் துறை | 570,45,12 | 2 | 4,99 |
| 44. | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 7 | 3 | 3,99 |
| 45. | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 355,39,75 | — | — |
| 46. | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 3,53,55 | — | 63,09 |
| 47. | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 11,96,74 | — | — |
| 48. | போக்குவரத்துத் துறை | 217,13,33 | 2,99,95 | 36,31,92 |
| 49. | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 46,78,61 | 8,50,00 | 24,99 |
| 50. | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 288,78,97 | — | — |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 51. | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 156,29,24 | — | — |
| 52. | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 95,50,34 | — | 29,99 |
| 53. | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 34,85,48 | 16 | — |
| | **பெருமொத்தம்** | ***3,720,68,11*** | ***2,619,42,84*** | ***1,103,61,61*** |

## 6. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014-2015, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014–2015 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial Year 2014–2015."

## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014–2015, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014–2015 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2014–2015 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 30–3–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2014–2015 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**நிறைவேற்றப்பெற்ற 2014–2015 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | **கோரிக்கை** | **வருவாய்** | **மூலதனம்** | **கடன்** |
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 1 | — | — |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 5,51,68 | — | — |
| 3. | நீதி நிருவாகம் | 44,58,67 | — | — |
| 4. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 39,04,81 | 2 | 16,24 |
| 5. | வேளாண்மைத் துறை | 139,15,98 | 56,61,34 | — |



| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | **கோரிக்கை** | **வருவாய்** | **மூலதனம்** | **கடன்** |
| 6. | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 20,71,39 | 24,98,15 | 47,64 |
| 7. | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 19,56,39 | 6,79,28 | — |
| 8. | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 30,07,86 | 21,66,85 | — |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 33,62,98 | 5 | — |
| 10. | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 72,42,78 | — | — |
| 11. | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 10 | — | — |
| 12. | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 41,19,70 | — | 29,01,11 |
| 13. | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 8 | 3 | — |

| கோரிக்கை | | வருவாய் (ரூபாய் ஆயிரத்தில்) | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 14. | எரிசக்தித் துறை | 2 | 2,165,66,99 | 114,04,47 |
| 15. | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 8,41,64 | 1 | 1 |
| 16. | நிதித் துறை | 30 | — | 11,65,60 |
| 17. | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 93,64,80 | 37,27,43 | 47,30,53 |
| 18. | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 46,46,06 | 1,22 | — |
| 19. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 98,56,54 | 34,72,44 | 32,49 |
| 20. | உயர் கல்வித் துறை | 55 | 72,08,96 | 20,49 |
| 21. | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 13,58,11 | 21 | 27,23,99 |
| 22. | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 522,76,10 | 106,91,96 | 31,98 |
| 23. | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 13 | 1,00,00 | — |





| கோரிக்கை | | வருவாய் (ரூபாய் ஆயிரத்தில்) | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 24. | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 14,72,10 | 6,09,04 | — |
| 25. | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 20,95,23 | — | — |
| 26. | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 12 | 2 | 628,21,99 |
| 27. | தொழில் துறை | 5 | 26,89,88 | 1 |
| 28. | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 47,48,59 | — | — |
| 29. | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 28,62 | 8 | 15,98,50 |
| 30. | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 14,15,64 | 24,11,99 | — |
| 31. | தகவல் தொழில் நுட்பவியல் துறை | 6 | — | — |
| 32. | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 37 | 7,48,30 | — |
| 33. | சட்டத் துறை | 3,97,73 | — | 24,99 |
| 34. | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 10 | 10 | 188,73,85 |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 35. | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 11,33,79 | 8,72 | 1,53,25 |
| 36. | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 68,89,27 | 15,48,54 | — |
| 37. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 6,41,26 | — | — |
| 38. | பொதுத் துறை | 97,34,23 | — | 1 |
| 39. | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 19 | 24 | 22,99 |
| 40. | பாசனம் (பொதுப் பணித் துறை) | 229,76,47 | 81 | — |
| 41. | வருவாய்த் துறை | 155,08,12 | — | 32,50 |
| 42. | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 40,18,29 | 2 | — |
| 43. | பள்ளிக் கல்வித் துறை | 570,45,12 | 2 | 4,99 |
| 44. | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 7 | 3 | 3,99 |
| 45. | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 355,39,75 | — | — |
| 46. | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 3,53,55 | — | 63,09 |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 47. | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 11,96,74 | — | — |
| 48. | போக்குவரத்துத் துறை | 217,13,33 | 2,99,95 | 36,31,92 |
| 49. | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 46,78,61 | 8,50,00 | 24,99 |
| 50. | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 288,78,97 | — | — |
| 51. | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 156,29,24 | — | — |
| 52. | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 95,50,34 | — | 29,99 |
| 53. | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 34,85,48 | 16 | — |
| **பெருமொத்தம்** | | **3,720,68,11** | **2,619,42,84** | **1,103,61,61** |

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

நண்பகல் 12–00

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2015

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்:"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2015-2016 முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015–2016 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக்





கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 206, read with Clause (3) of Article 203 of the Constitition of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the Financial Year 2015-2016".

## 8. முன்பண மானியக் கோரிக்கைகள், 2015–2016, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2015–2016 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015–2016 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 30–3–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2015–2016 ஆம் ஆண்டிற்கான உடனடி செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

[2015 மார்ச் 30

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2015 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2015

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2015 மார்ச் 30]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. அரசினர் தீர்மானம்

### விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்துதல், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/ 2015), தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/ 2015) ஆகியவை இன்றே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2015 மார்ச் 30

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2015

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/ 2015), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 30–3–2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2015 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2015 மார்ச் 30

## (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2015

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2015), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2015)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

---

*@ 30–3–2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*



2015 மார்ச் 30] [பேரவைத் தலைவர்]

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2015) நிறைவேற்றப்பெற வேண்டும்”*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

## 11. வரவு–செலவுத் திட்டம், 2015–2016, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2015–2016* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *2015–2016* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறும் பொது விவாதத்தில் கலந்து கொண்டு கடமையாற்றுவதற்கு எனக்கு ஓர் உயர்ந்ததொரு சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்திருக்கிற, மதிநுட்பத்திற்கும், வினைத்திட்பத்திற்கும் எடுத்துக்காட்டாய்த் திகழ்கிற, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவியாக விளங்கிவருகிற *(மேசையைத் தட்டும் ஒலி)*

"பொழுது அலர்ந்த நேரத்தினை புள் அறியும்;

பூ மலர்ந்த நேரத்தினை வண்டறியும்;

சேய் பிறந்த நேரத்தினை தாய் அறிவாள்;

செந்தமிழே உன் பிறப்பை யார் அறிவார்"

என்று எண்ணற்ற தமிழ் மாந்தர்கள் சிலாகித்த அன்னைத் தமிழ் மொழிக்கு பொன்னும், மணியும் பூட்டி அழகு பார்க்கின்ற தலைவி,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து

அதனை அவன்கண் விடல்"

என்று பேசுவானே வள்ளுவப் பேராசான், அந்தக் குறட்பாவை நெஞ்சிலே நிறுத்தினால், சத்தியத்தின் திருவுருவமாய் தெரியும் தலைவி, புயல் காற்றோ, எரிமலையோ, பூகம்பத்தின் போர்க் குரலோ, கடல் கோளோ, வயல் வரப்பை அழிக்கின்ற வெள்ளக் காடோ, வற்கடமோ, அணுகுண்டோ, சுனாமியோ, தானே புயலோ எதற்கும் அஞ்சாது விதியையும், சதியையும் மதியால் வெல்லும் வீரத்தின் விளைநிலம் *(மேசையைத் தட்டும் ஒலி)* விதியையும், சதியையும் மதியால் வெல்லும் வீரத்தின் விளைநிலம், விவேகத்தின் திருவுருவமாய்த் திகழ்கின்ற தலைவி, ஆனை, சேனை, ஆள், அம்பு, கோட்டை, கொத்தளம், கொடிமரம், வெற்றிப் பதாகை பட்டொளி





வீசிப் பறக்க இன்னும் *30* நாளில் தமிழ்நாட்டில் முதலமைச்சராக முடிசூட இருக்கின்ற *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனை, சேனை, ஆள், அம்பு, கோட்டை, கொத்தளத்தில் வெற்றிப் பதாகை பட்டொளி வீசிப் பறக்க இன்னும் *30* நாளில் தமிழகத்தினுடைய முதலமைச்சராக முடிசூட இருக்கின்ற *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சிரம்தாழ்ந்த வணக்கத்தினை திசை நோக்கி முன்வைக்கிறேன்.

*பிற்பகல் 12–10*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வைகறை கரைந்து பொழுது புலர்கின்ற வேளையில் காற்றோடு காற்றாக நாத வெள்ளமாகக் கடந்து வருகின்ற பறவைகளின் ஓசை, மலையிடையே விழித்து தாவி வருகின்ற அருவியின் ஓசை, கடற்கரைகளில் கடல் அலைகள் தரையைத் தொட்டு விளையாடும் இடைவிடாத ஓசை, மண்ணை முட்டி, விண்ணைத் தட்டி வளர ஆசைப்படும் மரங்களின் அசைவில் ஏற்படும் ஓசை, விண்ணிலிருந்து மண்ணை நோக்கி வீழ்ந்தாலும் எழுச்சியோடு எழுகின்ற மழையின் ஓசை, கல்லைப் பிளந்து சிலையாய் வரும்போது கிடைக்கும் சிற்பியின் ஓசை, ஒவ்வொரு மூங்கிலிலும் பட்டுப் பட்டு, ஒவ்வொரு தோளையும் தொட்டுத் தொட்டு வசீகரமாய் வருடிச் செல்லும் தென்றல் காற்று தவழுகின்ற ஓசை, வானம் எனும் மொட்டை மாடியிலிருந்து சின்னச் சின்னத் துகள்களாகத் தரையிறங்கி மலை என்னும் உச்சியில் அருவியாய் விழுந்து, மண்ணின் சின்னச் சின்ன துவாரங்களைத் திறந்து, இறுகிப் போன மண்ணை நெகிழ்ச்சிக்கு உள்ளாக்கும் மனித நேயம் என்னும் ஈரத்தின் சல சல ஓசை, இவையெல்லாம் இயற்கை தந்த கொடை என்றால், இவையெல்லாம் இயற்கை தந்த கொடை என்றால், இவ்வையகம் தழைக்க இயற்கை தந்த சீதனம் என்றால், இந்த நிதிநிலை அறிக்கையும் தமிழக மக்களுக்கு அம்மா தந்த சீதனம் ஆகும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த நிதிநிலை அறிக்கையும் தமிழக மக்களுக்கு அம்மா தந்த சீதனம் ஆகும். ஆம், இது தாய் வீட்டுச் சீதனம். ஆம், இது தாய் வீட்டுச் சீதனம், தமிழக மக்களுக்கு அம்மா தந்த சீதனம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'வரி இல்லாத பட்ஜெட், வரலாறு படைக்கப் போகும் பட்ஜெட், வரி விலக்குகள் நிறைந்த பட்ஜெட், வறுமையை விரட்டப் போகும் பட்ஜெட்' என்று மக்கள் இதைக் கொண்டாடுகிறார்கள்.

எவ்வாறென்றால், கடைக்கோடி கிராமம் வரை சாலைகள் விரிகின்றன. தொழில் வளர்ச்சியில் விண்ணை முட்டும் ஆலைகள் முட்டிச் செல்கின்றன. மின் தேவைக்கும், நுகர்வுக்கும் இடையே இடைவெளி குறைக்கப்பட்டு, தற்போது மின்சாரத் துறை மகத்தான நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. ஏழைகளுக்கு அள்ளி அள்ளித் தரப்பட்ட ஆயிரம், இலட்சம் கால்நடைகளின்மூலம் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கிறார் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது தமிழ்நாடு முழுவதும் பெருமையாகப் பேசப்பட்டு வருகிறது.

கல்விக்காக ஆயிரமாயிரம் கோடி ரூபாய்களை ஒதுக்கி, கல்வியிலே ஒரு சமூக மாற்றத்தை, ஒரு சமூகப் புரட்சியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நகரங்களெல்லாம் இனி Smart City என்று சொன்னால், 60,000 பசுமை வீடுகள் கிராமப்புறங்களில்கூட வரப்போகின்றன. Green City என்று சொல்கின்ற அளவிற்கு தமிழ்நாட்டை மகத்தான பணியை நோக்கி இட்டுச் சென்றிருக்கின்றார் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆகவேதான் அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாய் இந்த நிதிநிலை அறிக்கை மக்களுடைய வாட்டத்தைப் போக்கும், வறுமையைப் போக்கும் காட்சியாய் கண் முன்னே விரிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை எவ்வாறு ஒரு எழுச்சியும், நம்மிடையே வேகத்தையும் ஏற்படுத்துகிறது என்று ஒப்பிட்டுப் பார்த்தால், களங்களைக் காண்பதற்கு, எதிரிகளைச் சந்திப்பதற்கு, திரண்டிருக்கின்ற கூட்டத்தை உணர்ச்சிவசப்படுத்துவதற்கு, கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கு அந்த சொல்லாற்றல் படைக்கலன் ஆயிற்று. அதனால்தான் கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு 351 ஆண்டுகளுக்கு முன்னால் மகா அலெக்சாண்டரின் தந்தை மாசிடோனியாவின் பிலிப் மன்னன் ஏதென்சுக்கு அருகில் இருக்கின்ற கிரீஸ் நாட்டின்மீது படையெடுத்து வந்தபோது அது கொடுமை எனக் கூறி களத்திற்குச் சென்று ஆயுதம் ஏந்தியதோடு, டெமஸ்தனிஸ் நிகழ்த்திய முதலாம் பிலிப் உரை எத்தகைய மகத்தானதோ, எத்தகைய எழுச்சி பெற்றதோ அதைப்போல, கி.மு. 344 ஆம் ஆண்டில் ஏதென்ஸ்மீது படையெடுத்து வந்தபோது நிகழ்ந்த இரண்டாம் பிலிப் மன்னனுடைய உரை எத்தகைய



மகத்தானதோ, எத்தகைய எழுச்சி பெற்றதோ அதைப்போல, கி.மு. 341 ஆம் ஆண்டில் பைசாண்டியத்தின்மீது பிலிப் மன்னன் படையெடுத்து வந்தபோது நிகழ்த்திய மூன்றாம் பிலிப் மன்னனுடைய உரை எத்தகைய மகத்தானதோ, எத்தகைய எழுச்சி பெற்றதோ அதைப்போல, ஏதென்ஸ் போர்க்களத்தில் வீழ்ந்து கிடந்த அதீனிய வீரர்களுக்கு ஆற்றிய உரை எத்தகைய எழுச்சி பெற்றதோ, மகத்தானதோ, அதைப்போல, மண்ணின் உரிமைக்காகவும், பகைவர்களை எதிர்ப்பதற்காகவும், வீரர்கள் போரிட்ட களங்களில் டெமஸ்தனிஸ் நாவிலிருந்து துள்ளிக் குதித்த ஆற்றல் மிக்க சொற்கள் வேலையும், வாளையும்விட எப்படி கூர்மையானவையாக, உயிர்த் துடிப்புள்ளவையாக உருவெடுத்து வீரர்களுக்கு உடல் வலிவையும், நெஞ்சில் உரத்தையும் ஊட்டுகின்றனவோ, அத்தகைய எழுச்சியை, உணர்ச்சியை தமிழக மக்களுக்குத் தந்திருக்கிறது அம்மா அவர்களுடைய நிதிநிலை அறிக்கை என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றில் இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 100 மலர்கள் பூக்கட்டும், 100 சிந்தனைகள் மலரட்டும் என்று சொல்லும் மாவோவின் சிந்தனைகளைப்போல, தேசத்தின் இருட்டுக்கு வெள்ளையடித்த கன்பூஷியசின் நூல்களைப்போல, சன் யாட்-சென்னின் எழுத்துகளைப்போல, இந்த நிதிநிலை அறிக்கை தமிழ்நாட்டிற்கு புது வாழ்வையும், புத்தொளியையும் தந்திருக்கிறது.

பிற்பகல் 12–15

சாதிகளற்ற ஒரு சமுதாயத்தை வளர்ப்பதற்காகவும், வர்க்கப் பேதங்களை ஒழிப்பதற்காகவும், பெண்ணடிமை ஒழிப்பிற்கு தான் நடத்திய புரட்சி வேள்வியில் தன்னையே தீக்கு தின்னக் கொடுத்திருப்பவர், 94 வயதிலும் உடல் நலிவை பொருட்படுத்தாமல், நோய் தந்த வேதனையையும் தாங்கிக்கொண்டு, ஊர், ஊராய் மக்களைத் தேடிச் சென்று, மூத்திரச் சட்டியுடன் மேடையில் அமர்ந்து மூன்று மணி நேரம் சுயமரியாதைக் கருத்துகளை முழங்கினாரே, அவர்தான் பெரியார். அந்த பெரியாருடைய கருத்துகள் காலத்தை எவ்வாறு வென்று நிற்கிறதோ, அதைப்போல இந்த நிதிநிலை அறிக்கையும் காலத்தை வென்று நிற்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொல்வார்கள். அண்ணா என்றால், அவருடைய எழுத்துக்களுக்கு அளவேயில்லை. அவருடைய பேச்சுக்கு எல்லையே இல்லை. தமிழ் நடை என்று சொன்னால், அவருடைய நடைதான். புரட்சிதன்னை ஒழுகுகின்ற மலைத் தேனில் தோய்த்தெடுத்து, உலகத்தை கட்டுரையால் கட்டிப் போட்டவர். விழுதுவிட்ட கருத்துக்குள் வெடி மருந்து விளையாடும். இதில் சிறு நெருப்பு பட்டுவிட்டால் கொழுத்த மதக் குடல் பறந்து வானில் தொத்தும். குறுக்கெலும்பு பொடிப் பொடியாய் நொறுங்கிவிடும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அண்ணாவின் பேச்சு என்றால், மாலை நேர வெட்டிப் பேச்சா அது.? பெருந்தலைவர் நமது அண்ணா பேசுகின்ற பேச்சு என்றால், அந்தப் பேச்சு இன்ப நாதம், பிஞ்சுருவம் பெற்று வரும் தென்றல் காற்றின் வீச்சு என்று நான் சொல்லமாட்டேன். அவை குழலுக்குள்ளே விளையாடும் சாரங்க இராகம். நெஞ்சை, மூச்சை, ஏன் உயிர் அறிவின் ஓட்டம் தன்னை முத்தமிட்டு, தூங்க வைக்கும் தமிழ் தாலாட்டாகும். உறங்கிக் கிடந்த தமிழ் சமூகத்தை உசுப்பி விட்ட அண்ணாவின் பேச்சு எத்தகைய சக்தி வாய்ந்ததோ, அத்தகைய எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கை என்று நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித நேயமும், மானுடப் பற்றும், கருணையும், காருண்யமும் மிக்கதொரு தலைவர். ஈரமும், வீரமும் கொண்ட இரண்டு விரல்களைக் கொண்டு சங்க நாதம் முழுங்கிய சரித்திர தலைவனின் கள்ளம் கபடமில்லாத சிரிப்பு, கட்டிக் கரும்பென காண்போரை ஈர்க்கும் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ஈகை, ஈரிலையாய் இந்த நிதிநிலை அறிக்கை காட்சி தருகின்றது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்து, இந்த மகத்தான அறிக்கையைப் பார்த்து, எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள் இதைச் சாதாரணம் என்று பல்வேறு குறைகளைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் வரையறுத்து தந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை சாதாரணம் இல்லை,



சரித்திரம். அம்மா வடிவமைத்துத் தந்த வரலாறு என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி குறையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறது ஒரு கட்சி. அந்தக் கட்சி குடும்ப மேளக் கட்சி என்று சொல்லலாம். அந்தக் குடும்ப மேளக் கட்சிக்கு இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி குறை சொல்வதற்கு எந்தவிதமான அருகதையும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சின்ன காஞ்சிபுரம் நடராஜன் அண்ணாதுரை அவர்கள் எந்தக் கொள்கையை வென்று எடுப்பதற்காக தன்னையே இரையாக்கிக் கொண்டாரோ, எந்த இலட்சியத்தை வென்று எடுக்க வேண்டும் என்பதற்காக தன்னையே கரைத்துக் கொண்டாரோ அந்த அண்ணாவினுடைய கொள்கையை மறைத்துவிட்டு, அண்ணாவை மறந்துவிட்டு, அண்ணன், தம்பிகளை வைத்து கட்சி நடத்துபவர்களுக்கு எல்லாம் நம்முடைய நிதிநிலை அறிக்கையைப் பற்றி குறை சொல்வதற்கு எவ்விதமான யோக்கிதையும் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல கோயம்பேடோ, நெப்போலியனைப் பற்றி, நெப்போலியனைப்போல் வீரம் பேசுகிறது. நெப்போலியன் இருந்தால்தான் வீரம் பேசும் என்பது வேறு கதை. இருந்தாலும் கோயம்பேடு கட்சி ஒரு நெப்போலியனைப்போல வீரம் பேசிக் கொண்டிருக்கிறது. திண்டிவனமோ இதுதான் சமயம் என்று மாம்பழம் வாங்கினால் ஒரு இஞ்சி மொரப்பா இலவசம் என்று பேசிக்கொண்டு வருகிறது. மீதமுள்ள கட்சிக்கு கிராமப்புறத்தில் சொல்வார்களே, ஈயம், பித்தளைக்கு காராச்சேவு என்று; அந்தக் கதைதான். ஆக, அப்படி எல்லாம் பார்க்கிறபோது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மிக அழகாக அந்தக் காலத்திலே சொன்னார். "உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டா, கெடுக்கிற நோக்கம் வளராது." (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மிக அழகாக சொல்வார் "உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டா, கெடுக்கிற நோக்கம் வளராது" என்று. இதைப்

பார்க்கிறபோது ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு வேட்டைக்காரன் அபூர்வமான ஒரு நாயை வளர்த்து வந்தான். அந்த நாயை எல்லோரிடத்திலும் காட்ட வேண்டும், அந்த நாயிடம் உள்ள அபரிமிதமான ஆற்றலை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். எனவே, அவன் தனது நண்பர்களை, தெரிந்தவர்களை எல்லாம் கடலுக்கு அழைத்துச் சென்று தன் கையில் வைத்திருந்த பந்தை கடலுக்குள் வீசினான். வீசியவுடனே அருகில் இருக்கும் நாயை அழைத்து அந்தப் பந்தை எடுத்து வா என்றான். உடனே விசுவாசமிக்க அந்த நாய் ஓடோடி போய், கடல் மேல், தண்ணீரின் மேல் நடந்து சென்று அந்தநப பந்தை எடுத்து வந்தது. ஒவ்வொரு முறையும் இவன் பந்தை வீச, அந்த நாய் கடல் நீரின் மேல் நடந்து சென்று அந்தப் பந்தை எடுத்து வந்தது. அருகில் இருப்பவர்களைப் பார்த்துக் கேட்டான் 'என்னுடைய நாயின் அபூர்வத்தைப் பார்த்தாயா' என்று. உடனே அருகில் இருப்பவர்கள் எல்லாம், வலது பக்கம் இருப்பவர்கள் எல்லாம் ஆச்சரியமாக வியந்து போய் பார்க்கிற சமயத்தில் இடதுபுறம் இருப்பவர்கள் சொன்னார்கள், ஆமாம், ஆமாம், உன்னுடைய நாயின் அபூர்வத்தைத் பார்த்தேன். உன் நாய்க்கு நீந்தத் தெரியவில்லையே என்று சொன்னார்கள். அபூர்வமாக நடக்கின்ற நாயைப் பார்த்து வியக்காமல், ஏதாவது குறை சொல்ல வேண்டும் என்பதற்காக நீந்தத் தெரியவில்லையே என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

பிற்பகல் *12–20*

அப்படிப்பட்ட குறைகளையும் குற்றங்களையும் விட்டுவிட்டு உண்மையாக இந்த நிதிநிலை அறிக்கை மக்களுக்கு மிகுந்த அளவில் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. வரியில்லாத பட்ஜெட் இப்போது மாத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை. 5 முறை மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வரியில்லாத நிதிநிலை அறிக்கைளை தமிழகத்திற்குத் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோபல் பரிசு பெற்ற கவிஞன் இரவீந்திரநாத் தாகூர் மிக அழகாகச் சொல்லுவார்; எங்கே அச்சமென்பது இல்லையோ, எங்கே அறிவு தலைநிமிர்ந்து நிற்கிறதோ, அந்தச் சுதந்திரத்தின் சொர்க்கத்திலே எனது தாயகம்



விழித்து எழட்டும் என்று சொல்லுவார். “Where the mind is free from fear, where the head is held high, in that heaven of freedom, let my country awake.” என்று மிக அழகாகச் சொல்லுவார் இரவீந்திரநாத் தாகூர். அப்படிப்பட்ட சுதந்திரச் சொர்க்கமாக தமிழ்நாடு திகழ்கிறது என்பதற்கு சான்றுதான் இந்த நிதிநிலை அறிக்கை என்பதை நான் பணிவுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான ஆட்சி என்பதற்கு எடுத்துக்காட்டுதான் இந்தியாவிலே முதன்முதலாக அமைந்துள்ள மாநில தரவு ஆய்வு மையம் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுகிறேன். வழக்குகள் தேங்கி விடாமலும், நீதி தூங்கி விடாமலும் இருக்க 169 புதிய நீதிமன்றங்கள். இல்லங்கள்தோறும் இல்லம் சிறந்து நாட்டின் நல்லறம் பெருக 3.5 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள். சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்றார்களே அத்தகைய விவசாயப் பெருமக்களுக்கு 5,600 கோடி ரூபாய் பயிர்க்கடன். பொது விநியோகத் திட்டம்மூலம் பலன் பெற ரூ.5,300 கோடி மானியம். இளைஞர் சக்திக்குள்ள இணையற்ற சக்தியை ஊக்குவிக்க இரண்டு இலட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி. கந்தையானாலும் கசக்கிக் கட்டி, கூழானாலும் குளித்துக் குடித்த நம் சுகாதார சிந்தனையை இன்னும் மேம்படுத்த 15 இலட்சம் வீடுகளுக்குக் கழிப்பறை வசதி. போக்குவரத்து நெரிசல் இல்லாத சென்னை என்ற கனவை நனவாக்க மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்கு ரூ.615.78 கோடி. 6.62 இலட்சம் மாணவ–மாணவிகளுக்கு எரிபொருள் செலவில்லாத இலவச வாகனமாக சைக்கிள். மின் நுகர்வைக் கணிசமாகக் குறைக்கும் எல்.இ.டி. பல்புக்கு வாட் வரி குறைப்பு. விவசாயிகளின் உற்ற நண்பனான மோட்டார் பம்ப்புகளுக்கு வரி குறைப்பு. உயிரி எரிபொருள்மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்திற்கு வரிவிலக்கு என இந்த நிதிநிலை அறிக்கையில் சிறப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. அப்படியிருக்கிறபோது குறை சொல்வதற்கு இங்கே என்ன இடமிருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு காலத்திலே அவர்கள் எல்லாம் வசனம் பேசியவர்கள். “கூலி உயர்வு கேட்டான் அத்தான், குண்டடிபட்டுச் செத்தான்” என்ற வசனமெல்லாம் தற்போதைய காலத்திற்கு எடுபடாது. தமிழ்நாடு முழுவதுக்குமான மொத்த

ஆளுமை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கரங்களில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது என்பார்கள். மயிலுக்கு, வாத்துக்கு அடைகாக்கத் தெரியாது என்பார்கள். அதைப்போல, இந்தக் குடும்ப மேளக் கட்சிக்கு எதிர்காலம் கிடையாது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சிக்கு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மகத்தான பணிகளைச் செய்திருக்கிறது. பொறுப்பிலே பிறந்து, தென்னல் புகழிலே கிடந்து, சங்கத் திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை நெருப்பிலே நின்று மக்களின் நினைவிலே நடந்தோர் என மறுப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளர்கின்றாள் என்று ஸ்ரீவில்லிபுத்தூரார் பாராட்டிய கன்னல் தமிழ்மொழிக்கு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற *5* இலக்கணம் கண்டு, அறம், பொருள், இன்பம் என்ற *3* நெறியை வென்று, இயல், இசை, நாடகம் நான்காம் தமிழை உருவாக்கி, இன்று இணையத் தமிழ் என்கிற எவரெஸ்ட்டை எட்டியுள்ள தாய்த் தமிழ்மொழிக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிற மகத்தான தொண்டு *170* புத்தகங்களை இலக்கமுறைப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்போல, முன்பு இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய பெருமை பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு உண்டென்று சொன்னால், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நடத்தியவர் என்ற பெருமைக்கு உள்ளானவர்கள் என்று சொன்னால், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே மலேசியாவினுடைய தலைநகர் கோலாலம்பூரில் ஒன்பதாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. இந்த எளியவன், சிறியவன் வைகைச்செல்வனை மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மலேசியா கோலாலம்பூருக்கு அனுப்பி வைத்தார்கள். கடந்த மாதம் அங்கே நடந்த உலகத் தமிழ் மாநாட்டிலே கலந்துகொண்ட அத்தனை பேரும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். அவர் தமிழுக்காகத் தொண்டு செய்திருக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் முற்றத்திலே மூன்றரை இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். மூன்றரை இலட்சம் பேர் குற்றுயிரும், கொலையுயிருமாகக் கொல்லப்பட்டார்களே, அப்போது அதிகாரத்தில் ஆட்சிப் பரிபாலனம் செய்தவர்கள், தமிழைக் கைவிட்டவர்கள், தமிழனைக் கைவிட்டவர்கள், தமிழ்ப் பண்பாட்டை மறந்தவர்கள் மத்தியிலே உலகத்தில் தமிழினத்தினுடைய தலைவியாக இருக்கிறவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாத்திரம்தான் என்று புளகாங்கிதம் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் *12—25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவோடும், அடக்கத்துடனும் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டாவது உலகத் தமிழ் மாநாடும், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடும், எட்டாவது உலகத் தமிழ் மாநாடும் நடைபெற்றது. இதற்கு நடுவிலே ஒரு மாநாட்டினை நடத்தினார்கள். குடும்ப மேளக் கட்சி ஒரு மாநாட்டினை நடத்தியது. அவர்களுக்குள்ளே மேளத்தினை அடித்துக்கொண்டார்கள். அவர்களுக்குள்ளாகவே நாதஸ்வரம் வாசித்துக்கொண்டார்கள். அப்படியிருக்கின்ற தருவாயிலே, அந்த மாநாட்டைப் பற்றி துளியும்கூட கருத்துகளை கோலாலம்பூர் மண்ணிலே எழுப்பவில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகு, நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒன்பதாவது மாநாட்டை கோலாலம்பூரில் கண்டார்கள் என்பதுதான் ஒரு மகத்தான வரலாற்று உண்மை என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா கிராமங்களில்தான் வாழ்கின்றது என்று சொன்னார் காந்தி அவர்கள். அந்தக் கிராமங்களில் உள்ள விவசாயத்தில் எத்தகைய மகத்தான மாற்றத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிதிநிலை அறிக்கைத் தந்திருக்கின்றது. அதைப்போல, எட்டையபுரத்துப் பாட்டன் பாரதி மிக அழகாகச் சொல்லுவான்,

"காக்கை, குருவி யெங்கள் ஜாதி—நீள்
கடலு மலையுமெங்கள் கூட்டம்"

என்று. மனிதநேயம் கடந்து உயிர் நோக்கத்துடன் விளங்கும் இந்த அரசு, கால்நடைப் பராமரிப்புக்கென தொகையை கணிசமாக

உயர்த்தியுள்ளது. அதைப்போல பட்டுக்குக் காஞ்சி. பன்னாட்டு ஆயத்த வடிவமைப்புக்கு திருப்பூரும், கைத்தறி நெசவுக்கு அருப்புக்கோட்டை, சின்னாளப்பட்டி, ஈரோடு, சங்கரன்கோவில் என்ற ஊர்கள் நிறைந்துள்ள மாநிலத்தில் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் விலையில்லா வேஷ்டி, சேலை திட்டத்திற்கு ரூ.*499.16* கோடியைத் தந்துள்ளது இந்த பட்ஜெட். ஊரக வளர்ச்சிக்கு, பள்ளிக் கல்விக்கு, உயர் கல்விக்கு என்று பல்லாயிரம் கோடி ரூபாய்களை ஒதுக்கி தமிழ்நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கை என்று சொன்னால், அவற்றில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் என்ற சொல்லுக்கு முழுமையாய் அர்த்தம் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு வரலாற்று உண்மையை உங்களுக்கு நான் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். முதல்வராக இருந்தார். இன்று மக்களுடைய முதல்வராக இருக்கிறார். எப்பொழுதும் அவருக்குச் செல்வாக்கு வளர்ந்துகொண்டே இருக்கின்றதே தவிர, மகத்தான வரலாற்றுத் தலைவியாக இருக்கிறார். இந்தியத் துணைக் கண்டமே, ஏன் உலகத் தமிழ் இனமே, *(மேசையைத் தட்டும் ஒலி)* புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பின்னாலே அணிவகுத்து நிற்கின்றது என்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மகத்தான பெருமைகளை இந்த இடத்திலே நான் பதிவு செய்ய ஆசைப்படுகின்றேன். ஏனென்று கேட்டால் எளிய மனிதனுக்குள், பசித்த வயிற்றுக்கும் அம்மா உணவகம்மூலம் பால் வார்த்ததில் அம்மாதான் முதல்வர். சமகால தொழில்நுட்ப வளர்ச்சியோடு போட்டிபோட முடியாமல் சவலைப் பிள்ளைகளான கிராமத்துப் பிள்ளைகளுக்கு, பின்தங்கிய பிள்ளைகளுக்கு, மிகவும் பின்தங்கிய பிள்ளைகளுக்கு, மடிக் கணினி கொடுத்து உலகின் ஓட்டத்தோடு சேர்ந்து ஓடவைத்ததிலும் அம்மாதான் முதல்வர். பள்ளி மாணவிகளுக்கு sanitary napkin, பெண் அரசு ஊழியர்களின் மகப்பேறு விடுப்பினை மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதமாக உயர்த்தியது, தாலிக்குத் தங்கம் என தேடித் தேடி பெண்களுக்குத் திட்டங்கள் தந்ததில் அம்மாதான் முதல்வர். *(மேசையைத் தட்டும் ஒலி)* நூற்றாண்டாய் தொடர்ந்த காவேரி சோகத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அரசிதழில் ஆணை வெளியிடச் செய்ததில் அம்மாதான் முதல்வர். *(மேசையைத் தட்டும் ஒலி)* முல்லைப்



பெரியாற்றின் உயரத்தை உயர்த்தி ஐந்து மாவட்ட மக்களின் வாழ்வைக் காத்ததில் அம்மாதான் முதல்வர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.எல்.சி. நிறுவனத்தின் பங்குகளை தனியாருக்குத் தாரைவார்க்க மத்திய அரசு முடிவெடுத்தபோது அந்தப் பங்குகளை வாங்கி அரசுடைமையாக்கியதில் அம்மாதான் முதல்வர். *(மேசையைத் தட்டும் ஒலி)* நாற்று நட்ட பூமியில் எரிவாயுக் குழாய்களை நட எண்ணெய் நிறுவனம் வந்தபோது தடுத்து நிறுத்தித் தடை போட்டதில் அம்மாதான் முதல்வர். *(மேசையைத் தட்டும் ஒலி)* முள்ளிவாய்க்காலில் ஒரு இனம் முழுவதும் அழித்தொழிக்கப்பட்ட மனிதப் பேரவலத்திற்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றித் தந்து தமிழ் இனத்தின் மானம் காத்ததில் அம்மா தான் முதல்வர். *(மேசையைத் தட்டும் ஒலி)* பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கழுத்தினை முத்தமிடத் தயாரான மரணக் கயிற்றை அறுத்து எறிந்ததிலும் அம்மாதான் முதல்வர். *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்று மேகதாது வரை எதிரிகளின் முயற்சிகளை முறியடிப்பதிலும் அம்மாதான் முதல்வர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா இல்லை என்றால் சத்தியமாய் இவையெல்லாம் சாத்தியமாகி இருக்காது. இது எல்லோருக்கும் தெரியும். எதிரிகளுக்கும் புரியும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* காலம் காலமாக தமிழனுக்குக் கனவாக இருந்ததையெல்லாம் நனவாக்கியது அம்மா ஒருவர்தான். அதனால்தான் மக்களின் மனதில் அம்மா என்றும் நிரந்தர முதல்வர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாண்டத் தாண்ட தடை வந்தது. தடை ஒவ்வொன்றிலும் விடை வந்தது. விரைவிலே விடை வரப்போகின்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* உறைய வைக்கும் பனிமலைகளையும், உருக்கிவிடும் எரிமலைகளையும், கடந்தவர் அம்மா. பொது வாழ்வில் எப்பொழுதுமே நிறைந்திருந்தன எதிரலைகள் அம்மா அவர்களுக்கு. அவற்றையெல்லாம் முறியடித்தது இரு இலைகள்

என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மாவின் தோளில் விழும் மாலைகளுக்குப் பின்னால் எத்தனை முட்கள். தமிழினம் பூக்களில் நடக்க எத்தனை இடர்களை இன்முகத்தோடு ஏந்திக்கொண்டார்கள். எத்தனை முட்களை பயணம் முழுவதும் பாதங்களில் வாங்கிக்கொண்டார்கள். வசைச் சொற்கள் எத்தனை? வஞ்சகம் எத்தனை? வசைச் சொற்கள் அத்தனையும் நலிவானது. வஞ்சகம் அத்தனையும் சருகாய்ப் போனது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்களையும் பூக்களையும் சமமாகப் பாவித்தது அம்மா அவர்களுடைய பக்குவம். அம்மாவினுடைய அந்த மகத்தான தாயுள்ளத்துக்கு ஒரு எடுத்துக்காட்டுதான் முட்களையும் பூக்களையும் ஒரே சம நோக்கத்தில் தாக்குதலையும் தழுவுதலையும் ஒன்றாகக் கருதுகின்ற ஓர் அரசியல் தலைவர்.

ஒன்றை அழகாகச் சொல்வார்கள். காலில் ஈரம் படாமல்கூட வாழ்க்கையைக் கடந்துவிடலாம். கண்ணில் ஈரம் படாமல் வாழ்க்கையை கடக்க முடியாது என்பார்கள். கண்ணில் ஈரம்படுகின்ற அத்தனை தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கின்ற ஒரே ஒப்பற்றத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென்று குடும்பம், தனக்கென்று வாழ்க்கை என்று எதுவும் இல்லாமல் நாட்டின் நலன் பொருட்டு வாழ்வைத் தியாகம் செய்த பெண் பீஷ்மராய் உலகம் அம்மாவைப் பார்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசியல் என்றால் சமரசம் என்று சொல்வார்கள். சமரசத்திற்கு ஆட்படுவதுதான் அரசியல், கூட்டணி என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால், அந்த அகராதி, அரசியல் அகராதியில் சுயநலத்திற்குச் சமரசம் என்று பெயர். எதற்காகவும், எவருக்காகவும் சமரசம் என்ற பேச்சுக்கே இடமளிக்காத ஒரு தன்மானச் சிங்கம்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



அவ்வப்போது அடிக்கும் அரசியல் புயல்களில் சாயாமல் உயர்ந்து நின்ற விருட்சம், வளைந்துவிடாமல் நின்ற நாணல் அம்மாவைத் தவிர வேறு எவருண்டு இந்த உலகில். ஒரு இனத்தின் சுமை முழுவதையும் தாங்கிக்கொண்ட தோள் அம்மாவின் தோள். சாமான்யனில் தொடங்கி சகலமானவர்களின் பிரச்சினைகளை உள்வாங்கிக் கொண்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நேற்றோடு இன்று கடந்து, நாளைய சமுதாயத்திற்குத் திட்டங்கள் தந்த சிந்தனை, அம்மாவின் சிந்தனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். உலகில் தனித் தனியாய் தாய்மார்கள் தாங்கிக்கொண்ட துன்பங்களையெல்லாம், உலகில் தனித் தனியாய் தாய்மார்கள் தாங்கிக்கொண்ட துன்பங்களையெல்லாம் தனி ஒருவராய்த் தாங்கியவர் அம்மாதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா வருவார். தூங்கவைக்க கணையாழை மீட்டும்போது அம்மா வருவார். தூங்கவைக்க கணையாழை மீட்டும்போது அம்மா வருவார். தூக்கத்தில் கனாக்கண்டு விழிக்கும்போது அம்மா வருவார். பூங்கொத்து மொட்டு அவிழ்ந்து சிரிக்கும்போது அம்மா வருவார். பூங்குயிலும் மாங்குயிலும் தளிரைத் தின்று, பூங்குயிலும் மாங்குயிலும் தளிரை தின்று தீங்குரலை காற்றிழையால் சேர்க்கும்போது அம்மா வருவார். திவலையாக, புனலாக பைம்புல் மீது தேங்கும் நீர்த் துளி கனவு காணும்போது அம்மா வருவார். திசையெல்லாம் அமைதியிலே திளைக்கும்போது அம்மா வருவார். முதலமைச்சராக அம்மா வருவார். (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிறார்கள். இந்த அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துகளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நிதிநிலை அறிக்கை தயாரிப்பது என்பது சாதாரணமான விவகாரம் அல்ல. ஒரு நாட்டினுடைய வருவாயைக் கணக்கிட வேண்டும். செலவைக் கணக்கிட வேண்டும். சேமிப்பைக் கணக்கிட வேண்டும். கடனைக் கணக்கிட வேண்டும். மத்திய அரசினுடைய நிதி ஆதாரங்களைக் கணக்கிட வேண்டும். அதற்குப் பிறகு திட்டங்களைத் தீட்ட வேண்டும். திட்டத்திற்கு இவ்வளவு இவ்வளவு பணம் என்று ஒதுக்க வேண்டும் என்று இவ்வளவு பெரிய பிரச்சினை அதில் அடங்கியிருக்கிறது.

*பிற்பகல் 12–35*

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஐந்தாவது முறையாக, அவற்றையெல்லாம் ஏற்கெனவே பெற்ற அனுபவத்தின் காரணமாக, அவரே சொன்னதுபோல ஐந்தாவது முறையாக நிதிநிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அவருக்கு இருக்கின்ற அனுபவத்தின் காரணமாக, நிரம்ப ஜாக்கிரதையாக இந்த நிதிநிலையைக் கையாண்டிருக்கிறார்கள். நான் ஏறத்தாழ இந்தச் சபையில் கிட்டத்தட்ட 40 ஆண்டுகாலமாக உட்கார்ந்திருக்கிறேன். 30, 35 ஆண்டுகால நிதிநிலை அறிக்கைகளைப் படித்துப் பேசியிருக்கிறேன். ஒவ்வொரு நிதியமைச்சரும் தனக்குத் தெரிகின்ற வல்லமையை அதிலே காட்டுவார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல நிதிச் செயலாளர் வாய்த்துவிட்டால் அவ்வளவுதான், காண்டீபம் கையிலே கிடைத்த மாதிரிதான். ஆகையினாலே நம்முடைய நிதியமைச்சருக்கும் அப்படிப்பட்ட காண்டீபம் கிடைத்திருக்கிற காரணத்தினால்தான் மிக இலாவகமாக, வண்டி விழுந்து இருக்கும் எங்கேயோ; இருந்தாலும், விழாத மாதிரி வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார். எனக்கு இருக்கிற மகிழ்ச்சி என்னவென்றால், இவ்வளவு பெரிய நிதிநிலை அறிக்கையில்கூட எங்களை மறக்காமல் இருக்கிறாரே என்பதுதான் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. இப்போது, மூன்று மாத காலம் பார்த்தீர்கள் என்றால், நிதியமைச்சர் அவர்களுக்குத் தூக்கமே வராது. நிதிநிலை அறிக்கையை முடிக்கிற வரைக்கும் தூக்கமே வராது. இதை முடிக்கிற வரையில் தூக்கமே வராது. ஆனால், அதிலேயும் எங்களை மறக்காமல், என்ன சொல்கிறார், நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், அதாவது முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வருவதற்கு முன்னால், தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இந்த மாநிலத்தினுடைய நிருவாகம், அதாவது எங்கள் ஆட்சி, தி.மு.க. ஆட்சி எப்படி இருந்தது என்றால், the State



administration was in total shambles. அதாவது நிருவாகமே உருக்குலைந்து போயிருந்தது என்றார். Shambles என்பதற்கு அகராதியிலே பார்த்தீர்கள் என்றால் ஆயிரம் அர்த்தங்கள் போடுகிறான். கசாப்புக் கடையில் இருக்கிறதுபோல, கை ஒரு இடத்திலேயும், கால் ஒரு இடத்திலேயும், வால் ஒரு இடத்திலேயும் என்று இருப்பதுபோல உருவம் ஒன்றுமே தெரியாது. அவ்வளவு நொறுங்கிப் போனது, உருக்குலைந்தது. உருவமே இல்லை. அரசாங்கமே இல்லை. யார் அமைச்சர் என்று தெரியவில்லை, யார் முதலமைச்சர் என்று தெரியவில்லை, யார் எங்கு உட்கார்ந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. முதலமைச்சர் அலுவலகத்தில் யார் உட்காருகிறார்கள் என்று தெரியவில்லை, நிருவாகத்தை எப்படி செய்கிறார்கள் என்று தெரியவில்லை, செயலாளர்கள்தான் ஆளுகிறார்களா என்று தெரியவில்லை. அவருக்கு மேல் உள்ள அதிகாரி ஆளுகிறார்களா என்று தெரியவில்லை. அப்படி இருந்தது எங்கள் ஆட்சியில், என்று சொல்கிறார். உருக்குலைந்துபோனது என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருக்குலைந்து போனது என்று சொன்னது, மதுரையில் சன் டி.வி. அலுவலகத்தை எரிக்கும்போது 2, 3 உயிர்கள் உருக்குலைந்து போனது பாருங்கள். அதுபோல நிருவாகமே உருக்குலைந்து போனது. சட்டம்–ஒழுங்கு கெட்டுப் போனது. பாவம் இரண்டு பொறியாளர்கள் இறந்து போனார்கள். அப்படி உருக்குலைந்து போனது என்று சொன்னார் அவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த உறுப்பினர் 40 ஆண்டுகாலம் இதே சட்டசபையில் அனுபவம் வாய்ந்தவர் என்று சொன்னார். நிதிநிலை அறிக்கை அளித்திருக்கிற நிதி அமைச்சருடைய அந்த வரவு–செலவுத் திட்டத்திலே உருக்குலைந்து போயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார் என்றார். இதற்கு

[திரு. செல்லூர் கா. ராஜூ] [2015 மார்ச் 30

எடுத்துக்காட்டாக நான் வேறு எங்கும் போய் பார்க்கச் சொல்லவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சியினுடைய தலைவராக இருக்கின்றவர், அன்றைக்கு துணை முதலமைச்சராக இருந்தார். அவர்களுடைய ஆட்சியில், அவருடைய துணை முதலமைச்சர் ஒரு முறையாவது மதுரையில் வந்து அரசியல் பொதுக் கூட்டத்திலே பேசியதாக வரலாறு உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்து ஆண்டுகால ஆட்சியில். (குறுக்கீடு) நாங்கள் சொல்கிறோம் இப்போது அவரே இருக்கிறார். ஒரு நிமிஷம். (குறுக்கீடு) அன்றைக்குச் சட்டம்–ஒழுங்கு எப்படி இருந்தது என்பதற்கு ஒரு அத்தாட்சிக்குச் சொல்கிறேன். அவரே சொல்லலாம். அந்தச் சட்டம்–ஒழுங்கு எவ்வளவு மோசமாக இருந்தது என்பதற்கு அவரே எடுத்துக்காட்டு. அவரே சொல்லட்டும் ஒருமுறை நான் பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறேன் என்று. ஆனால், என் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை முறை அரசியல் நடத்தியிருக்கிறார், எத்தனை முறை பொதுக் கூட்டத்திலே பேசியிருக்கிறார் இந்தச் சட்டத்தை இந்தப் பாதுகாப்பை எதிர்க்கட்சியாக இருந்தாலும் கொடுத்திருக்கிற ஒரே வல்லமை படைத்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதற்கு இதுவே ஒரு சான்று என்று சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** சபாநாயகர் அவர்களே, நாங்கள் அவர்களை ஒன்றும் சொல்லவில்லை. அவர் சொன்ன definition-க்கு நான் விளக்கம் சொல்கிறேன். இந்த மாதிரி நாங்கள் ஆகிவிட்டோம் என்று அவர் சொல்கிறார் என்று சொன்னேன். அவர், ஒருமுறையாவது இவர் வந்திருக்கிறாரா என்று கேட்டார். அது என்னவென்றால், லாலி பாட வேண்டாமே என்பதற்காகச் சொல்கிறோம். உங்கள் முதலமைச்சர் வந்திருக்கிறார்களா? ஆறு வருடத்திற்கு இல்லை, அதான் சார் அவரவர்களுக்கு நேரம், சந்தர்ப்பம் இருக்க வேண்டும். நான் விட்டுவிடுகிறேன். இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள் என்ன சொல்கிறார் என்றால் எங்களுடைய ஆட்சி உருக்குலைந்து போய்விட்டது என்று. அதற்குப் பிறகு நாங்கள் வந்த பிறகு அதேவேகத்தில் Amma acted swiftly and put the State back on the growth path and fulfilled her electoral promises. வந்ததற்குப் பிறகு, ஒன்று நாட்டின் வளர்ச்சி, இரண்டாவது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்கிறார்கள்.



2015 மார்ச் 30] [திரு. துரைமுருகன்]

பிற்பகல் 12–40

இப்போது எல்லோரும் சொல்கிறோம். எங்கள் ஆட்சி உருக்குலையாத ஆட்சி என்று நான் சொல்வேன். எங்களதுதான் உருக்குலையாத ஆட்சி என்று அவர்கள் சொல்வார்கள். இதில் ஒன்றும் பெரிது கிடையாது. அவரவர்கள் ஆட்சி உருக்குலையாதது என்று அவரவர்கள் சொல்வார்கள். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு'. ஆனால் இதை யார் தீர்மானிக்கிறது? Is it the D.M.K. Government or the A.I.A.D.M.K. Government? (குறுக்கீடுகள்) கவிஞர் கண்ணதாசன் சொன்னார், 'வென்றவன் சொன்னதெல்லாம் வேதமாம்' என்று ஜெயித்துவிட்டதால் அப்படி அல்ல. ஆனால், உங்களுடைய ஆட்சியில் உருக்குலைந்ததா எங்களுடைய ஆட்சியில் உருக்குலைந்ததா என்று நிருவாகத்தைப் பார்த்துச் சொல்ல வேண்டும். சொல்லக்கூடியது யார்? இதைத் தீர்மானிக்கிறது யார் என்று கேட்டீர்கள் என்றால், ஒவ்வோர் ஆண்டும் நாம் போடுகிற திட்டங்கள், ஒதுக்குகிற பணம் மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா, அந்தத் திட்டம் சரியாகப் பயன்பட்டிருக்கிறதா, அதன் நிலைமை என்ன என்பதை ஒவ்வோர் ஆண்டும் இந்த பட்ஜெட் முடிந்த உடனே, ஒரு அறிக்கையை இந்தியக் கணக்காய்வுத் துறை, தணிக்கை அதிகாரியின் தணிக்கை முடிந்த பிறகு ஒவ்வோர் ஆண்டும் இந்த பட்ஜெட்மீது ஒரு review கொடுக்கிறார்கள். அந்த review-ஐ நாம் பார்க்கிறபோதுதான் எப்படி நாம் செய்திருக்கிறோம் என்பது தெரியும். நாம் ஒதுக்குகிற பணம் எல்லாம் சீராகப் போயிருந்தால், மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருந்தால், அது உருப்படுகிற ஆட்சி. போன பணம் திரும்பி வந்தால் அது உருப்படாத ஆட்சி என்று அவர்கள் சொல்கிறார்கள். அந்த வகையிலே நீங்கள் பார்த்தீர்கள் என்றால், இவர்களுடைய ஆட்சியில் பார்த்தீர்கள் என்றால், நான் 2011, 2012, 2013 Audit Report எல்லாவற்றையும் எடுத்துப் படித்துப் பார்த்தேன். இதிலே பார்த்தீர்கள் என்றால், 2012 ஆம் ஆண்டு இவர்களுக்கு ஒரு surrender ஆண்டு. Surrender ஆண்டு என்றால், பெருவாரியான இலாகாக்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் செலவே செய்யாமல் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அதாவது 109 இனங்களுக்கு

[திரு. துரைமுருகன்] [2015 மார்ச் 30

ஒதுக்கப்பட்டது, எவ்வளவு? 5,110 கோடி ரூபாய். Finance Secretary–க்காகச் சொல்கிறேன், இந்த 5,110 கோடி ரூபாயை— 2012 ஆம் ஆண்டு report எடுத்து படித்துப்பாருங்கள்— திருப்பி அப்படியே கொடுத்துவிட்டார்கள். 109 இனங்களுக்கு ஒதுக்கீடு செய்து, செலவு செய்து, திட்டத்தின் பயனை மக்கள் அனுபவித்ததுபோக, அப்படியே செலவு செய்யாமல் 5,110 கோடி ரூபாய் surrender பண்ணிவிட்டார்கள் உங்கள் ஆட்சியிலே. இரண்டாவது,. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், ஆண்டுத் திட்டங்களின்மூலமாக வழங்கப்படுகின்ற நிதி, துறையின் மூலமாக செலவழிக்கப்பட்டு, செலவழிக்கப்படாமல் 109 இனங்களுக்கு உரிய நிதி திருப்பி தரப்பட்டிருக்கிறது என்ற தகவலை இங்கே எடுத்துச் சொன்னார்கள். பொத்தாம் பொதுவாக அவர்கள் அப்படி சொல்லக்கூடாது. எந்தத் துறையில் நிதி சென்றது. எந்தத் துறையில் எவ்வளவு பணம் திருப்பிப் பெறப்பட்டது என்ற விவரங்களைச் சொன்னால் அதற்குரிய விளக்கத்தினை நாங்கள் அளிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலாகாவோடு சேர்த்துச் சொல்கிறேன். அந்த surrender 2012 ஆம் ஆண்டு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது 2012 ஆம் ஆண்டு Comptroller and Auditor General Report, page 79, 74 இனங்கள். ஒதுக்கப்பட்ட பணம் 4,359 கோடி ரூபாய். 100 சதவீதம் அப்படியே திருப்பி அனுப்பப்பட்டது, ஒன்று. இரண்டாவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் திரும்பவும் உங்களிடம்



2015 மார்ச் 30] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கேட்கிறேன். எந்த இனங்கள்? 74 இனங்கள் என்று சொல்கிறீர்களே, எந்த இனங்கள் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) எந்த இனங்கள் என்று அவர் குறிப்பிட்டுச் சொன்னால், அந்த இனங்களினுடைய பணம் செலவழிக்கப்படாமல் எப்படித் திரும்பி வந்தது என்பதற்கான விவரங்களை நான் இங்கே பதிலளிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஏற்படுகிற சந்தேகத்தை உங்களுக்கு வைக்கிறோம். நிதி அமைச்சர், உங்களுக்கு ஒரு இலாகா இருக்கிறது. நீங்கள் விளக்கம் சொன்னீர்கள் என்றால் சரி, Correct me, if I am erroneous. அதுபற்றி எனக்கு ஒன்றுமில்லை. இருக்கிற விளக்கத்தை நான் சொல்கிறேன். துரைமுருகன் சொன்னது தவறு. அப்படியில்லை, இப்படி என்று சொன்னால், if it is correct, I can accept it. What is wrong in it? அதேமாதிரி 100 சதவீதம் ஒதுக்கப்பட்டது 4,359 கோடி ரூபாய். அதேபோல், 2012 ஆம் ஆண்டில் 78 சதவிகிதம். அதாவது 748 இனங்களுக்கு ஒதுக்கப்பட்டது. எவ்வளவு பணம் என்றால் 14 ஆயிரத்து 850 கோடி. . .

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர் திரும்பத் திரும்ப இனங்கள், இனங்கள் என்று பொத்தாம் பொதுவாக எண்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். எந்த இனத்தில், எந்தத் துறையில் எந்தத் திட்டங்களின் அடிப்படையில் சென்ற நிதி திரும்பப் பெறப்பட்டிருக்கிறது என்ற விவரங்களைச் சொன்னால் அதற்குரிய பதில் தரப்படும் என்பதை மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, பொதுவாக இனங்கள் என்று சொல்லாமல் தவிர்ப்பது நலம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** இந்தப் புத்தகத்தில் நிறையப் பக்கங்கள் இருக்கின்றன. இவ்வளவையும் படிக்கட்டுமா? நீங்கள் படியுங்கள். சரி, நான் இப்போது படிக்கின்றேன். இணைப்பு 2.5, பார்வைப் பத்தி 3.45, மொத்த நிதி ஒப்பளிக்கப்பட்ட நேர்வுகள், வரிசை எண் 1, மானிய எண் 043, மானியம் பொது நிருவாகத்தின் பெயர்–பொது நிருவாகம். ஒதுக்கப்பட்டது 32 கோடியே 60 இலட்சம். அதே நீதி நிருவாகம், மானிய எண் 043, அதேமாதிரி, நீதி நிருவாகம், வேளாண்மை, எரிபொருள், கைத்தறி எல்லாம் இருக்கிறது. எல்லா இலாகாக்களிலும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தெந்த இலாகாக்களில் எவ்வளவு நிதி என்று தெளிவாகச் சொல்லுங்கள். எந்த இலாகா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள் இல்லையா?

**திரு. துரைமுருகன்:** நான் இலாகாவைச் சொல்லாமல் கலாக்காவையா சொல்லிக்கொண்டிருக்கின்றேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த இனம் என்றுதான் முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். (குறுக்கீடு) எந்த இனம் என்று நீங்கள் சரியாகச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இதுதான் ஐயா, நீதி இலாகா, மக்கள் நல்வாழ்வு, நெடுஞ்சாலைத் துறை, வீட்டு வசதித் துறை, தொழில், பாசனம், வருவாய், பள்ளி, சமூக நலச் சீர்த்திருத்தம், எல்லாத் துறைகளையும் ஐயா. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அரசின் சார்பாக நிதி ஒதுக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள், உட்காருங்கள். பொதுவாக வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அரசின் சார்பாக நிதி ஒதுக்கப்படுகிறது. (குறுக்கீடு) பொதுவாக, அரசின் சார்பாக வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. உங்களுக்குக் கேட்கிறதா? அந்த நிதியைச் செலவழிக்கும்போது சில பல பிரச்சினைகளினால் தாமதங்கள் ஏற்படுவது எந்த அரசிலும் நடைபெறுகின்ற நடைமுறை. அந்த நிதி திரும்ப அரசு கஜானாவுக்கு வந்தால் செலவழிக்க முடியாது



என்பது அல்ல. அதே திட்டங்களுக்கு அடுத்த வருடம் spill over–ஆக சென்று அந்த நிதி செலவழிக்கப்படுவதுதான் அரசின் நடைமுறை. இந்த விஷயத்தை மூத்த உறுப்பினர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் நன்றாகவே அறிந்திருக்கின்றார், புரிந்திருக்கின்றார், ஏதாவது குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டுமென்பதற்காக இன்றைக்கு இவர் தன்னுடைய உரையை ஆரம்பித்திருக்கிறார். (குறுக்கீடு) அதாவது ஒட்டுமொத்த நிதியும் ஒரு துறையின் சார்பாக செலவழிக்கப்படவில்லை என்று ஏதாவது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னால், அதற்குரிய விளக்கத்தை நாங்கள் தருவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் என்னைவிட ஐந்து வருடம் அதிகமாக பட்ஜெட் தயார் பண்ணியிருக்கிறீர்கள். நான் ஏதோ, எம்.ஏ.வில் பப்ளிக் பைனான்ஸ் ஒரு பேப்பர்தான் படித்தேன். எனக்குள்ள அந்த அறிவை வைத்து நான் சொல்கிறேன். நான் கேட்பது என்னவென்றால், நீங்கள் 14 ஆயிரத்து 850 கோடி ரூபாயை ஒதுக்கி, 734 இனங்களுக்கு திருப்பி வந்துவிட்டது. இரண்டு வகை உண்டு. surrender என்று ஒன்று, re-appropriation என்று ஒன்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு கேள்வியை மட்டும் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய ஆட்சியில் நீங்கள் திட்டம் போட்டு ஒதுக்கிய நிதி முழுவதுமாகச் செலவழிக்கப்பட்ட வரலாறு உண்டா? திரும்பி வராமல் நீங்கள் ஆட்சி நடத்திய நிலை இருக்கிறதா? அப்படி இருந்தால் உங்கள் விவாதத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் ஆண்ட காலங்களில், ஏதாவது ஒரு வருடத்தில் ஒதுக்கப்பட்ட நிதி முழுவதையும் செலவழித்த வரலாறு உண்டு என்று சொன்னால் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** இந்தக் கேள்வியை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும். அப்பொழுதெல்லாம் கொடுத்துவிடுவார்கள். எங்கள் ஆட்சியில் நடந்த ரிப்போர்ட்டை எடுத்துப் பார்த்தால் இருக்கும், நான் இல்லையென்று சொல்லவில்லை. இதைவிட அதிகம் இருக்கலாம், குறைவாக இருக்கலாம். ஆனால், இதை ஏன் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், நாங்கள் உருக்குலைந்த ஆட்சி, இப்படியெல்லாம் கன்னா பின்னா என்று செலவு செய்தோம். உருவான, மெருகான ஆட்சி நடத்துகின்ற நீங்கள் இப்படிப் பண்ணலாமா என்றுதான் கேட்கிறேன். அவ்வளவுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* இரண்டாவது, *(குறுக்கீடு)* ஐயோ, நீங்கள் எழுந்திருக்க வேண்டாம், நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** உங்களுடைய ஆட்சி உருக்குலைந்த ஆட்சி என்பதை ஒத்துக்கொள்கிறீர்கள். உங்களுடைய ஆட்சி உருக்குலைந்த ஆட்சி என்று நாங்கள் சொன்னதை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவ்வளவுதானே? அதற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

*பிற்பகல் 12—50*

**திரு. துரைமுருகன்:** நேற்று, உங்கள் ஆட்சியைப் போன்றுதான் நாங்கள் வாங்குகிறோம் என்றீர்கள் அல்லவா? அதுபோன்றுதான், நீங்கள் சொன்னதை நான் சொல்கிறேன். அதேமாதிரி இன்னொன்றையும் நான் ஒத்துக்கொள்கிறேன். எப்பொழுது என்றால், ஒதுக்கீடு ஒன்று surrender ஆகும்; இல்லையென்றால் re-appropriate செய்வார்கள். எப்போது re-appropriate செய்வார்கள் என்றால் ஒதுக்கப்பட்ட இனத்திற்கு செலவு செய்தது போக மீதி இருந்தால் re-appropriate செய்வார்கள். ஆனால் நீங்கள் மொத்த பணத்தையும் re-appropriate செய்திருக்கின்றீர்கள். Allocation முழுவதும் அப்படியே வந்திருக்கின்றது. இன்னும் ஒன்று, Capital expenditure-ல் பணம் திரும்பி வரலாம், surrender பண்ணலாம். ஏனென்றால் நாம் ஒரு dam கட்டுவதற்கு பணம் ஒதுக்குகின்றோம், இடம் கிடைக்காமல் இருக்கலாம், அது சம்பந்தமாக வழக்கு ஏதாவது தொடரப்பட்டு dam கட்ட முடியாமல் பணம் நின்று போய்விடும். அந்த மாதிரி சமயத்தில் அந்தப் பணம் surrender ஆகும். அப்போது re-appropriate செய்யலாம். ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கின்றீர்கள் என்றால் Revenue Expenditure-லே வந்திருக்கின்றது அதையும் re-appropriate செய்திருக்கின்றீர்கள். 2013–ல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.9 கோடியை ஒதுக்கியிருக்கின்றீர்கள். அந்த 9 கோடி ரூபாயை நீங்கள் வேறு ஒரு இலாகாவிற்கு மாற்றிவிட்டீர்கள். அது ஏன் என்று demand-ஐ எடுத்துப் படித்துப் பார்த்தேன். *(குறுக்கீடு)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கின்றார். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட ஒன்பது கோடி ரூபாய் எந்தச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து விளக்க வேண்டும். *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** எனக்கு என்ன தெரியும்? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள்தானே குறிப்பை வைத்துப் படித்துக்கொண்டிருக்கின்றீர்கள். அப்போது அந்தக் குறிப்பு உண்மைக்கு மாறானதா என்பதைத் தெரியப்படுத்தவும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் இதுபோன்று சில இனங்களில் சேமிப்பு ஏற்படுவதும், அதே ஆண்டு மறு நிதி ஒதுக்கத்தை எதிர்பார்த்து செயல்படுத்தப்படும் திட்டங்களுக்குச் செலவிடுவதும் நடைபெறுவதால் இதில் எந்தவிதமான தவறும் இல்லை. இந்த நிதி எதையும் நாங்கள் வீணாகச் செலவழிப்பதில்லை. வீணாக்குவதும் இல்லை. அது அடுத்த ஆண்டினுடைய திட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இலாக்காவிற்கு ஒதுக்கிய நிதியில் மீதி இருந்தால் அந்த நிதியை அப்படி மறு ஒதுக்கம் செய்யலாம். நம்மைப்போன்ற எம்.எல்.ஏ.-க்கள் என்ன செய்வோம் என்றால், மார்ச் மாத இறுதியில் அதிகாரிகளிடம் சென்று நிதி ஒதுக்கீடு ஏதாவது மீதம் இருந்தால் அந்த நிதியில் ஏதாவது சாலை அமைத்துத் தாருங்கள் என்று கேட்போம். அதைப் பற்றி நான் கேட்கவில்லை. ஆனால் இங்கே நான் சொல்வது ஒதுக்கப்பட்ட நிதி முழுவதையும், அப்படியே re-appropriate செய்கிறீர்கள். Revenue Expenditure-ல் செய்கின்றீர்கள். 2013–ல் No 45 Grant-ல் Social Welfare and Nutritious Meal Programme–க்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கின்றீர்கள் என்றால் ரூ.5,44,39,000 ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பணத்தை அப்படியே re-appropriate செய்துவிட்டீர்கள். அது என்னவென்று பார்த்தால், இது அங்கன்வாடிக்கு வந்தப் பணம். மத்திய சர்க்கார் கொடுத்த பணம். அந்தப் பணத்தைத் தூக்கி அப்படியே வேறு ஒரு திட்டத்திற்குப் போட்டுவிட்டீர்கள். இது Revenue Expenditure. ரெவின்யூ சைடில் செலவு செய்திருக்க வேண்டும். அதேபோல் ஆதி திராவிடர் நலன் Grant-ல் 9 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதையும் re-appropriate செய்துவிட்டீர்கள். அதற்கான காரணம் என்ன என்பதை நான் demand-ஐ எடுத்துப் படித்துப்பார்க்கும்போது பழங்குடியினர் மேம்பாட்டுக்காக இந்திய அரசமைப்பு கூறு 275(1)–ன்கீழ் மத்திய அரசு வழங்கும் நிதி அந்த நிதி. பழங்குடியினரின் மேம்பாட்டுக்காக மத்திய அரசு கொடுத்த பணம் அந்த 9 கோடி ரூபாய். அந்த ஒன்பது கோடி ரூபாயை நீங்கள் வேறு ஓர் இலாகாவிற்கு அனுப்பிவிட்டீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்கள் தொடர்ந்து தவறான கருத்துகளை இந்த அவையில் பதியவைத்துக்கொண்டிருக்கின்றார். அதாவது ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு இலாகாவிற்கு மாற்றப்பட்டுள்ளதாக தவறான செய்தியை இங்கே தந்துகொண்டிருக்கின்றார். அது எந்த இலாக்கா என்று நீங்கள் குறிப்பிட வேண்டும். இல்லையென்றால் அவை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Report of the Comptroller and Auditor General of India, State Finance for the year ended March 2013, Government of Tamil Nadu, page 104. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய வாதத்தில் ஏதாவது சத்து, சாரம் இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள். தேவையில்லாமல் இனங்கள் அது, இது என்று நீங்கள் பொத்தாம்பொதுவாகப் பேசுவதில் அர்த்தமே கிடையாது. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களாக இருந்தாலும் சரி, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களாக இருந்தாலும் சரி மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற நிதியாக இருந்தாலும் சரி, உதாரணத்திற்கு மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற நிதியோடு மாநில நிதியிலிருந்து அதிக அளவில் தன்னுடைய பங்கினை அளித்து தமிழக மக்களுக்கு வழங்குவதுதான் வரலாறு.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன் கேட்டுக்கொள்ளுங்கள். சமூக நலத் திட்டங்கள் மூலமாக முதியோர்கள், ஆதரவற்றோர்கள், ஆதரவற்ற விதவைகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இதில் நபர் ஒருவருக்கு மத்திய அரசு எவ்வளவு கொடுக்கிறது என்றால், ரூ.200, சில இனங்களில் ரூ.300. நீங்கள் எவ்வளவு கொடுத்தீர்கள் என்றால் ரூ.500. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 800 ரூபாயைச் சேர்த்துக் கொடுத்து 1,000 ரூபாயாக இன்றைக்கு ஓய்வூதியம் வழங்குகின்ற ஒரே அரசு இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதனை இங்கே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

பிற்பகல் 12–55

அதேபோல, இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டம். நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டத்திற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கிய ஒரே மாநிலம் இதய

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மாநிலம்தான் என்பதை நீங்கள் இங்கே புரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். சிவசங்கர், உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மத்திய அரசிடமிருந்து வருகின்ற எந்த நிதியும் விரையம் ஆக்கப்படுவதில்லை. அங்கிருந்து வருகின்ற நிதியின் Head–ஐ மாற்ற முடியாது. நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். அதோடு நிதியைச் சேர்த்துப் போட்டுத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் மக்கள் நலத் திட்டங்களுக்கு வழங்குகின்றார்களேயொழிய, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் சொன்னதைப்போல, அந்த நிதியை விரயம் ஆக்குவதில்லை. அதனுடைய சேமிப்பை மறு நிதி ஒதுக்கமாக அடுத்த நிதியாண்டிற்கு ஒதுக்குவதுதான் வழக்கமான நடைமுறை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இந்த சப்ஜெக்ட்டை விட்டுவிட்டு, வேறு சப்ஜெக்ட்டைப்பற்றி பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேறு சப்ஜெக்ட்டைப்பற்றி பேசுங்கள். (குறுக்கீடு) ஆதாரம் இருந்திருந்தால், நீங்கள் முதலிலே என்னிடம் கொண்டுவந்து காண்பித்துவிட்டுப் பேசியிருக்க வேண்டும். (குறுக்கீடு) சரி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். இது ஏற்கெனவே இந்த அவையில் வைக்கப்பட்ட அறிக்கை–House Property. மூன்றாவதாக, எதிலிருந்து படிக்கிறீர்கள் என்று அவர் கேட்டார். நான் இந்தப் புத்தகத்திலிருந்து படிக்கிறேன். அவர் எதற்கு மாற்றப்பட்டிருக்கிறது என்று கேட்டார். எதற்கு மாற்றினீர்கள் என்பது என்னுடைய வேலை அல்ல. மாற்றியிருக்கிறது என்று சொல்வதுதான் என்னுடைய வேலை. நீங்கள் அதற்கடுத்து எங்கு மாற்றப்பட்டிருக்கிறது என்றுதான் கேட்க வேண்டும். Nutrition–க்கு கொடுத்த பணத்தை மாற்றியிருக்கிறீர்கள். Disabled இருக்கிறார்கள் அல்லவா அவர்களுக்கு ஒதுக்கிய தொகையை மாற்றியிருக்கிறீர்கள். நான் கேட்பது இது Revenue Expenditure. இந்த Revenue Expenditure-ஐகூட மாற்றியிருக்கிறீர்களே என்று கேட்டால், திருப்பி அவர் என்னிடத்தில் வந்து எங்கே



மாற்றினோம், எங்கே மாற்றினோம் என்று கேட்கிறார். நீங்கள் சொல்கிற மாதிரி நானும் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) Please Sir, நான் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கேட்ட அத்தனை வினாக்களுக்கும் உரிய பதில் என்னுடைய பதிலுரையிலே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** திரும்பவும் சொல்கிறேன், நம்முடைய Finance Minister. . .

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சொன்னவுடனேயே, நீங்கள் முதலிலே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு உறுப்பினர் முதலமைச்சரைப் பார்த்து இந்த மாதிரி சொல்வது முறையல்ல. (குறுக்கீடு) முறையல்ல. (குறுக்கீடு) இந்த மாதிரி நீங்கள் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) தனிப்பட்ட முறையில் பேசக்கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொன்னவுடனேயே, நீங்கள் அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, அடுத்த பிரச்சினைக்குச் சென்றிருக்க வேண்டும். தொடர்ந்து அந்த ஒரு பிரச்சினையையே நீங்கள் கையில் எடுத்துக்கொண்டு, விவாதிப்பது என்பது சரியான நடைமுறையில்லை என்பதை உங்களுக்கு முதலிலே தெரியப்படுத்துகிறேன். 40 ஆண்டுக்கால அனுபவம் உங்களுக்கு இருக்கிறது, இருக்கிறது என்று நீங்களாகவே சொல்லிக்கொள்ளலாம். அதை மக்களெல்லாம் சொல்ல வேண்டும். மற்ற உறுப்பினர்களெல்லாம் உங்களைப் புகழ்ந்து பேச வேண்டும். அதை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடு) நீங்கள் வேறு சப்ஜெக்ட்டைப்பற்றி பேசுங்கள்.

பிற்பகல் 1–00

**திரு. துரைமுருகன்:** மூன்றாவதாக, தெளிவே இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கையை நீங்கள் சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்று இந்த report சொல்கிறது. (குறுக்கீடுகள்) இதைக்கூட சொல்லக்கூடாதா? Sir, "large scale booking under the minor head 800" என்று ஒன்று இருக்கிறது. அது என்னவென்று கேட்டீர்கள் என்றால், "800-Other Receipts" என்பது ஒரு Head. "800-Other Expenditure" என்பது மற்றொன்று. Booking of receipt or expenditure under the minor head "800-Other Receipts" and "800-Other Expenditure" is considered opaque classification of receipts and expenditure as these heads do not disclose the schemes, programmes, etc., to which the amounts relate. These minor heads normally accommodate the receipts / expenditure which cannot be classsified under the available programme minor heads or due to incorrect identification of expenditure under the available heads of account at the stage of budget preparation என்கிறது தணிக்கை அறிக்கை. இவ்வாறு எதற்காக நிதித் துறையில் வைத்துள்ளார்கள் என்று கேட்டால், சின்ன, சின்ன தொகைகளைத்தான் அந்த Head–ல் போடுவார்கள். இல்லாவிட்டால் உங்களுக்கு ஒதுக்கும்போது கணக்கில் உதைக்கும். அதனால் அந்த Head–ல் போடுவார்கள். ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டால்–"During the 2012–13 under 10 major heads in the Revenue and Capital sections expenditure aggregating Rs.7,464.98 Crore was classified under the minor head "800-Other expenditure". Other expenditure–ல் கொண்டு போட்டுவிட்டார்கள்.

The entire expenditure under "Flood Control and Drainage" and "Capital Outlay on Other Administrative Services" were classified under the omnibus minor head 800-Other Expenditure–instead of depicting the same under relevant minor heads below the functional major heads in the Finance Accounts. எதையெல்லாம் கொண்டு போடுகிறார்கள் என்று பாருங்கள். எல்லாம் பெரிய, பெரிய சமாச்சாரம்.

Similarly, under eight major heads, Revenue Receipts aggregating Rs.1,374.60 Crore were classified under minor head 800-Other Receipts. The entire receipts under "Family Welfare", "Urban Development" and "Other Rural Development" programmes were classified under the omnibus minor head "800-Other Receipts".



Classification of the large amount under the omnibus minor head "800-Other Expenditure/Receipts" reflected lack of transparency in financial reporting." என்கிறது அறிக்கை.

Finance report–லே ஒளிவு மறைவின்மை இல்லை. ஏதோ சித்த வைத்தியம் பண்ணியிருக்கிறீர்கள். Finance-லே தெளிவில்லை என்று, நான் சொல்லவில்லை. அறிக்கையில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவரைக் கேட்டால் எனக்குத் தெளிவில்லை என்கிறார்.

இன்னொன்று, இவரே சொல்லிவிட்டார். 3–வது முறையாக ஆட்சிக்கு வந்த பிறகு நாங்கள் major ஆக எல்லாவற்றையும் இங்கே வந்து set செய்துவிட்டோமென்று சொல்கிறார். நாங்கள் பரவாயில்லை. என்னென்ன செய்திருக்கிறார் என்று அவரே சொல்லியிருக்கிறார். நாங்கள் சொல்லவில்லை. அவரே சொல்லியிருக்கின்றார். இந்த பட்ஜெட்டிலும் சொல்லியிருக்கிறார். நிதிநிலை மோசமாக இருக்கிறது, வருவாய் இல்லை. கூடுமானவரையில் மத்திய சர்க்காரும் கொடுக்கவில்லை என்று கூறுகிறார். ஆகையினால் இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய எந்தவிதமான திட்டங்களும் இதில் இல்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் மத்திய சர்க்காரில் பணம் வாங்கினேன் என்று. (குறுக்கீடு) ஆகையினால், இதை நான் அதிகமாக எதிர்பார்க்கவில்லை. ** நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதெல்லாம் தேவையில்லை. இப்படியெல்லாம் சொல்லக்கூடாது. தனிப்பட்ட முறையில் ஒருவரை விமர்சிக்கிற மாதிரி சொல்லக்கூடாது. அது நீக்கப்படுகிறது. அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

பிற்பகல் 1–05

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த நிதிநிலை அறிக்கையின்மீது எங்களுடைய கட்சியின் சார்பில் செல்வி கே. பாலபாரதி அவர்கள் பல கருத்துகளை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே சில திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு அந்த நிதி முழுமையாகச் செலவழிக்கப்படாமல் அந்தப் பணம் அரசுக்கு மொத்தமாகத் திரும்பியிருக்கிற விவரங்கள் மத்திய அரசினுடைய தணிக்கைத் துறை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற விவரத்தை இங்கே ஏற்கெனவே திரு. துரைமுருகன் எடுத்துச்சொன்னார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதெல்லாம், தமிழகத்தை இந்தியாவினுடைய முன்னணி மாநிலமாகச் செழிக்க வைப்பதற்கு 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்கிற ஒரு திட்டத்தை தமிழக அரசு அறிவித்து, 2012–2013 ஆம் ஆண்டு அந்தத் திட்டத்திற்கான கட்டமைப்புப் பணிகளுக்காக ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியது. ஆனால், அந்த ஆயிரம் கோடி ரூபாயில் ஒரு ரூபாய்கூட செலவழிக்கப்படாமல் அதே ஆண்டு அந்தப் பணம் அரசுக்குத் திரும்ப வரப்பெற்று இருக்கிறது என்கிற விவரத்தை நம்முடைய தணிக்கைத் துறை அதிகாரி தன்னுடைய தணிக்கை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு—அடுத்த ஆண்டோ அல்லது அதற்கு அடுத்த ஆண்டோ தொலைநோக்குத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு என்பது இந்த ஆண்டு பட்ஜெட்டிலேயும் இடம் பெறவில்லை. இப்பொழுது கேள்வி என்னவென்றால், அந்தத் 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்கிற திட்டத்தை அரசு செயல்படுத்துகிற திட்டத்திலே வைத்திருக்கிறதா அல்லது அதைக் கைவிட்டுவிட்டதா என்கிற சந்தேகம் எழுகிறது என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டம், 2023–ல் அனைத்து அம்சங்களையும் உறுதியாக அது நிறைவேற்றித் தரும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் சந்தேகமே வேண்டாம். எந்த



சந்தேகமும் நீங்கள் பட வேண்டாம். நீங்கள் என்ன சொல்ல வந்தீர்களோ அந்தக் கருத்தைச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதை வழிமொழிந்து நீங்கள் பேச வேண்டாம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பேசுவதற்குத் தயாரித்திருக்கிற குறிப்பிலேயிருந்துதான் பேசுகிறேனே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தை வழிமொழிந்து பேச வேண்டிய எந்தவிதமான அவசியமும் எனக்கு இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆரம்பிக்கும்போதே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல என்று ஆரம்பித்தீர்கள் அல்லவா, அதைத்தான் சொல்கிறேன். உங்களுக்கென்று சொந்தக் கால் இருக்கிறதா, இல்லையா என்பதை நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி திரும்ப வரப்பெற்றிருக்கிறது என்கிற விவரத்தைச் சொல்லும்போது, அவர் சொன்னதுபோல என்று சொல்லிச் சொன்னேனே தவிர, அவர் சொன்னது எல்லாவற்றையும் நான் வழிமொழிய விரும்பவில்லை. இப்படி மிகப் பிரமாதமாகப் பேசப்பட்ட அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆயிரம் கோடி ரூபாய் செலவழிக்கப்படாமலே திரும்பியிருக்கிறதே என்கிற அடிப்படையிலேதான் அந்தத் திட்டம் இருக்கிறதா, இல்லையா என்று கேள்வி எழுப்பினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒதுக்கப்பட்ட அந்த நிதி பல்வேறு இனங்களுக்கு, பல்வேறு துறைகளுக்கு முறையாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. அந்த விவரங்களை நான் என்னுடைய பதிலுரையில் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டை வஞ்சிக்கிற போக்கிலே மத்திய அரசாங்கத்தினுடைய அணுகுமுறை எப்படி நம்முடைய நிதிச் சுமையை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்கிற விவரங்கள் மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. மத்தியிலே இருக்கிற திரு. நரேந்திர மோடியின் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மக்கள் நலன் சார்ந்திருக்கிற மானியங்களையெல்லாம் வெட்டிக் குறைத்து, பெரும் தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவான திட்டங்களை நிறைவேற்றுகிற, ஒரு சந்தைப் பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கிற அரசாக இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்திலே நிதியமைச்சர் திரு. அருண் ஜெட்லி அவர்கள் உரையாற்றுகிறபோது, “இந்தியாவிலே இருக்கிற மாநிலங்கள்தான் தங்களுடைய வளர்ச்சி, தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கான திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றிக்கொள்ள வேண்டும், மத்திய அரசு அதற்கான வழிவகைகளை மட்டும்தான் செய்யும்” என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே, மத்திய அரசு இப்பொழுது நிதிப் பகிர்வைக் குறைத்திருப்பது மட்டுமல்ல, எதிர்காலத்திலேயும் மேலும் நிதிப் பகிர்மானத்தைக் குறைத்து, மாநிலங்களைத் தவிக்க விடுகின்ற போக்கிலே இருக்கும் என்பதை அவர்கள் மீண்டும் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். மத்திய அரசின் இந்தப் போக்கால் தமிழகம் சந்திக்கும் நெருக்கடி, சுமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் நம்முடைய சொந்த வரி வருவாயை நம்பி மட்டும்தான் நம்முடைய திட்டங்கள் செயல்பட வேண்டும் என்கிற சிரமம் தமிழகத்திற்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.



இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில், நியாயமாகப் பார்த்தால், இவ்வளவு மோசமாக, தமிழகத்தை வஞ்சிக்கிற, நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நிதிப் பகிர்வுகளையெல்லாம் வெட்டிச் சுருக்குகிற, மத்தியில் ஆளும் திரு. நரேந்திர மோடி அரசாங்கத்தைத் தமிழக அரசும், அதற்குத் தலைமையேற்றிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்த்து குரல் கொடுக்க முன்வர வேண்டும். ஆனால், தேசிய ஜனநாயகக் கூட்டணியிலேயுள்ள கட்சிகளே சில பிரச்சினைகளில் மத்திய அரசை எதிர்த்துக் குரல் கொடுப்பது மட்டுமன்றி, நாடாளுமன்றத்திலேயிருந்து வெளிநடப்புச் செய்யும்போது, அ.இ.அ.தி.மு.க. மத்திய அரசாங்கத்தை ஆதரிப்பது ஏன் என்கிற கேள்விதான் இன்றைக்கு மக்கள் மத்தியில் இருக்கின்றது.

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், மக்களைப் பாதிக்கின்ற எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், அதனை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள் என்பதனை முதலில் நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* எங்கள் இயக்கத்தினுடைய தானைத் தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்த முடிவு எடுத்தாலும், மக்களின் பாதுகாப்பு அரணாகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களும், செயல்பாடுகளும் இதுவரை இருந்து வந்திருக்கின்றன என்பதுதான் வரலாறு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அந்நிய முதலீடு இருக்கின்றபோது சிறு வியாபாரிகளினுடைய வியாபாரம் பாதிக்கப்படுகிறது என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தச் சட்டத்தினைக் கடுமையாக எதிர்த்தார்கள் என்பது வரலாறு.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தத் திட்டத்தைப் பற்றிச் சொல்ல வருகிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. அந்தத்

திட்டத்திற்குரிய விளக்கம் என்னிடம் இருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய முக்கிய அம்சங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அதற்குரிய பதிலை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், அனைத்து எதிர்க்கட்சிகளும் கொண்டுவருகின்ற, எதிர்ப்புகளோடு சேர்ந்து நாங்களும் எதிர்க்க வேண்டும் என்ற உங்களுடைய வாதம் நியாயமல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தினுடைய கூறுகளை ஆராய்ந்து, நிலைமைகளுக்குத் தக்கவாறு அந்தத் திட்டம் மக்களுக்குப் பயன் அளிக்கிறதா, பயன் அளிக்கவில்லையா என்பதை அறிந்து, புரிந்துதான் மத்திய அரசு கொண்டுவருகிற ஒவ்வொரு சட்டத்தையும் ஆதரிப்பதும், ஆதரிப்பு இல்லையென்ற நிலையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுக்கின்றார்கள் என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்துள்ளார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது, மத்திய அரசு கொண்டுவந்து நிறைவேற்றிய பல சட்டங்கள், அது இன்சூரன்ஸ் மசோதாவாக இருக்கலாம் அல்லது நிலம் கையகப்படுத்துகின்ற சட்டமாக இருக்கலாம், இப்படிப்பட்ட மசோதாக்களை எல்லாம் நாடாளுமன்றத்தில் முந்தைய காங்கிரஸ் அரசு கொண்டுவந்தபோது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு நடாளுமன்றத்தில் அதை வலுவாக எதிர்த்தது. இங்கே தமிழகத்திலும் அதை எதிர்த்து அறிக்கை விட்டார்கள்.

நான் கேட்பது, இன்றைக்கு திரு. நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பிறகு, அவர்கள் நிறைவேற்றுகிற எந்த ஒரு சட்டத்தையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்தில் எதிர்த்துப் பேசியதாக, எதிர்த்து வாக்களித்ததாக சான்றுகளே இல்லை.

ஆகவேதான், இன்றைக்குத் தமிழகத்தை வஞ்சிக்கின்ற பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்ட திரு. நரேந்திர மோடி அரசாங்கத்தை நீங்கள் ஆதரிப்பதன் நோக்கம் என்ன என்பதைத்தான் தமிழக மக்கள் கேள்வியாக எழுப்புகிறார்கள் என்பதை குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.



முன்பு நிதிநிலை அறிக்கையில், 2014–2015 ஆம் ஆண்டு உபரியாக இருக்கும் என்று அன்றைக்கு மதிப்பிடப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு முடிவில் திருத்தப்பட்ட மதிப்பீடுகளைப் பார்க்கிறபோது, உபரி என்பது குறைந்து 3,536.78 கோடி ரூபாய் பற்றாக்குறை என்பது 2014–2015 ஆம் ஆண்டிலே ஏற்பட்டிருக்கிறது. இப்போது நடப்பு நிதியாண்டில், அதாவது 2015–2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை திட்ட மதிப்பீட்டில், 4,616.02 கோடி ரூபாய் பற்றாக்குறை என அறிவிக்கப்பட்டிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசு கொண்டுவந்த எந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்த்தோம். இப்போது பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் கொண்டுவந்த எந்தச் சட்டத்தை நாங்கள் ஆதரித்தோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் விளக்கிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது இன்சூரன்ஸ் மசோதா என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. அன்றைக்கு இடதுசாரி கட்சிகளோடு சேர்ந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்த மசோதாவை எதிர்த்தது. இன்றைக்கு, அதே மசோதா நாடாளுமன்றத்தில் வருகிறபோது, தாங்கள் அந்த மசோதாவைக் கொண்டு வந்தோம் என்பதற்காக காங்கிரஸ் கட்சி ஆதரித்தது. ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஆதரித்து அந்த மசோதா இன்றைக்குச் சட்டமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதேபோல, நிலம் கையகப்படுத்துகிற சட்டம் என்பது அன்றைக்கு காங்கிரஸ் அரசால் கொண்டுவரப்பட்டபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்த்தது. இன்றைக்கு அதிலே சில திருத்தங்களை மத்தியிலே செய்திருக்கிறார்கள், அதனால் நாங்கள் ஆதரிக்கிறோம் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–15

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்துவது குறித்த சட்ட மசோதா பற்றி சில விளக்கங்களை நான் இங்கே கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் பொறுமையாக கேட்க வேண்டும் என்றும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

முந்தைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு, நடைமுறையில் இருந்த நில எடுப்புச் சட்டத்திற்கு மாற்றாக, 'நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வு அளிப்பு மற்றும் மறுகுடியமர்வுக்கான உரிமை சட்டமுன்வடிவு' என்னும் சட்டமுன்வடிவினை 2013 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து அதனைச் சட்டமாக்கியது. இந்தச் சட்டம் 1–1–2014 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தில் சில திருத்தங்களை மத்திய பாரதிய ஜனதா அரசு அவசர சட்டம்மூலம் கடந்த 31–12–2014 அன்று கொண்டு வந்தது. அந்த அவசரச் சட்டத்தை சட்டமாக்கும் வகையில் தற்போது உள்ள 'நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வு அளிப்பு மற்றும் மறுகுடியமர்வுக்கான உரிமை' சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்ற மக்களவையில் 9–3–2015 அன்று அறிமுகம் செய்தது. அதன்மீது எதிர்க்கட்சிகள் தெரிவித்த கவலைகளின் அடிப்படையில் மத்திய பாரதிய ஜனதா அரசு, மேலும் 9 திருத்தங்களை 10–3–2015 அன்று தாக்கல் செய்தது. நில எடுப்புத் தொடர்பான இந்தச் சட்டத் திருத்தத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்காக நில எடுப்புச் சட்டத்திலிருந்து விலக்குகள் அளிக்கப்படக்கூடாது என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முடிவு ஆகும். அதன் அடிப்படையில் இந்தச் சட்டத் திருத்தத்தில் ஒரு திருத்தத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முன்மொழிந்தது. இதனை ஏற்றுக்கொண்ட மத்திய பாரதிய



ஜனதா அரசு ஏற்கெனவே தாக்கல் செய்த சட்டத் திருத்தத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கென இருந்த சலுகைகளை விலக்கிக் கொண்டுவிட்டது. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், 2013 ஆம் ஆண்டைய 'நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வு அளிப்பு மற்றும் மறுகுடியமர்வுக்கான உரிமை' சட்டத் திருத்த மசோதாவிற்கு மக்களவையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவளித்து, வாக்களித்தது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டிற்கு, தமிழக மக்களுக்கு எவை நன்மைபயக்கக் கூடியதோ அவற்றை மட்டுமே ஆதரிப்பது என்பதும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் எதிரானவைகளை எதிர்ப்பது என்பதும்தான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் கொள்கையாகும்.

'நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வு அளிப்பு மற்றும் மறுகுடியமர்வுக்கான உரிமை' சட்டம், 2013 ஆம் ஆண்டு முந்தைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசால் கொண்டுவரப்பட்டபோது, அந்தச் சட்டம் மாநிலங்களின் உரிமைகளில் தலையிடுவதாகவும், பறிப்பதாகவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனது எதிர்ப்பை நாடாளுமன்றத்திலே பதிவு செய்துள்ளது. 'நிலம்' என்பது மாநிலப் பட்டியலில் வரும் பொருள் என்பதால், நிலம் சம்பந்தப்பட்ட எதுவும் மாநில அரசால்தான் முடிவு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 7 ஆம் இணைப்புப் பட்டியலில், பட்டியல் II–மாநிலப் பட்டியலில், 18–வது இனமாக 'நிலம்' என்பது வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே, நிலம் தொடர்பான எதுவும் உண்மையில் மாநில அரசு சம்பந்தப்பட்டதுதான். ஆனால், பட்டியல் III–ஒருங்கியல் பட்டியலில் 'சொத்தினைப் கையகப்படுத்தலும், வேண்டுறுத்திப் பெறுதலும்' என்ற பொருண்மை சேர்க்கப்பட்டு, அதன்காரணமாக நில எடுப்புத்

தொடர்பான சட்டம் இயற்றும் அதிகாரம் மத்திய அரசுக்கும் இருக்கிறது என்கிற அடிப்படையில், முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசு 'நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வு அளிப்பு மற்றும் மறுகுடியமர்வுக்கான உரிமை' சட்டத்தை இயற்றியது.

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த நில எடுப்புச் சட்டத்தினை மாத்திரம் விலக்கிக்கொண்டு, புதிய நில எடுப்புச் சட்டத்தை அந்தந்த மாநில அரசுகளே மேற்கொள்ளலாம் என்றுதான் மத்திய அரசு முடிவு எடுத்திருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சியின் தலைவரை, தலைவராகக் கொண்ட ஒரு பெரும் அதிகாரமிக்க National Advisory Committee என்ற அமைப்பின் ஆலோசனையின் பேரிலேயே இத்தகைய ஒரு சட்டத்தை முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசு இயற்றிவிட்டது. நுனிப் புல் மேய்பவர்களுக்கும், மேம்போக்காக இந்தச் சட்டத்தைப் படிப்பவர்களுக்கும் மட்டுமே இந்தச் சட்டம் கட்டாய நில எடுப்பிலிருந்து விவசாயிகளுக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பதாகத் தோன்றும். ஆனால், விவசாயிகளுக்கு ஆதரவாக இந்தச் சட்டத்தில் உள்ளவற்றை, ஒரு கையால் கொடுப்பதை மறு கையால் பறிப்பதைப் போல நான்காம் அட்டவணைமூலம் இந்தச் சட்டமே பறித்துவிட்டது என்பதுதான் உண்மை.

*பிற்பகல் 1–20*

'நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வு அளிப்பு மற்றும் மறுகுடியமர்வுக்கான உரிமை' சட்டத்தின் பிரிவு 105(1)–ன்படி, அந்தப் பிரிவின் உட்பிரிவு 3–க்கு உட்பட்டு நில எடுப்பைப் பொறுத்தவரை, 4–வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சட்டங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களை நீக்கவோ அல்லது புதிய சட்டங்களைச் சேர்ப்பதற்கோ மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஒரு வருட காலத்திற்குள், அட்டவணை 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களுக்கு இந்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, இழப்பீடு மற்றும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தல் குறித்த அறிவிக்கை வெளியிடப்பட



வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய நில எடுப்புச் சட்டம் 1–1–2014 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்படியான இழப்பீடு மற்றும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு ஆகியவை 1–1–2015 முதல் நடைமுறைக்கு வரும் என மத்திய அரசால் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. முந்தைய மத்திய காங்கிரஸ் அரசும் அதற்குத் துணை நின்ற இதர அரசியல் கட்சிகளும், 13 மத்திய சட்டங்களுக்கு இந்தப் புதிய நில எடுப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்தது ஏன்? மத்திய அரசால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம், 13 மத்திய சட்டங்களுக்குப் பொருந்தாது என்றும், அந்த 13 சட்டங்களின்படி நில எடுப்புச் செய்யும்போது, இந்தச் சட்டத்தின்படியான இழப்பீடு மற்றும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு மட்டுமே பொருந்தும் என்றும், மற்ற ஷரத்துகள் பொருந்தாது என்றும், ஆனால் மாநில அரசுகள் மாநிலத்தின் தேவைக்காக நில எடுப்புச் செய்யும்போது மட்டும் இந்தச் சட்டப் பிரிவுகள் முழுவதுமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் அந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது விவசாயிகளின் நன்மையைக் கருதியா அல்லது மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பறிப்பதற்கா? விவசாயிகளின் நன்மைக்காக மட்டுமே 2013 ஆம் ஆண்டைய புதிய நில எடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்றால், 13 மத்திய அரசு சட்டங்களின்கீழ் நில எடுப்பு செய்யும்போது அவற்றை ஏன் கடைபிடிக்கக் கூடாது? இந்த சட்டங்களின்கீழ் நில எடுப்பு செய்யும்போது மட்டும் விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்களா?

அவ்வாறு நான்காவது இணைப்பில் வைக்கப்பட்டுள்ள ஒரு சட்டம்தான், The Petroleum and Minerals Pipelines (Acquisition of Right of User in Land) Act, 1962. இந்தச் சட்டத்தின்கீழ்தான் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 7 மாவட்டங்களில் 'கெயில்' நிறுவனத்தால் விவசாயிகளின் நிலங்களின் ஊடே 310 கி.மீ. எரிவாயு கொண்டு செல்லும் குழாய்கள் பதிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய அரசின் சட்டத்தின்படி குழாய் பதிக்க வழிவகை செய்யப்பட்டிருந்தாலும், இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதால் விவசாய நிலங்களின் ஊடே குழாய்கள் பதிக்கப்படக் கூடாது என மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய நெடுஞ்சாலை ஓரமாக குழாய்

பதிக்கப்படலாம் என்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின் அடிப்படையில் தமிழக அரசு அவ்வாறு உத்தரவிட்டது. அதனை எதிர்த்து ‘கெயில்’ நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்து, தங்களுக்குச் சாதகமான உத்தரவைப் பெற்றது. அதன்பேரில், தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு, உயர் நீதிமன்ற உத்தரவிற்குத் தடையாணை பெறப்பட்டது. தற்போது இந்த மனுவை உச்ச நீதிமன்றம் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்திற்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.

தற்போதும், 2013 ஆம் ஆண்டைய புதிய நில எடுப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள எந்த நடைமுறையையும் பின்பற்றாமல் ‘கெயில்’ நிறுவனம் குழாய் பதித்திட இயலும். அவ்வாறு வழிவகை செய்யும் இந்த The Petroleum and Minerals Pipelines (Acquisition of Right of User in Land) Act, 1962 சட்டத்திற்கு, 2013 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட புதிய நில எடுப்புச் சட்டத்திலிருந்து முழு விலக்கு அளிக்க அந்த சட்டத்திலேயே வழிவகை செய்யப்பட்டுள்ளது. அப்படியெனில், அந்தச் சட்டம் விவசாயிகளைப் பாதுகாக்கின்ற சட்டம்; தற்போதைய சட்டத் திருத்தங்கள் விவசாயிகளுக்கு எதிரானது என்று கூறுவது மக்களை ஏமாற்றும் செயலாகும். அரசியல் ஆதாயத்திற்காக அந்தச் சட்டத்தை அப்போது ஆதரித்து, தற்போது எதிர்ப்பவர்கள் இதை விளக்க வேண்டும். 2013 ஆம் ஆண்டைய ‘நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவு மறைவின்மைக்கும் மறுவாழ்வு அளிப்பு மற்றும் மறு குடியமர்வுக்கான உரிமை’ சட்டத்தில் அத்தியாயம் III-A புதிதாகச் சேர்க்கப்பட்டு அதன்படி அத்தியாயம் II–ல் உள்ள சமூக தாக்கத்தைத் தீர்மானித்தல் மற்றும் பொது நலன் மற்றும் III வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சிறப்புக்கூறுகள் ஆகியவற்றிலிருந்து தேசிய பாதுகாப்பு, ஊரக உள்கட்டமைப்பு, கட்டுப்படியாகக்கூடிய வீட்டு வசதி, ஏழைகளுக்கான வீட்டு வசதி, தொழில் வளாக வழி மற்றும் உள்கட்டமைப்பு, அரசிடமே நிலம் உடைமையாக இருக்கும்பட்சத்தில், அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதித் திட்டங்கள் ஆகிய 5 வகைத் திட்டங்களுக்கு அத்தியாயம் II மற்றும் III-ன்கீழ் விதிவிலக்கு அளிக்க, சம்பந்தப்பட்ட அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், இந்த மசோதா மக்களவையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. அதாவது, ஊரக உள்கட்டமைப்பு போன்ற திட்டங்களுக்கு அத்தியாயம் II–ல் குறிப்பிடப்பட்டுள்ள சமூக தாக்கத்தைத் தீர்மானித்தல் மற்றும் பொது நலன் மற்றும் III-வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்குமான சிறப்புக் கூறுகள் ஆகியவற்றிலிருந்து பொதுவான விலக்கு எதுவும் அளிக்கப்படவில்லை. ஒவ்வொரு திட்டத்தையும் ஆராய்ந்து குறிப்பிட்ட எந்த ஒரு திட்டத்திற்கும் விலக்கு அளிக்க வேண்டுமெனில் அந்தத் திட்டத்திற்கு விலக்கு அளிப்பதற்கான அதிகாரம் மட்டுமே சம்பந்தப்பட்ட மத்திய அரசு அல்லது மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்தத் திருத்த மசோதா மாநிலங்களுக்குத் தேவையான அதிக அதிகாரத்தை வழங்குகிறதே அல்லாமல், சமூகத் தாக்கத்தைத் தீர்மானித்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றிலிருந்து ஒட்டுமொத்தமாக விலக்களித்து 2013 ஆம் ஆண்டைய சட்டத்தையே நீர்த்துப்போகச் செய்யவில்லை.



பிற்பகல் 1–25

குறிப்பிடப்பட்ட 5 வகை நில எடுப்புக்கும் இந்த இரு அத்தியாயங்களிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமா என்பது பற்றி சம்பந்தப்பட்ட மாநில அரசே முடிவு செய்யலாம் என்னும்போது, அந்தந்தத் திட்டங்களுக்கேற்ப விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு மாநில அரசு முடிவு செய்ய இயலும்.

5 வகை நில எடுப்புப் பற்றிய சட்டத் திருத்தத்தில், 10A என்ற சட்டப் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. இதன்படி “the appropriate Government may, in the public interest, by notification, exempt any of the following projects from the application of the provisions of Chapter II and Chapter III of this Act” அதாவது, 5 வகையான நில எடுப்புகளுக்கும், பொது நலன் கருதி அத்தியாயம் II மற்றும் III–லிருந்து விலக்களித்து சம்பந்தப்பட்ட அரசு அறிவிக்கை வெளியிடலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

குடிசைப் பகுதிகளில் வசிப்பவர்களுக்குத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புக்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 30

கட்டடம் கட்ட நில எடுப்புச் செய்ய வேண்டுமென்றால், அத்தியாயம் II–ல் குறிப்பிடப்பட்டுள்ள சமூகத் தாக்கத்தைத் தீர்மானித்தல் மற்றும் பொது நலன் மற்றும் அத்தியாயம் III–ல் குறிப்பிடப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சிறப்புக் கூறுகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்க வேண்டும். விலக்களிக்கத் தற்போது மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதை எதற்காக எதிர்க்க வேண்டும்?

விவசாயிகளைப் பாதிக்கும் எந்த ஒரு திட்டத்திற்கும் அனுமதி அளிப்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒருபோதும் அனுமதிக்காது என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில்தான் முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசு சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்து சட்டம் இயற்றியபோதும், அதனைச் செயல்படுத்துவதற்கான அதிகாரம் மாநில அரசுக்குத்தான் இருக்கிறது என்பதால் அதனைத் தமிழ்நாட்டில் தடுத்து நிறுத்துவோம் என உறுதிபடத் தெரிவித்து, அதன்படியே அது தடுத்துநிறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள் பரிசோதனையை மத்திய அரசு அனுமதித்தாலும், மாநிலத்தில் அதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கே உள்ளது. அந்த அடிப்படையிலேதான் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள்மூலம் செய்யப்படும் ஆராய்ச்சியைத் தமிழகத்தில் அனுமதிக்க முடியாது என்ற திடமான முடிவை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து, இன்றும் அது தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.

'நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவு மறைவின்மைக்கும் மறுவாழ்வு அளிப்பு மற்றும் மறுகுடியமர்வுக்கான உரிமை' சட்டத்தில் திருத்தங்களை மத்திய அரசு மக்களவையில் தாக்கல் செய்தது பற்றி தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி மத்திய அரசின் இந்தத் திருத்தச் சட்டம் விவசாயிகளுக்கு எதிராகவும், தொழிலதிபர்களுக்கும், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கும் ஆதரவானது என்றும், சொந்த நிலத்தின்மீது விவசாயிகளுக்குள்ள அடிப்படை உரிமையை இந்தச் சட்டம் எடுத்துவிடுவதாகவும் 26–2–2015 அன்று கேள்வி–பதில் அறிக்கையில் தெரிவித்துள்ளார். தொழில் நிறுவனங்களுக்காக நில எடுப்புப் பற்றி கருத்து தெரிவிப்பதற்கு தி.மு.க.–விற்கும், திரு. கருணாநிதிக்கும் எவ்வித அருகதையும் இல்லை. ஏனெனில், 'தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டம்' என்ற சட்டமுன்வடி 1997 ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே அறிமுகம் செய்யப்பட்டு, அது 1999 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டுள்ளது. இதனைச் சட்டமாக்கியது அன்றைய தி.மு.க. அரசுதான். இந்தச் சட்டம், நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் வழிமுறைகளைக் குறைத்து, விரைவான முறையில் நிலத்தைக் கையகப்படுத்தும்பொருட்டு இயற்றப்பட்டதாகும். எனவேதான், அந்தச் சட்டமுன்வடிவில் நோக்கக் காரண விளக்க உரையில், 'இம்மாநிலத்தில் தொழில் நோக்கங்களுக்காக நிலங்களை விரைவான முறையில் கையகப்படுத்தும்பொருட்டு தேவையான சட்டம் இயற்றப்படுவதன் வாயிலாக இந்நேர்வில் தனி வகைமுறைகள் செய்ய வேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகின்றது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளுக்காக நடைமுறையில் இருந்த நில எடுப்புச் சட்டக்கூறுகளை எளிமைப்படுத்தி, ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்த தி.மு.க.–வும், அதன் தலைவர் திரு. கருணாநிதியும் தற்போதைய சட்டத் திருத்தத்தைக் குறை கூறுவது வேடிக்கையாக உள்ளது.



2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டத்தின்கீழ் தொழிலகங்களுக்காக சுமார் 11,400 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சாமானிய மக்களின் நிலம் எவ்வாறெல்லாம் அபகரிக்கப்பட்டது என்பதையும், அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டும் நிறுவனங்கள், வீட்டுமனை மேம்படுத்துவோர் ஆகியோர் விவசாயிகளிடமிருந்து விவசாய நிலங்களைத் தட்டிப் பறிப்பதற்கு எவ்வாறெல்லாம் துணை புரிந்தனர் என்பதையும் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் ஆட்சிக் காலத்தில் 2006 முதல் 2011 வரை சுமார் 16,000 ஏக்கர் விளைநிலங்களை வீட்டுமனைகளுக்காகவும், தொழிற்சாலைகளுக்காகவும் மற்றும் இதர பயன்பாட்டிற்காகவும் மாற்றம் செய்துள்ளனர்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு நில எடுப்புச் சட்ட விதிகள் எதையும் பின்பற்றாமலேயே விவசாயிகளிடமிருந்து நிலத்தை எடுத்துக்கொண்ட நிகழ்வுகளும் உண்டு. தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கு எந்தச் சட்ட விதிமுறைகளையும் பின்பற்றாமல் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு நிலத்தை எடுத்துவிட்டது. இந்தத் திட்டத்தில் முதல் மற்றும் இரண்டாம் நிலைகளுக்கான 190 ஏக்கர் நிலங்களைச் சட்டப்படி கையகப்படுத்தி அதற்கான இழப்பீட்டுத் தொகையையும் வழங்கியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1–30

முந்தைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசால் 2013 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்படி விவசாய நிலங்களைக் கையகப்படுத்தும்முன் 80 சதவீத விவசாயிகளின் ஒப்புதல் பெற வேண்டும் என்றும், நிலத்தைக் கையகப்படுத்தும்போது அந்த நிலம் விவசாயம் செய்வதற்குத் தகுதி வாய்ந்த நிலமா என்று கவனிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது எனக் கூறுவது தவறு. பொது நலத்திற்காக அரசு–தனியார் கூட்டு முயற்சியில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பொது நலன் காரணமாக தனியார் கம்பெனிகளுக்காக நிலம் கையகப்படுத்தும்போது மட்டும்தான் விவசாயிகளின் ஒப்புதல் பற்றி 2013 ஆம் ஆண்டைய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார் கம்பெனிகளுக்காக நிலம் கையகப்படுத்தும்போது பாதிக்கப்படும் குடும்பங்களில் 80 சதவீதம் பேரிடமும், அரசு–தனியார் கூட்டுத் திட்டங்களுக்கு 70 சதவீதம் பேரிடமும் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்றுதான் உள்ளது. தற்போதைய சட்டத்தில் குறிப்பிட்ட 5 வகை நில எடுப்புகளுக்கு இது முற்றிலுமாக கைவிடப்பட்டதாகக் கூறுவது சரியல்ல. அதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

தனியார் கம்பெனிகளுக்கு தமிழகத்தில் நிலம் கையகப்படுத்தப்படவில்லை என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியுள்ளதற்கு தொழில் வளாகம் என்றால் தனியார் நிறுவனங்களுக்குத்தானே நில மதிப்பை வசூல் செய்து கொண்டு நிலம் வழங்கப்பட்டு வருகிறது என திரு. கருணாநிதி



கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், 'சிப்காட்' தொழிற்சாலைக்காக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலங்கள் கையகப்படுத்த ஆணைகள் வெளியிடப்படவில்லையா எனவும் திரு. கருணாநிதி ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில் கேட்டுள்ளார்.

தொழில் பூங்காக்கள் அமைப்பதற்கு டிட்கோ, சிப்காட், சிட்கோ போன்ற நிறுவனங்கள் நிலம் கையகப்படுத்துவது தனியார் தொழிற்சாலைகளுக்காக நிலம் கையகப்படுத்துவதாகாது. டிட்கோ, சிப்காட், சிட்கோ போன்ற நிறுவனங்கள் எந்த ஒரு தனியார் தொழிற்சாலைக்கும் நிலங்களைக் கையகப்படுத்துவதில்லை. தொழில் பூங்காக்கள் அமைப்பதற்காகத்தான் நிலங்களைக் கையகப்படுத்துகின்றன. தொழில் பூங்காக்களில் தொழிற்சாலைகளுக்கு நிலம் வழங்கப்படும்போது நில மதிப்பு பெறப்படுவதுடன், அந்த நிலம் குத்தகைக்குத்தான் விடப்படுகிறது. தனியாருக்குச் சொந்தமாக அந்த நிலம் வழங்கப்படுவதில்லை. அந்த நிலத்தைத் தனியார் தொழிற்சாலை தனது சொத்தாக பாவிக்க இயலாது. அதுபோன்று தனது சொத்து மதிப்பீட்டிலும் அந்த நிலத்தைச் சேர்க்க இயலாது. இதுபோன்று தொழில் பூங்காக்களுக்கு நிலம் கையகப்படுத்த 2013 ஆம் ஆண்டைய சட்டத்திலேயே வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு, நில எடுப்புச் செய்யப்படும்போது விவசாயிகளின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. எனவே, தற்போது விவசாயிகள் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற ஷரத்து நீக்கப்பட்டுவிட்டதாகச் சொல்வது சரியல்ல.

தனியார் கம்பெனிகளுக்காக நிலம் எடுக்கப்படும்போதுதான் பாதிக்கப்படும் குடும்பங்களில் 80 சதவீத பேரிடமும், அரசு மற்றும் தனியார் கூட்டுத் திட்டங்களுக்கு 70 சதவீத பேரிடமும் ஒப்புதல் பெற வேண்டும் என 2013 ஆம் ஆண்டைய சட்டத்தில் இருந்தது. எனவே, அரசு சார்பில் தொழில் பூங்காக்களுக்காக அல்லது உட்கட்டமைப்பு வசதிகளுக்காக நிலம் கையகப்படுத்தும்போது பாதிக்கப்படுவோரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என 2013 ஆம் ஆண்டைய சட்டத்திலேயே வரையறை இல்லை. எனவே, அரசு சார்பில் தொழில் பூங்காக்களுக்காகக் கையகப்படுத்தும் நிலத்தைத் தனியார் கம்பெனிகளுக்காகவோ, அரசு மற்றும் தனியார் கூட்டு திட்டங்களுக்காகவோ கையகப்படுத்தும் நிலங்களுடன் ஒப்பிட்டு குழப்பிக் கொள்ளக்கூடாது எனவும், சட்டங்களைப் படித்து சரியான பொருள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில், எந்தவொரு தனியார் நிறுவனத்திற்கெனவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த நிலத்தையும் கையகப்படுத்துவது இல்லை. தொழில் பூங்காக்களுக்காக நிலம் கையகப்படுத்துவது பொது காரியங்களுக்காகத்தானே அன்றி, எந்தவொரு தனியாருக்காகவும் அல்ல.

ஆனால், தி.மு.க. ஆட்சியில் தனியாருக்காக நிலம் கையகப்படுத்த பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து இரண்டு உதாரணங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) மூலம் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு 25–1–2007 அன்று 2,937 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்த உத்தரவிட்டது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்த டிட்கோ நிறுவனம் G.V.K. குழுமத்தைத் தனது பங்குதாரராகத் தெரிவு செய்து ஒரு சிறப்பு நோக்கு சாதனம் (S.P.V.) ஏற்படுத்தப்பட்டு, 2,900 ஏக்கர் நிலம் பேச்சுவார்த்தைமூலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு நோக்கு சாதனத்தில் ஏறத்தாழ மொத்த பங்குகளுமே G.V.K. குழுமத்தைச் சார்ந்ததாகும்.

டிட்கோ நிறுவனமே நில எடுப்பு செய்திருந்தால் 2,900 ஏக்கர் நிலம் அரசுடைமையாகவே இருந்திருக்கும். தனியார் தொழில் நிறுவனம் குத்தகைதாரராக மட்டுமே இருந்திருக்கும். ஆனால், தனியார் தொழில் நிறுவனமே இந்த நிலத்தின் முழு உடைமைதாரராக ஆகிவிட்டபடியால், இந்த நிலத்தை அவர்கள் எப்படி வேண்டுமென்றாலும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

பிற்பகல் 1–35

1998 ஆம் ஆண்டு அப்போதைய தி.மு.க. அரசு மகேந்திரா தொழில் பூங்காவுக்கென 827 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்த அரசாணை வெளியிட்டது. 46 ஏக்கர் மட்டும் அரசால் கையகப்படுத்தப்பட்டது. மொத்தத்தில் 1,530 ஏக்கர் நிலத்தை மகேந்திரா நிறுவனம் பேச்சுவார்த்தைமூலம் வாங்கியது. இவ்வாறு உருவாக்கப்பட்ட தொழில் பூங்காவில் 841 ஏக்கர் நிலத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாகிட அரசு ஒப்புதலளித்து, 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் மகேந்திரா தனது வணிக செயலாக்கத்தைத் துவக்கியது. இதன்பிறகு, கூட்டு முயற்சி நிறுவனம் செய்முறை இல்லாத பகுதியில் குடியிருப்புக் கட்டமைப்புகளை உருவாக்கிட இந்திய அரசாங்கத்தின் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் குழுமத்திடம் 2007 ஆம் ஆண்டு ஒப்புதல் பெற்று 242 ஏக்கர் நிலத்தை இரண்டு உடன் வளர்ச்சியாளர்களிடம் (Co-Developers) ஒப்படைத்தது. இதில் ஒரு உடன் வளர்ச்சியாளரான மகேந்திரா ஜஸ்கோ 21.5 ஏக்கர் நிலத்தில் உருவாக்கிய குடியிருப்புத் திட்டம் ஜூலை 2007–ல் முடிவடைந்தது.



சிறப்புப் பொருளாதார மண்டல விதி எண் 10–ன்படி, காலியான எந்த நிலத்தையும் குழுமத்தின் ஒப்புதல் பெற்றவுடன் வளர்ச்சியாளரைத் தவிர வேறு எவருக்கும் குத்தகைக்கு விடக்கூடாது. ஜஸ்கோ 103 நபர்களுக்கு 2006 முதல் 2008 வரை காலி நிலத்தை நிலையான குத்தகைக்கு விட்டுள்ளது. இதன்மூலம் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள மனை நிலம் தனி நபருக்கு நிலையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இச்செய்கை, சிறப்புப் பொருளாதார மண்டல விதிகளுக்குப் புறம்பானதாகும். இது இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நிலங்களை அரசே கையகப்படுத்தியிருந்தால் இதுபோன்ற நிலை ஏற்பட்டிருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இப்போதுதான் சொல்லிவிட்டுச் சென்றார். தற்போது அவர் இருக்கையில் இல்லை. அவர் தணிக்கைக் குழு வைத்த ரிப்போர்ட்டைப் படித்துக்கொண்டிருந்தார், இந்த ரிப்போர்ட்டையும் அவர் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலம் கையகப்படுத்த அரசாணை வெளியிடப்பட்டு, அதனடிப்படையில், தனியாரோ அல்லது தனியார் பெரும்பான்மை பங்கு வகிக்கும் கூட்டு முயற்சி சிறப்பு நோக்கு சாதனமோ நிலங்களை பேச்சுவார்த்தைமூலம் வாங்க பல நேர்வுகளில் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு வழிவகை செய்துள்ளது. அதாவது, அரசாணைப்படி நிலம் கையகப்படுத்தப்பட்டிருந்தால், அரசின் வசமே நிலம் இருந்திருக்கும். தனியார் தொழில் நிறுவனம் குத்தகைதாரராக மட்டுமே இருந்திருக்கும். தனியார் தொழில் நிறுவனம் அந்த நிலத்தை வேறு எதற்கும் பயன்படுத்தவும் இயலாது. தொழில் துவங்கவில்லையெனில் குத்தகைக்கு அளித்த நிலத்தை அரசே

திரும்பப் பெற்றுக்கொள்ளவும் இயலும். ஆனால், அவ்வாறு செய்யாமல் விவசாயிகளிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்தி தனியார் பயன் பெற வழிவகுத்தது முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசுதான்.

காவேரி டெல்டா பகுதியில் மீத்தேன் எரிவாயு திட்டத்திற்கு அனுமதி அளித்து, அதற்காக திருவாளர்கள் கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு அதற்கான உத்தரவை 1–1–2011 அன்று முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு வழங்கியது. அந்த நிறுவனத்துடன் 4–1–2011 அன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குழாய் பதிப்பு பயன்பாட்டிற்கான அனுமதியைப் பெறுவதற்கும், இதர கட்டமைப்பு வசதிகளுக்கும் தமிழக அரசு உதவி செய்யும் என்ற ஷரத்தும் உள்ளது. விவசாயிகள் பாதிப்படையும் வகையில் தொழில் நிறுவனங்களுக்கு நிலத்தைப் பெற்றுக்கொடுக்க இதுபோன்ற ஒப்பந்தங்களைப் போட்டது முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசுதான். மேலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் உடன்குடி அனல் மின் நிலையத் திட்டத்திற்காக தனியார் நிறுவனத்திற்கு 200 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவில்லையா என திரு. கருணாநிதி வினவியுள்ளார். உடன்குடி அனல் மின் நிலையத் திட்டம் தனியார் திட்டமல்ல. இதற்குக் கையகப்படுத்தப்பட்ட நிலம் தனியார் எவருக்கும் கொடுக்கப்படவில்லை. இந்த நிலத்தின் உரிமைதாரர் தமிழ்நாடு மின்சார வாரியம்தான்.

நில எடுப்புச் சட்டம் தொடர்பாக திரு. அண்ணா ஹசாரேயின் போராட்டத்துக்கு ஒரு சில தலைவர்கள்போல் அரசியல் ஆதாயத்துக்காக திரு. கருணாநிதியும் வலியச் சென்று தனது ஆதரவைத் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார். இதுபோன்ற வேடதாரிகளின் முகமூடியைக் கிழிக்கும் விதமாகவே, திரு. அண்ணா ஹசாரே, “அரசியல் ரீதியில் காங்கிரஸ் கட்சி ஆதாயம் அடைய வேண்டும் எனபதற்காகவே, நிலம் கையகப்படுத்துதல் சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிரான போராட்டத்தை சோனியா ஆதரிக்கிறார். விவசாயிகள்மீது காங்கிரஸுக்கு அக்கறை இருந்திருந்தால், நாடு முழுவதிலும் உள்ள நிலத்தை முழுமையாகக் கணக்கெடுத்த பிறகு, 2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி நிறைவேற்றியிருக்கும்” என்று சொல்லியுள்ளார். மேலும், “மக்களின் நலனுக்காக நான் எங்கு போராட்டம் நடத்தினாலும் சரி, அதன்மூலம் எதிர்க்கட்சிகள் ஆதாயம் அடைய முயலுகின்றன” என்று தி.மு.க.–வின் உண்மை முகத்தை தோலுரித்தும் காட்டியுள்ளார்.



அதுபோன்றே, 2013 ஆம் ஆண்டைய சட்டத்தில் விவசாயம் செய்வதற்குத் தகுதி வாய்ந்த நிலமா என்பது கவனிக்கப்பட வேண்டும் என்றும், தற்போதைய திருத்தச் சட்டத்தின்படி அவ்வாறு கவனிக்கத் தேவையில்லை என்றும் சொல்வது சரியல்ல. முந்தையச் சட்டத்தில், வேறு நிலம் எதுவும் இல்லை என்கிறபோது பாசன வசதியுள்ள பல போகம் பயிரிடப்படும் நிலம் கையெடுப்பு செய்யலாம் என உள்ளது. அவ்வாறு செய்யும்போது, அதே அளவான சாகுபடிக்கு பயனற்ற நிலம் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தில் உள்ள நிகர பயிரிடும் பரப்பளவில் எந்த அளவு நில எடுப்புச் செய்யலாம் என சம்பந்தப்பட்ட அரசின் அறிவிக்கையின்படி நில எடுப்புச் செய்யலாம் எனவும் உள்ளது. எனவே, 2013 ஆம் ஆண்டு சட்டத்தில் விவசாயம் செய்வதற்குத் தகுதி வாய்ந்த நிலத்தைக் கையகப்படுத்திடக் கூடாது என எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

*பிற்பகல் 1–40*

பொதுநலத்திற்கென நிலத்தைக் கையகப்படுத்துவது ஜனநாயகத்தில் தவிர்க்க முடியாததாகும். அவ்வாறு நிலங்கள் உரிய அதிகார அமைப்பாலேயே கையகப்படுத்தப்படுகிறதா என்பதும், அவ்வாறு நிலங்கள் கையகப்படுத்தும்போது அதற்குரிய இழப்பீடு வழங்கப்பட்டு நிலத்தை இழந்தவர்களுக்கு மறுவாழ்வும், மறு குடியமர்வும் கிடைக்கிறதா என்பதும் நில எடுப்பின் காரணமாக பொது நலன் காக்கப்படுகிறதா என்பதும்தான் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும். இந்த அடிப்படையிலேதான் தற்போது மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட ‘நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவு மறைவின்மைக்கும் மறுவாழ்வு அளிப்பு மற்றும் மறுகுடியமர்வுக்கான உரிமை’ சட்டத்திற்கான திருத்தம், குறிப்பிட்ட சில நில எடுப்பு நிகழ்வுகளில் அத்தியாயம் II–ல் குறிப்பிடப்பட்டுள்ள சமூக தாக்கத்தைத் தீர்மானித்தல் மற்றும் பொது நலன் மற்றும் III–வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சிறப்புக் கூறுகள் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிப்பதற்கான அதிகாரத்தை மாநில

அரசுக்கு வழங்குவதாலும், தொழில் வளாக வழிக்குத் தேவையான நில எடுப்பு, குறிப்பிடப்பட்ட இருப்புப் பாதை மற்றும் சாலையில் இருமருங்கும் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் மட்டுமே எடுக்கப்பட வேண்டும் என்றும், இந்தக் குறிப்பிடப்பட்ட திட்டங்களுக்குக் குறைந்தபட்ச நிலமே எடுக்கப்பட வேண்டும் என்றும், பயிர் செய்யப்படாத நிலங்கள் ஆகியவற்றை அளவு செய்து அவற்றின் விவரங்களைத் தொகுத்து வைத்திருத்தல் வேண்டும் என்றும், நில எடுப்பால் பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்க வேண்டுமென்ற நிபந்தனைகளையெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதாலும், தனியார் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு இந்த விதிமுறைகளின்படி நிலம் கையகப்படுத்த வழிவகை செய்தது விலக்கிக்கொள்ளப்பட்டதாலும், இந்தச் சட்டத் திருத்த மசோதா பொது நலனுக்காகவே என்பதால்தான், இதனை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களவையில் ஆதரித்தது என்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification–க்கு எல்லாம் நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிற. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் ஒன்றும் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் அருமை கருதி. . . (குறுக்கீடு)

**திரு. எ.வ. வேலு:** Point of order. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் Point of order ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்த விளக்கங்களுக்கெல்லாம். . . (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். குறுக்கே எல்லோரும் பேச முடியாது. (குறுக்கீடுகள்) குறுக்கே எல்லோரும் பேச முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) குறுக்கே எல்லோரும் point of order கேட்க முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) Point of order இதற்கெல்லாம் கேட்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பேசட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் அருமை கருதி நான் . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இல்லை. Point of order ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கங்களுக்கெல்லாம் பதில் சொல்ல முடியுமென்று சொன்னாலுங்கூட,. . .(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் Point of order ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் குறைவாக இருக்கிற காரணத்தினாலே அந்த விளக்கங்களுக்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் point of order ஒன்றும் கிடையாது. (குறுக்கீடு) திரு. வேலு, நீங்கள் அப்படியெல்லாம் குறுக்கிடக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Point of order ஒன்றும் இல்லை, நீங்கள் உட்காருங்கள். அதில் point of order எதுவும் இல்லை. நீங்கள் நினைத்தவுடன் point of order கேட்டால் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Point of order ஒன்றும் இல்லை, உட்காருங்கள். அதையெல்லாம் அனுமதிக்க முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். Point of Order கிடையாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இதில் எல்லாம் point of order கிடையாது. இல்லை அனுமதிக்க முடியாது. தெளிவாகச் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். சபையை அமைதியாக நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) இன்னும்

5 பேர் பேச வேண்டும். இப்படி, திடீர் திடீரென்று point of order கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினருக்கு இன்றைக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தேன். அரை மணி நேரம் பேசினார். (குறுக்கீடுகள்) பேசும்போது எல்லோரும் கேட்டுக்கொண்டார்கள். அதனால் இப்பொழுது point of order எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மு.க. ஸ்டாலின், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் தலைவரை அனுமதிக்கிறேன். எல்லோருக்கும் அனுமதி கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள், என்னவென்று சொல்லுங்கள்.

பிற்பகல் 1–45

***திரு. மு.க. ஸ்டாலின்:** Point of order அவர்தான் கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, Point of order அவர்தான் கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு எங்களுடைய உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கேட்கிறா (குறுக்கீடு) நான் கேட்கவில்லை, அவர் கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களது சட்டமன்றக் கட்சித் தலைவரைத்தான் நான் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அவர் எழுப்பட்டும். (குறுக்கீடுகள்) அவரும் இவ்வளவு நேரம் கேட்டுக்கொண்டுதானே இருந்தார்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எ.வ. வேலு என்ன சொல்ல வருகிறார். (குறுக்கீடுகள்) போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of order இருக்கிறது? மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.



**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நில எடுப்புச் சட்டத்தினைப் பற்றி இங்கே விளக்கமாகச் சொன்னார்கள். அதில் எனக்கு ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பொறுத்தவரையில் இதனை ஆதரிக்க வேண்டாம் என்று சொல்வதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்று சொன்னால், அதற்கு மட்டும் விளக்கம் கேட்க வேண்டும் என்பதற்காகத்தான், வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order என்றால் என்ன?

**திரு. எ.வ. வேலு:** அவர் சொன்னதும்தான் Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order என்றால் என்ன என்று நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) Point of order என்பது அவையை நடத்துவதில் தவறு இருந்தால்தானே கேட்க வேண்டும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது தி.மு.க.–விற்கு அருகதை இல்லை என்று சொன்னார். அதற்கு Point of order கிளப்புகிறார் அவர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியதில் ஏதேனும் விதிகளுக்கு மாறாக இருந்தால் நீங்கள் Point of order கேட்கலாம். அப்படியில்லாமல் அவர் பேசியதில் விளக்கம் என்ன கேட்பது? (குறுக்கீடுகள்) அவர் பேசியதில் என்ன விளக்கம் கேட்கிறார்? (குறுக்கீடுகள்) விளக்கம் எப்படி Point of order ஆக முடியும்? (குறுக்கீடுகள்) இல்லை, Clarification–க்கும், Point of order–க்கும் முதலில் வித்தியாசம் தெரிந்துகொண்டு அவைக்கு வர வேண்டும். விதியை நன்கு படித்துவிட்டு வாருங்கள். விதியை நன்கு படிக்காமல் இங்கு வந்து நேரத்தினை வீணடிக்காதீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, Point of order என்றால், அவர் ஏதாவது தவறாகச் சொன்னால்தானே கேட்க வேண்டும்?

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க.–விற்கு அந்த அருகதை இல்லை என்பதுதான்

என்னுடைய வாதம். (குறுக்கீடுகள்) Allow செய்யுங்கள். நான் விஷயத்திற்கு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையில் ஏதேனும் தவறாக நடக்கிறது என்றால் நீங்கள் Point of order கேளுங்கள். நான் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவர் Point of order கேட்கவில்லை. அவர் clarification அல்லவா கேட்கிறார்?. (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில எடுப்பைப் பொறுத்தவரை விவசாயிகளிடத்தில் அனுமதி பெறுவது உண்டா, இல்லையா? ஒரு நிலத்தினை எடுக்கின்றபோது, இப்போது இருக்கின்ற புதிய சட்டத்தின் பிரகாரம் விவசாயிகளிடம் அனுமதி பெற்று எடுப்பது உண்டா, இல்லையா? இது ஒன்று. இரண்டாவது, ஐந்து ஆண்டிற்குள் அந்த நிலம் எடுக்கப்பட்ட பின் அதைப் பயன்படுத்தவில்லை என்று சொன்னால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் Point of order என்று சொல்லிவிட்டு, இப்படிப் பேச முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, சொல்லுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடத்திலே நிலத்தைக் கையகப்படுத்துகின்றபோது, அவர்களுடைய அனுமதியைப் பெற்று எடுப்பது உண்டா, இல்லையா? அப்படி எடுக்கப்பட்ட நிலம், ஐந்தாண்டுக்குள் திட்டம் நிறைவேறவில்லை என்று சொன்னால் அந்த நிலம் மீண்டும் விவசாயிகளிடம் ஒப்படைக்கப்படுமா? அந்த நில எடுப்பில் பிரச்சினை இருக்கின்றது என்று சொன்னால் அவர்கள் நீதிமன்றத்திற்குப் போக முடியுமா, முடியாதா? இந்த மூன்றைப் பற்றி விளக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் Point of order என்று கேட்டுவிட்டு, விளக்கம் கோர முடியாது. நீங்கள் அமைச்சராக



இருந்தவர். (குறுக்கீடுகள்) விளக்கம் கேட்பதைப் போய் Point of order என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவையின் நேரத்தினை வீணடிக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் மூலமாக நிலம் கையகப்படுத்தும்பொழுது தனியார் மருத்துவமனைகளுக்கோ, தனியார் கல்வி நிறுவனங்களுக்கோ, விலை உயர்ந்த விவசாய நிலங்களைக் கையகப்படுத்தக்கூடாது என்ற நிபந்தனை ஷரத்து அதில் இருக்க வேண்டும். பொது நோக்கத்தோடு இருக்கின்ற கல்வி நிறுவனங்கள், அரசு, அரசு சார்ந்த கல்வி நிறுவனங்களுக்கோ, அரசு, அரசு சார்ந்த மருத்துவமனைகளுக்கோ, நிலம் கையகப்படுத்துவதில் எந்தவிதத் தவறும் இல்லை என்ற ஷரத்தினைத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் அதில் சேர்க்க வேண்டும் என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதை பாரதிய ஜனதா கட்சி ஏற்றுக்கொண்டு அதனை நீக்கியிருக்கிறது. (குறுக்கீடுகள்) முதலில் புரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழில் தொடங்குவதற்கு எந்த நிலம் கையகப்படுத்தப்பட்டாலும், அவை டிட்கோ, சிட்கோ, சிப்காட் எந்த நிறுவனங்கள் மூலமாக எடுக்கப்பட்டாலும், அந்த நிறுவனங்களுக்குத்தான் நிலத்தின் மீதான முழு உரிமையும் இருக்கின்றது. தனியார் நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு மட்டும்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள். முழு உரிமையும் உரிமைதாரராக அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது. இதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசினுடைய கொள்கை. ஆனால், தி.மு.க. ஆட்சியில், நான் இதற்கு முன்பு விளக்கம் சொன்னேன். (குறுக்கீடுகள்) விளக்கத்தைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே வாய்ப்பு கேட்டார். Point of order கேட்டார். Point of clarification கேட்டார். அவர் கேட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) திரும்பவும் பேசுவதில் அர்த்தம் இல்லை. திரு. சக்கரபாணி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்னை சொல்லவிடமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது ஏற்கெனவே விளக்கம் சொன்னேன். (குறுக்கீடுகள்) தி.மு.க. ஆட்சியிலே, (குறுக்கீடுகள்) நான் முடித்துக்கொள்கிறேன். பிறகு சொல்லுங்கள். அதாவது விலைமதிப்பில்லாத விவசாய நிலங்கள் கையகப்படுத்தி தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டது தி.மு.க. ஆட்சியில். (குறுக்கீடுகள்) எல்லாம் ஒன்றுதானே? நிலம் கையகப்படுத்துவது எல்லாம் ஒன்றுதானே? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேச்சுவார்த்தையில், யார் பேசுவது? அதற்கு அனுமதி கொடுப்பது யார்? (குறுக்கீடுகள்) நான் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) தி.மு.க. உறுப்பினர்கள் மாறி மாறி தவறாகக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் வீணாகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உட்காருங்கள். நான் விளக்கமாகப் பேசிவிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலுவுக்கு ஏன் இவ்வாறு கோபம் வருகிறது என்பதற்குக் காரணம், ஏற்கெனவே அவர் தனியார் பொறியியல் கல்லூரிகளை ஆரம்பித்திருக்கிறார். இன்னும் ஏதாவது பொறியியல் கல்லூரி ஆரம்பிக்க இருக்கிறாரா? நிலம் கையகப்படுத்தும் சட்டத்தால் பாதிப்பு உருவாகுமா என்ற சந்தேகம் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இதற்கு மேற்கொண்டு யாரும் பேச வேண்டாம். திரு. க. பாலகிருஷ்ணன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலம் கையகப்படுத்துகின்ற சட்டம் சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏராளமான விளக்கங்களைக்



கொடுத்திருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் நானும் விளக்கம் சொல்ல முடியும் என்று சொன்னாலும். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** காலத்தின் அருமை கருதி நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதாவது இந்த பி.ஜே.பி. அரசாங்கம் சட்டத் திருத்தம் கொண்டுவருவதற்கு முன்னாலேயே தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே கடந்த ஆண்டு பிப்ரவரி மாதமே அந்தச் சட்டத்தில் 105(a) என்ற ஒரு பிரிவைப் புகுத்தி, ஒட்டுமொத்தத்திலே தமிழ்நாட்டில் அந்த சட்டம் நீர்த்துப்போகச் செய்வதற்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. பிறகு என்ன காரணத்தினாலோ அதை வாபஸ் வாங்கி பின்னர் வேறு ஒரு சட்டத்தை நிறைவேற்றினீர்கள். ஆகவே, நிலம் கையகப்படுத்துகின்ற அந்தச் சட்டத்தை தமிழ்நாட்டிலே இன்றைக்கு நீர்த்துப்போகச் செய்வதால் தமிழக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*2014–2015* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உபரி இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் *3,536.78* கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையில் திட்ட மதிப்பீட்டில் *4,616.02* கோடி ரூபாய் பற்றாக்குறை என்று கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது நடப்பு நிதிநிலை அறிக்கையில் திட்ட மதிப்பீட்டில் *4,616.02* கோடி ரூபாய் பற்றாக்குறை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உபரியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதே பற்றாக்குறையாக வந்திருக்கிறபோது, இந்த ஆண்டு பற்றாக்குறையே *4,616.02* கோடி ரூபாய் என்பதால் அது மேலும் பல ஆயிரம் கோடி ரூபாயாக உயர்வதற்குத்தான் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என்பதை நான் இங்கே கவலையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் *1–55*

*2014–2015* ஆம் ஆண்டில் சொந்த வரி வருவாய் *91,835* கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால், திருத்திய மதிப்பீட்டில் அது ரூ.*85,772* கோடியாகக் குறைந்திருக்கிறது. அப்படியிருக்கும்போது *2015–2016* ஆம் ஆண்டு சொந்த வரி

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2015 மார்ச் 30

வருவாய் ரூ.96,083 கோடியாக உயரும் என்று மதிப்பிட்டிருப்பது எப்படி சாத்தியம் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையில் இப்படி வருவாய் குறைந்திருப்பால் இன்றைக்கு சில துறைகளில் மக்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதி குறைக்கப்பட்டிருக்கிறது என்பது மக்கள் நலனைப் பாதிக்கச் செய்யும் என்பதை நான் இங்கு கவலையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

ஒவ்வோர் ஆண்டும் பணவீக்கம், விலைவாசி உயர்வுக்கேற்ப துறைக்கான ஒதுக்கீடு உயர்த்தப்படவேண்டிய இந்தச் சூழ்நிலையில் சில துறைகளுக்குக் குறைத்திருப்பதை நான் இங்கு கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, போக்குவரத்துத் துறை, காவல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கூட்டுறவுத் துறை, சுற்றுச்சூழல் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை மற்றும் செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை, மாற்றுத் திறனாளிகள் துறை ஆகிய துறைகளுக்கெல்லாம் ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது என்னிடம் அதற்கான விவரங்கள் இருக்கின்றன. காலத்தின் அருமை கருதி, எவ்வளவு குறைத்திருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், இந்தத் துறைகளுக்கெல்லாம் கடந்த ஆண்டு ஒதுக்கியதைவிட இந்த ஆண்டு குறைத்திருப்பதன்மூலம் இந்தத் துறைகளிலே மக்கள் நலன் பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம்பொதுவாகப் பேசக்கூடாது. எந்தத் துறையில் சென்ற ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆண்டு எந்தத் துறையில் எவ்வளவு நிதி குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.



2015 மார்ச் 30]

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைக்கு கடந்த ஆண்டு ரூ.4,138.38 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ.4,081.44 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத் துறையில் கடந்த ஆண்டு ரூ.1,801.02 கோடி ஒதுக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் ரூ.1,540.77 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கியமான துறையாக இருக்கிற காவல் துறைக்கு கடந்த ஆண்டு ரூ.5,716.87 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. நடப்பு நிதியாண்டில் ரூ.5,568.81 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்புத் துறைக்கு கடந்த ஆண்டு ரூ.1,100.90 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ.1,097.42 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறைக்கு கடந்த ஆண்டு ரூ.723.55 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. நடப்பு நிதியாண்டில் வெறும் ரூ.627 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சுற்றுச்சூழல் துறைக்கு ரூ.134.26 கோடி ஒதுக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் ரூ.84.48 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு கடந்த ஆண்டு ரூ.1,249 கோடி ஒதுக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் ரூ.1,100.57 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறைக்கு கடந்த ஆண்டு ரூ.114.64 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ.66.78 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்கு கடந்த ஆண்டு ரூ.199.34 கோடி ஒதுக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் ரூ.149.69 கோடி எனக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு மனக்கணக்கு போட்டு பேசிக்கொண்டிருக்கிறார். அந்தக் கணக்கை வைத்து பேசக்கூடாது. அதாவது 2015–2016 ஆம் ஆண்டில் காவல் துறைக்கு ரூ.5,568.81 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு எவ்வளவு என்று குறிப்பிட்டார்கள்? (குறுக்கீடு) எந்தப் புத்தகத்தில் அது இருக்கிறது? அவர் எதை வைத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய வாய்ப்புகள் என்பது இல்லாத இந்தச் சூழ்நிலையில் யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டதைப்போல இந்த நிதிநிலை அறிக்கை இருக்குமோ என்கிற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குக் கடந்த ஆண்டு ரூ.153.55 கோடி ஒதுக்கப்பட்டது. தற்போது ரூ.110.57 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். இது நல்ல செய்தி என்று சொன்னாலும் அங்கே இருக்கிற நெருக்கடியைக் காரணம் காட்டி ஒருமுறை சிறப்பு நிதியாக ரூ.250 கோடி ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் மோனோ இரயில் திட்டம் என்பது அறிவிக்கப்பட்டது. அது எந்த நிலையிலே இருக்கிறது? சென்னை—பாண்டிச்சேரி நீர்வழிப் போக்குவரத்துத் திட்டம் என்பதும் இங்கே இடம்பெறவில்லை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 2—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, பெட்ரோல் விலை குறைந்த காரணத்தினால் ஆயிரம் கோடி ரூபாய் தமிழக அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்கிற வருத்தம் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டிலே 2,100 கோடி ரூபாய் அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெட்ரோல் விலை குறைகிறபோது மக்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால், வருமானம் குறைவது அரசுக்கு வருத்தமாக இருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால் பெட்ரோல்மீது மாநில அரசும் வரி கூடுதலாகப் போட்டிருக்கிற காரணத்தினால்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, நான் இங்கே குறிப்பிட விரும்புவது நிதிநிலையை ஈடுகட்டுவதற்கு அரசு வரி வருவாய் மட்டுமல்லாமல், புதிய வழிகளிலே குறிப்பாக கனிம வளங்கள் போன்றவற்றின் மூலம் வருமானத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



பாசனம் என்பது தமிழ்நாட்டிற்கு மிகப் பெரிய சவாலாக இருக்கிறது. ஆனால், இன்றைக்குப் புதிய பாசனத் திட்டங்களுக்குக் கூடுதலான நிதி தேவைப்படுகிறது. டெல்டா மாவட்டம், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் தூர் வாருகிற பணி நடைபெறாமல் வாய்க்கால்கள் எல்லாம் கிட்டத்தட்ட மண்மூடி, பாசனத்திற்கு இலாயக்கற்றவையாக இருக்கின்றன. எனவே, இந்த ஆண்டாவது தூர் வாருவதற்கான சிறப்பு நிதியினை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோராண்டும் பாசனக் கால்வாய்களைச் சீரமைப்பதற்காக பொதுப் பணித் துறையின் மூலமாக நிதி ஒதுக்கப்படுகிறது. சென்ற ஆண்டு சிறப்பு நிதியாக டெல்டா மாவட்டங்களுக்கு 30 கோடி ரூபாயை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கி பணியினை நல்ல முறையில் செய்து முடித்திருக்கின்றார்கள் என்ற விவரத்தினை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல நடப்பு ஆண்டுக்கும், குறிப்பாக சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாவுக்கும் சேர்த்து நிதி ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேளாண் துறை என்பது சமீப காலங்களில் மிகப் பெரிய சர்ச்சைக்கு உள்ளான துறையாக மாறியிருக்கிறது. குறிப்பாக, அந்தத் துறையிலே பணியாற்றிய முத்துக்குமாரசாமி என்கிற அதிகாரி தற்கொலை செய்திருக்கிறார். அந்த விசாரணை இன்றைக்கு C.B.C.I.D.-க்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், அந்த வழக்கு விசாரணையில் இருக்கிறது. அதைத் திரும்பவும் ஏன் விவாதத்திற்குக் கொண்டு வருகிறீர்கள்? வேறு விவாதத்திற்குப் போங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றும் நான் கேட்கவில்லையே? நான் ஒன்றும் குற்றஞ்சாட்டவில்லையே? சம்பவம் நடந்திருக்கிறது. நீங்கள் C.B.C.I.D.–ஐ வைத்து விசாரித்திருக்கிறீர்கள். அதை C.B.I. விசாரணைக்கு உட்படுத்தினால் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும். நியாயம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது, அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கரும்புக்கான பாக்கி பலமுறை இங்கே எழுப்பிய பிரச்சினைதான். தனியார் சர்க்கரை ஆலைகள் சற்றேறக்குறைய 500 கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பலமுறை பதில் சொல்லியிருக்கிறார். ஆனாலும் அந்தப் பாக்கித் தொகை என்பது கிடைக்கவில்லை. எனவே, அதைப் பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதாவது வேளாண் பயிர் இன்சூரன்ஸ் என்பது 2013–2014 ஆம் ஆண்டுக்கான 198 கோடி ரூபாய் இதுவரையிலே கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அதை உடனடியாக மாநில அரசு கொடுத்து 2013–2014 ஆம் ஆண்டுக்கான பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உணவு மானியத்தைப் பொறுத்தவரையிலே கடந்த ஆண்டும் 5,300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் 5,300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், விலைவாசி ஏறுகிறபோது நாம் கடந்த ஆண்டு விநியோகித்த அந்தப் பொருட்களை இந்த ஆண்டும் விநியோகிக்க முடியாத நிலைமை என்பது ஏற்படும். இங்கே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் எல்லா பொருட்களும், நியாயமாக, சரியாக வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால், இதே அவையிலே மத்திய அரசு நமக்கு ஒதுக்க வேண்டிய மண்ணெண்ணெய்யினுடைய அளவை 45 சதமானம் குறைத்து விட்டதாக இங்கே பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது குறைந்த காரணத்தினாலே இன்றைக்கு மண்ணெண்ணெய் பல இடங்களிலே விநியோகிக்கப்பட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.



அதேபோல, துவரம் பருப்பைப் பொறுத்தவரை, அரசு ஆவணத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 2014 ஆம் ஆண்டு துவரம் பருப்பு 68 சதமானம்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. உளுத்தம் பருப்பு 46 சதமானம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பாமாயில் 85 சதமானம்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, 100 சதமானம் ஒதுக்கீடு செய்யாதபோது, 100 சதமானம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அந்தப் பொருள் வழங்குவதற்கான சாத்தியம் இல்லை என்பதை இங்கே நான் குறிப்பிட்டு அவற்றை முறையாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் உணவுத் துறைக்கு 5,300 கோடி ரூபாய்தான் இந்த ஆண்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலைச் சொன்னார்கள். 5300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தியத் திருநாட்டின் மற்ற மாநிலங்களை ஒப்பிடுகிறபோது பெரிய மக்கள் தொகை கொண்ட எல்லா மாநிலங்களிலும் இதைவிட மிகக் குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 5,300 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணவுத் துறைக்கு மானியமாக ஒதுக்கியுள்ளார்கள் என்பதனை இந்த அவைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–05

அதேபோல், தமிழகத்தின் தேவையான மண்ணெண்ணெய் 65 ஆயிரத்து 140 கிலோ லிட்டர் என்பது. 29 ஆயிரத்து 60 கிலோ லிட்டராகக் குறைக்கப்பட்டு மத்திய அரசால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசில் அங்கம் வகித்த தி.மு.க.வும் காங்கிரசும் சேர்ந்து கூட்டாட்சி நடத்திய காலங்களில் பத்து முறை குறைக்கப்பட்டு 29 ஆயிரத்து 60 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்தான் இன்றைக்கு வழங்கப்படுகிறது. ஆனால், இரண்டு சிலிண்டர்கள் வைத்திருப்பவர்கள், ஒரு சிலிண்டர் வைத்திருப்பவர்கள் என்கிற கணக்கெல்லாம் எடுத்து தகுதியானவர்களுக்கு உரியவர்களுக்கும் சரியாக

மண்ணெண்ணெய் போய்ச் சேருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், பருப்பு வகைகளில், உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு போன்றவையும் முறையாக ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரு கிலோ மாதந்தோறும் சென்றடைகிறது. இந்த மார்ச் மாதத்தைப் பொறுத்தவரையில், முதல் வாரத்திலேயே கிடைக்க வேண்டியது, மார்ச் மாதம் நடுவிலும் பின்னாலும் கிடைத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நுகர்பொருட்கள் சரியாக, முறையாக சென்று கொண்டிருக்கின்றன என்பதனையும் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுகின்ற தமிழ்நாட்டில்தான் இன்றைக்குப் பொது விநியோகத் திட்டம் வெகு சிறப்பாக நடைபெறுகிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள், காவல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி சென்ற ஆண்டைக்காட்டிலும் இவ்வாண்டு குறைக்கப்பட்டிருக்கிறது என்கிற தவறான கருத்தை, புள்ளிவிவரத்தினை இங்கே சொல்லி, மற்ற துறைகளிலும் அவ்வாறு குறைக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரங்களையும் இங்கே எடுத்துச்சொன்னார்கள். நான் திரும்ப விவரம் கேட்டபோது, அவர் ஏதோ ஒரு குறிப்பை வைத்துக்கொண்டு 5,700 கோடி ரூபாய் இருக்க வேண்டியது இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரத்தைச் சொன்னார். சென்ற 2014–2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 5,186.20 கோடி ரூபாய் அளவுக்கு கணிசமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று இருக்கிறது, நீங்கள் கவனமாகப் பார்க்க வேண்டும். அது இந்த ஆண்டு, 2015–2016 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 5,568.81 கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அப்படியென்றால், ரூபாய் 5,186 கோடியிலிருந்து ரூபாய் 5,568 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஏதாவது ஒரு புள்ளிவிவரத்தை கையிலே வைத்துக்கொண்டு, ஏதோ ஒரு பட்டியலைப் படித்துக்கொண்டிருந்தால் சரியல்ல. அதுவும் சட்டமன்றத்தில் தவறான புள்ளிவிவரங்களைப் படித்துக்கொண்டிருப்பது என்பது சரியாக வராது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் மற்ற துறைகளின்மீது தந்த புள்ளிவிவரங்களுக்கு ஆதாரம் தந்தால் பதிய வேண்டும், ஆதாரங்கள் இல்லையென்றால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. க. பாலகிருஷ்ணன்:** நான் இந்த அவையிலே சொல்லியிருக்கின்ற புள்ளிவிவரங்கள் அத்துணையும், நிதிநிலை அறிக்கை தொடர்பாக அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்ட ஆவணங்களில் இணைப்பாக உள்ளவற்றில் கொடுக்கப்பட்டிருப்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது ஆதாரத்தோடு சொல்லிவிட்டார். அதை நீங்கள் மறுக்க வேண்டாம். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) ஆதாரத்தோடுதான் அவர் சொல்லியிருக்கிறார்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** காவல் துறை என்று எடுத்துக்கொண்டால், காவல் துறையில்–நிதிநிலை அறிக்கையில் இருப்பதைத்தான் நான் சொல்கிறேன். வேறு எதையும் நான் படிப்பதற்குத் தயாராக இல்லை. பக்கம் எண் 205, காவல்–மானியக் கோரிக்கை எண் 22, அதாவது 2014–2015 திருத்த மதிப்பீடு ரூ. 5,716.80 கோடி. இன்றைக்கு ரூ.5,568.81 கோடி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உட்காரட்டும்; நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கூற்றின்படியே 5,186 கோடி ரூபாய் என்ற அளவிற்குத்தான் என்று வைத்துக்கொள்வோம். (குறுக்கீடு) பொறுங்கள், ஏன் அவசரப்படுகிறீர்கள்? 5,186.20 கோடி ரூபாய், 2014–2015 ஆம் நிதிநிலை அறிக்கையில் காவல் துறைக்கு ஒதுக்கப்பட்டது. இந்த நிதிநிலை அறிக்கையில் 5,568.81 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, சென்ற ஆண்டைக்காட்டிலும் இந்த

ஆண்டு கூடுதலாகத்தான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் படிப்பது திருத்திய மதிப்பீடு. திருத்திய மதிப்பீடு வருகின்றபோது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள், 5,186 கோடி ரூபாய் என்று ஒதுக்கப்பட்டிருந்த நிலையிலும் கூடுதலாக, உங்களுடைய கூற்றுப்படியே 5,700 கோடி ரூபாய் திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், சொன்னதற்கு மேலாகத்தான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற புள்ளிவிவரங்களை இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இதில் எந்தக் குறைபாடும் இல்லை.

சொன்னதற்கு மேலாக, நிதிநிலை அறிக்கையில் வந்ததற்கு மேலாக, திருத்த மதிப்பீடுகளில் அந்தத் துறையின் சார்பாக செலவினங்கள் ஏற்பட்டால் அந்தச் செலவினங்களும் சேர்த்து நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைத்தான் அவர் இங்கே வைத்து படித்துக்கொண்டிருக்கின்றாரேயொழிய ஆரம்பத்தில் ஓர் ஆண்டினுடைய வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்குகின்றபோது குறைத்தும், இந்த ஆண்டு 2015–2016–ல் நிதி ஒதுக்குகின்றபோது அதைக்காட்டிலும் குறைத்தும் நாங்கள் ஒதுக்கவில்லை. சென்ற ஆண்டில் சொன்னதைக்காட்டிலும் திருத்த மதிப்பீட்டில் அதிகமான, பல கோடி ரூபாய்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செலவழித்திருக்கின்றது என்பதை இங்கே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நேரம் அதிகமாகிவிட்டது. அடுத்து, உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுக்குத்தான் விளக்க உரையை மாண்புமிகு முதலமைச்சர் தெளிவாகக் கொடுத்திருக்கின்றார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னதற்குப் பிறகும் அதில் என்ன clarification இருக்கின்றது? (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இவர் சொன்ன ஒவ்வொரு துறையினுடைய அந்த இலக்குகளை, ஒதுக்கீடுகளை நான் என்னுடைய பதிலுரையில் விளக்கமாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவணங்களிலே இப்படி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதற்கு உரிய விளக்கங்கள் நீங்கள் தந்தால் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் விவரம் தெரிந்தவர். அதாவது பட்ஜெட்டில் ஒரு நிதி சொல்லி, அதனுடைய திருத்த மதிப்பீடுகளில் குறைக்கப்பட்டிருந்தால் நீங்கள் அதைச் சொல்லலாம். ஆனால், திருத்த மதிப்பீட்டில் அது உயர்த்தப்பட்டிருக்கின்றது. உயர்த்தப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் காவல் துறைக்கு நிதிநிலை அறிக்கையில் சொன்னதுபோல் மேலும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் அதனுடைய உட்பொருள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இப்போதுதான் நீங்கள் வழிக்கு வந்திருக்கின்றீர்கள். (குறுக்கீடு) இருங்கள். இப்போதுதான் நீங்கள் வழிக்கு வந்திருக்கின்றீர்கள். இப்போது காவல் துறைக்கு 5,568 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேவைப்பட்டால் திருத்த மதிப்பீட்டில் இந்த வருட முடிவில் இந்த நிதி கூட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், அவ்வளவுதான், உட்காருங்கள். திரு. சுந்தரம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னது 201420–15 நிதிநிலை அறிக்கையில் கூடுதல் நிதி ஒதுக்கியுள்ளீர்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் அவர் புள்ளிவிவரங்களைத் தந்தார். அதற்குத்தான் இந்த விளக்கத்தை நான் தந்திருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாலகிருஷ்ணன், அனுமதியில்லை. மேற்கொண்டு இதில் ஒன்றும் பேச வேண்டாம். நீங்கள் உட்காருங்கள். இதற்கெல்லாம் நேரம் இல்லை. நீங்கள்

முன்பே சொல்லிவிட்டீர்கள் அல்லவா? தற்போது உட்காருங்கள். நீங்கள் உட்கார்ந்துவிட்டீர்கள். உட்கார்ந்த நீங்கள் திரும்பவும் எழுந்து நின்று பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. நீங்கள் உரையை முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு விளக்கமாகப் பதில் சொல்லிவிட்டார். மீதியுள்ளவற்றை அவர் தன்னுடைய பதில் உரையில் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கின்றார். (குறுக்கீடு)

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 3.50 இலட்சம் மனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதை நிறைவேற்றுவதற்கு அந்த அரசு ஆணை மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைகின்ற காரணத்தினால், கால அளவை நீட்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள சிப்காட் வளாகத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைச் சொல்கின்றார். இரண்டு திட்டங்களின்கீழ் பட்டா கொடுக்கின்றோம். Regular Scheme and Regularisation Scheme. நீங்கள் சொல்வது Regularisation-வரன்முறைப்படுத்துவது. அதற்குப் பெயரே ஒரு முறை வரன்முறைப்படுத்தும் திட்டம். ஒரு முறை என்று சொல்லிவிட்டு, எத்தனை முறை நீட்டிப்பு செய்வீர்கள் என்று நீதிமன்றமே எச்சரித்து சொல்லியிருக்கின்றது. அதை நீங்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், இலக்கையும் மீறி இந்த நான்கு ஆண்டுகளிலே 8 இலட்சத்து 30 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி சரித்திரச் சாதனை படைத்திருக்கின்றார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதை நீங்கள் பொத்தாம்பொதுவாகச் சொல்லக் கூடாது. அதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். நீதிமன்றமே அது ஒரு முறை திட்டம் என்று சொல்லியிருக்கின்றது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தேவைக்கேற்ப நீட்டிப்பு கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், உட்காருங்கள். நீங்கள் நிறைய நேரம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, SC/ST இடைநிலை ஆசிரியர்கள் 669 பேர் பணி அமர்த்தப்படுவதற்கான உத்தரவு வழங்கி, அதற்கு மதுரை உயர் நீதிமன்றக் கிளையிலே தடையாணைப் பெற்றிருக்கின்றார்கள். நம்முடைய அரசு வழக்கறிஞர் அதில் தலையிட்டு தீர்வு கண்டால் அந்த 669 பேருக்கும் பணி உடனடியாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். அதேபோல், இன்றைக்கு இராமநாதபுரம் உள்ளிட்ட தமிழகக் கடலோரப் பகுதிகளில் முறையான அனுமதி பெறாமல் ஏராளமான இறால் பண்ணைகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஈரோடு மாவட்டம் பெருந்துறையில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் உரையை முடியுங்கள். நீங்கள் அதிக நேரத்தை எடுத்துக்கொண்டுவிட்டீர்கள். (குறுக்கீடு) அவை நேரத்தை நீங்கள் அதிகம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள். (குறுக்கீடு)

*பிற்பகல் 2–15*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு 30 இலட்சம் லிட்டர் தண்ணீரை எடுத்து அவர்கள் பயன்படுத்துவதற்கு அனுமதி கொடுத்திருக்கின்றார்கள். ஒரு பக்கம் தமிழகத்திலே நிலத்தடி நீராதாரம் குறைந்து, குடிநீர்ப் பிரச்சினையும் ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், அங்கே ஒரு நாளைக்கு 30 இலட்சம் லிட்டர் தண்ணீரை எடுத்து, வியாபாரத்திற்கு அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

சிதம்பரம் வட்டத்தில் உள்ள சுற்றுலா மையமான கிள்ளை பிச்சாவரத்தையும், வடக்கு பிச்சாவரத்தையும் இணைக்கும் புதிய சாலையும், உப்பனாற்றில் புதிய பாலம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கி திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2015 மார்ச் 30

பாலமான் ஆற்றில் (கான்சாகிப் வாய்க்கால் சிதம்பரம்) கழிவுநீர் கலப்பதைத் தடுக்கவும், சிதம்பரத்தில் சாக்கடை நீர் வடிவதற்கான முறையான வடிகால் வசதியும் ஏற்பாடு செய்து அனைத்துக் கழிவுநீரும் கடலில் கலப்பதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளாற்றின் குறுக்கே தீர்த்தாம்பாளையம், பு. முட்லூர் அருகிலும், கொள்ளிடம் ஆற்றில் கொள்ளிடம்–வல்லம்படுகை அருகிலும் கதவணை கட்டி கடல்நீர் உட்புகாமல் தடுத்திட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் குடமுழுக்கு நடைபெறுவதையொட்டி சிதம்பரம் நகரில் குடிநீர் விநியோகம், சாலைகள் செப்பனிடுவது, சுகாதாரப் பணிகள், கழிவுநீர் வடிகால்கள் அமைப்பது உள்ளிட்ட பணிகளுக்குச் சிறப்பு நிதி ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளை உடனே துவக்கிட வேண்டுமென்றும், அண்ணாமலை நகர் மற்றும் பரங்கிப்பேட்டை பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி செயல்படுத்திட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பது தொடர்பான எல்லா தடைகளும் நீக்கப்பட்டுவிட்டதால் மணிமண்டபம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை உடனடியாகத் துவக்கிட உரிய அரசாணை வெளியிட்டு, பணிகளைத் தொடங்கிட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாலகிருஷ்ணன், உரையாற்றியது போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** எனது கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியதற்குத்தான் பதில் வருகிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



2015 மார்ச் 30]

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கரும்பைப்பற்றிச் சொன்னார்கள். பேசி முடித்த பிறகு பதில் சொல்லலாம் என்றுதான் இருந்தேன். அதற்குள், பின்னால் இருந்த திரு. சிவசங்கர் இதற்குப் பதில் இல்லையென்று பேசினார்கள். நான் தெளிவான பதிலைச் சொல்ல இருக்கின்றேன்.

இன்றையதினம், சர்க்கரையினுடைய விலை உலகளவில் மந்தமான காரணத்தினால், சர்க்கரை ஆலைகள் மிகவும் கஷ்டத்தில் இருக்கின்றன. அதிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உத்தரப் பிரதேச அரசு 7,870 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு பாக்கி வைத்திருக்கிறது. மகாராஷ்டிர அரசு 2,532 கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கின்றது. கர்நாடக அரசு 2,200 ரூபாய்தான் கொடுக்கின்றது, அதற்கு 2,154 கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கின்றார்கள். பீஹார் 581 கோடி ரூபாய், ஹரியானா 516 கோடி ரூபாய். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 522 கோடி ரூபாய்தான்; இந்த ஆண்டு வேண்டுமானால் இருக்கலாமேயொழிய, கடந்த ஆண்டு அளவில் 340 கோடி ரூபாய் மட்டும்தான் இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், நஷ்டம் வருகிறது என்ற காரணத்தினால், தனியார் ஆலைகள், UR என்று சொல்லக்கூடிய பதிவு செய்யாத கரும்புகளைக்கூட அரைக்காமல் இருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக ஆணையிட்டு, கிட்டத்தட்ட 2½ இலட்சம் டன் கரும்பை எடுத்து, நம்முடைய அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே அரைத்து எடுத்து, அதற்குண்டான பணத்தை அரசு வழங்கியிருக்கின்றது. ஆக, மற்ற மாநிலங்களை ஒப்பிடுகின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்கள்தான் விவசாயிகளுக்குப் பாதுகாவலராக இருக்கின்றார்கள். அனைத்தையும் வாங்கிக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய மந்தமான சூழ்நிலையின் காரணமாக இது இருக்கின்றது. இருந்தாலும், நான் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன். நிச்சயமாக வாங்கிக் கொடுப்போம். நான் ஏற்கெனவே, சொன்னதைப்போல, கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், சர்க்கரை 41 ரூபாய்க்கு விற்கின்றபோது, கரும்புக்கான விலை டன்னுக்கு 1,537 ரூபாய். ஆனால், அவர்கள் 2010–2011 ஆட்சியை விட்டுச் செல்கின்றபோது, 150 கோடி ரூபாய் பாக்கி வைத்திருந்தார்கள். அப்போது அவர்கள் அதைப்பற்றிப் பேசவில்லை. இவர்கள் அன்றையதினமே கரும்பினுடைய

விலையைப் பற்றி பேசுகின்றபோதும் சொன்னேன், இப்போதும் சொல்கின்றேன். விவசாயிகளுக்குப் பாதுகாவலராக இருக்கின்ற ஒரே அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மட்டும்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக நாங்கள் சொன்னதிலே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. அதை வாங்கிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கின்றது. தொழிலதிபர்களுக்கு ஆதரவாக என்றைக்குமே இருக்காது. விவசாயிகளுக்கு ஆதரவாக இருக்கும். (குறுக்கீடு) பேசி முடித்த பிறகு சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாலகிருஷ்ணன் பேசியதற்குதான் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** என்றுமே சர்க்கரை ஆலை அதிபர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆதரவாக இல்லை. விவசாயிகளுக்கு மட்டும்தான் ஆதரவாக இருக்கின்ற அரசு என்பதை அழுத்தந்திருத்தமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாலகிருஷ்ணன் பேசியதற்கு, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு பிறகு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பேசி முடிக்கட்டும். வாய்ப்பு இருந்தால் தருகிறேன். (குறுக்கீடுகள்) திரு. ராஜா, நீங்கள் உங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தரவில்லை. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் காலையில் இருந்தே இந்த அவையை நடத்துவதற்கு



ஒத்துழைப்புத் தர மறுக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வேண்டுமென்றே (குறுக்கீடுகள்) செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, வேண்டுமென்றே செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன் பேசியதற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் இப்படிச் செய்தால் எப்படி? (குறுக்கீடுகள்) ஒவ்வொன்றுக்கும் எல்லோரும் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் எழுந்து நின்றால், அடுத்த தடவை நான் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு பாதுகாப்பான அரசு அ.தி.மு.க. அரசு என்று சொன்னார்கள். நான் கேட்கின்றேன். (குறுக்கீடு) **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எதுவும் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எதுவும் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசுவதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கேட்டு வேறு ஏதோ பேசுகிறீர்கள். மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–20

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், கேரளாவைவிட கடந்த வருடம் தேங்காய் உற்பத்தியிலே தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது என்று. (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் சுதந்திரமடைந்து, வறட்சி நிவாரணம் என்று தமிழ்நாட்டில் வேறு எந்த அரசும் கொடுத்தது இல்லை. (குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எத்தனையோ முறை வறட்சி வந்திருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். மேற்கொண்டு அதைப்பற்றிப் பேச

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டாம். (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி பேசியதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். மேற்கொண்டு நீங்கள் அதைப் பேச வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் மாண்புமிகு அமைச்சர் பேசியதைக் காது கொடுத்துக் கேட்டீர்களா? நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா, உங்கள் இடத்துக்குப் போங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. சக்கரபாணி, மாண்புமிகு அமைச்சர் சர்க்கரை ஆலை பற்றிப் பேசும்போது நீங்கள் தேவையில்லாமல் குறுக்கிடுகிறீர்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடு நனைகிறது என்று ஓநாய் வருத்தப்பட்டு அழக்கூடாது. வறட்சி ஏற்பட்டபொழுது அவ்விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவி வழங்கிய ஒரே அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) வேறெந்த மாநிலத்திலாவது வறட்சி நிவாரணம் விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறார்களா? உங்கள் மனசாட்சியைத் தொட்டுப் பார்த்துச் சொல்லுங்கள். உங்களுக்குப் பாராட்ட மனமில்லையென்றால் குறை சொல்லாதீர்கள். இன்றைக்கு நாடு முழுவதும் வறட்சி. இல்லையென்று சொல்லவில்லை. மழையில்லை. அதனால் வறட்சியின் கொடுமை விவசாயிகளைத் தாக்கிவிடக்கூடாது, பாதிக்கக்கூடாது என்பதற்காக, முடிந்த அளவு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நிதி வழங்கியிருக்கிறது. வறட்சி நிவாரணம் வழங்கியிருக்கிறார்கள். இதிலே என்ன குறை சொல்கிறீர்கள்? விவசாயம் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட எல்லா விவசாயிகளுக்கும் மத்திய அரசு அங்கே நிவாரணம் கொடுக்க மறுத்துவிட்டது. மத்திய அரசு வழங்கினால் அதை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அர. சக்கரபாணி, இவ்வாறு குறுக்கிடுவது முறையல்ல.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எத்தனையோ முறை வறட்சி வந்தது. எப்பொழுதாவது விவசாயிகளுக்கு அவர்கள் வறட்சி நிவாரணத் தொகை வழங்கினார்களா? அதுதான் கேள்வி. அப்படி இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால் பேசாமல் அமருங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். இங்கே பாருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை. மாண்புமிகு அமைச்சரிடம் கேட்டதற்கு விளக்கம் சொல்லியாகிவிட்டது. அவரிடம் கேட்டதற்கு பதில் சொல்லியாகிவிட்டது. நீங்கள் தேவையில்லாத பிரச்சினைகளையெல்லாம் எழுப்புகின்றீர்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மோனோ இரயில் திட்டப் பணிகளுக்கு அரசு திட்டக் கோரிக்கை R.F.P. ஒப்பந்தப்புள்ளி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இரண்டு பன்னாட்டு நிறுவனங்கள் திட்டக் கோரிக்கை R.F.P. ஒப்பந்தப்புள்ளியைப் பெற்றுள்ளார்கள். ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள் 20–4–2015. 20–4–2015 வரை ஒப்பந்தப்புள்ளியை அவர்கள் சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் இருக்கிறது. எனவே, ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டவுடன், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசின் சீரிய திட்டமான மோனோ இரயில் திட்டப் பணிகள் மிகச் சிறப்பாக சென்னை மக்களுடைய பயன்பாட்டிற்காக தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எல். சுந்தரம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் ஈரோடு மாவட்டம் பெருந்துறையிலே கோக்க கோலா நிறுவனம் அமைவது பற்றிய சில சந்தேகங்களை இங்கே எழுப்பியுள்ளார்கள். அந்த கோக்க கோலா நிறுவனம் இன்னும் அனுமதி கேட்டு சுற்றுச்சூழல் துறைக்கு விண்ணப்பிக்கவில்லை. மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய வழிகாட்டுதலின்படி செயல்படுகின்ற இந்த அரசு மக்களையும், விவசாயிகளையும் பாதிக்கக்கூடிய எந்தத்

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2015 மார்ச் 30

திட்டங்களையும் என்றைக்கும் நடைமுறைப்படுத்துவதில்லை என்பதற்கு உதாரணமாக கடந்த காலத்திலே மத்திய அரசின் துணையோடு கெயில் நிறுவனம் விவசாய நிலங்களைக் கையகப்படுத்தியபொழுது 'மக்களுக்காகத்தான் திட்டங்களே தவிர, திட்டங்களுக்காக மக்களில்லை' என்று அறிவித்து அந்தத் திட்டத்தையே விவசாயிகளுக்கு ஆதரவாக நிறுத்தி வைத்த முதல்வர் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 2—25*

ஆகவே, அந்த கோக்க கோலா நிறுவனம் அமைகிறபொழுது, விவசாயிகளையோ, மக்களையோ பாதிப்படையச் செய்யக்கூடிய எந்தவிதமான அம்சங்கள் அதில் இருந்தாலும், மாண்புமிகு மக்கள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசுகிறபோது, 'இராமநாதபுரம் மாவட்டத்திலே இறால் பண்ணைகள் ஏராளமாக பதிவு செய்யப்படாமல் இயங்கி வருகின்றன' என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். எந்தத் தகவலைச் சொன்னாலும், சட்டமன்றத்திலே பேசுகிறபோது விவரமாகக் குறிப்பிட வேண்டும் என்பதுதான் நாங்கள் கேட்கின்ற ஒன்று.

இராமநாதபுரம் மாவட்டத்திலே மொத்தம் 77 இறால் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. பதிவு செய்யப்படாத இறால் பண்ணைகள் 40 என்றும் கண்டறியப்பட்டிருக்கின்றன. சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துகிற எந்த இறால் பண்ணையும் இயங்கக்கூடாது என்பது குறித்து Coastal Aquaculture Authority மூலமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்த மாதம் 25 ஆம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, அப்படி சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பாக இருக்கிற இறால் பண்ணைகளெல்லாம் இயங்குவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. விரைவிலே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2015 மார்ச் 30] [திரு. கே.ஏ. ஜெயபால்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசினார்கள். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அந்தப் பிரச்சினை வருவதற்கு முன்னால் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையில் அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள்.

தமிழகத்திலே மழைப் பொழிவு குறைவாக உள்ள மாவட்டங்களில் கோடைக் காலத்தில் ஏற்படவுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தடுக்கும்பொருட்டு, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, அதற்கான உயர் அதிகாரிகளை வைத்து ஆலோசனை செய்து, 10 நாட்களுக்கு முன்னால் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து 95.5 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களுடைய தொகுதியிலும்கூட, சிதம்பரம் நகராட்சியிலே 7.18 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டு, 77 விழுக்காடு பணிகள் தற்பொழுது நிறைவடைந்துள்ளன. இந்த ஆண்டு ஜூன் மாதம் அனைத்துப் பணிகளும் நிறைவுறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியை எதிர்நோக்கி சில மாவட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை, தட்டுப்பாடு ஏற்படுகிற சூழ்நிலை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக சில விளக்கங்களை நான் இந்த அவையிலே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்திற்கு ஆண்டுதோறும் கிடைக்கும் சராசரி மழை அளவு 920.90 மில்லி மீட்டர் ஆகும். 2014 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு 906.09 மில்லி மீட்டர் மழை கிடைக்கப்பெற்றது. இது சாதாரண மழை அளவைவிட 2 சதவீதம் குறைவானதாகும். 2014 ஆம் ஆண்டு தமிழகத்தில் 9 மாவட்டங்களில் சராசரிக்கும் குறைவான மழையும், 18 மாவட்டங்களில் போதுமான மழையும், 5 மாவட்டங்களில் அதிக மழையும் கிடைக்கப்பெற்றது. 2014 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழையில் மாநிலத்திற்குப் போதுமான மைனஸ் 2% மழை கிடைத்தபோதிலும், கீழ்க்கண்ட 8 மாவட்டங்களில் குறைவான மழையே கிடைக்கப்பெற்றுள்ளது: வேலூர் மாவட்டத்தில் சாதாரணமாக மழை அளவு 348.7 மில்லி மீட்டர் பெறப்பட வேண்டும். 183.5 மில்லி மீட்டர் என்ற அளவில் மழை கிடைத்திருக்கிறது. (மைனஸ்47%) திருவண்ணாமலை மாவட்டத்தில் சாதாரணமாக 446.5 மில்லி மீட்டர் மழை அளவு கிடைக்கப்பெற வேண்டும். கிடைக்கப்பெற்ற மழை அளவு 248.8 மில்லி மீட்டர். (மைனஸ்44%) அரியலூர் மாவட்டத்தில் சாதாரணமாக 545.5 மில்லி மீட்டர் மழை அளவு கிடைக்கப்பெற வேண்டும். கிடைக்கப்பெற்ற மழை அளவு 360.9 மில்லி மீட்டர். (மைனஸ்34%) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சாதாரணமாக 391.5 மில்லி மீட்டர் மழை அளவு கிடைக்கப்பெற வேண்டும். கிடைக்கப்பெற்ற மழை அளவு 249.1 மில்லி மீட்டர். (மைனஸ்34%)

பிற்பகல் 2–30

காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு சாதாரணமாக 641.8 மில்லி மீட்டர் மழை அளவு கிடைக்கப்பெற வேண்டும். கிடைக்கப்பெற்ற மழை அளவு 438.2 மில்லி மீட்டர். (மைனஸ்32%) விருதுநகர் மாவட்டத்திற்கு 419 மில்லி மீட்டர் அளவு மழை கிடைக்கப்பெற வேண்டும். ஆனால் கிடைத்தது 308.1 மில்லி மீட்டர். (மைனஸ்26%) மதுரை மாவட்டத்திற்கு 419.1 மில்லி மீட்டர் மழை கிடைக்கப்பெற வேண்டும். ஆனால் கிடைத்தது 323.4 மில்லி மீட்டர்.



(மைனஸ்23%) பெரம்பலூர் மாவட்டத்திற்கு 440.9 மில்லி மீட்டர் மழை கிடைக்கப்பெற வேண்டும். ஆனால் 346 மில்லி மீட்டர் மழைதான் கிடைத்தது (மைனஸ்22%).

எதிர்வரும் கோடைக்காலத்தில் எதிர்பார்க்கப்படும் குடிதண்ணீர் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக, அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர்த் தேவையின் நிலையை ஆய்வு செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசால் அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தத்தம் மாவட்டங்களில் குடிநீர்த் தேவையினை ஆய்வு செய்து, குடிநீர்ப் பற்றாக்குறையினை எதிர்கொள்ள துறை ரீதியான நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

11–3–2015 அன்று குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்ய, தலைமைச் செயலாளர் அவர்களால் கூட்டப்பட்ட கூட்டத்தின்போது, கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சம்பந்தப்பட்ட துறைகளின் செயலாளர்களும் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக வேலூர் மாநகரம், திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் சென்னை மாநகரில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது எனக் கண்டறியப்பட்டது. அவ்வாறே சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம், நகராட்சி நிருவாகத் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பேரூராட்சி நிருவாகத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை போன்ற துறைகளின் தலைவர்களும் குடிநீர்ப் பற்றாக்குறையினைச் சமாளிப்பதற்காகவும், வறட்சியைச் சமாளிப்பதற்காகவும் நிதியொதுக்கீடு செய்யுமாறு கோரினர். அவ்வாறே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மக்களுக்குத் தடையின்றி குடிநீர் வழங்க உரிய நிதியொதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளனர்.

குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக துறை ரீதியான திட்ட ஒதுக்கீடு மற்றும் அவசரகால நிதியினைத் தவிர்த்து கூடுதலாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாக துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரம்:—

ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், குடிநீர் ஆதாரங்கள் மேம்படுத்துதல், புனரமைப்புப் பணிகள், லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல், சின்டெக்ஸ் டாங்குகள் அமைத்தல், குடிநீர்க் குழாய்களை மாற்றி அமைத்தல், சிறு மின்விசை பம்புகள் அமைத்தல், கைப்பம்புகள் அமைத்தல்.

16–3–2015 அன்று குடிநீர் வழங்குதல் நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டு, துறைத் தலைவர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உரிய நிதியொதுக்கீடு வழங்க அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி அரசாணை எண் 139 வருவாய்த் துறை நாள் 21–3–2015 வாயிலாக அரசு கீழ்க்கண்டவாறு துறைத் தலைவர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நிதியொதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கல் பணிகளுக்கென மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை விவரம்:—

வேலூர் மாவட்டத்திற்கு 20 கோடி ரூபாய். இதில் 5 கோடி ரூபாய் வேலூர் மாநகராட்சிக்கு மட்டும். திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 10 கோடி ரூபாய். காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 5 கோடி ரூபாய். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு 5 கோடி ரூபாய். விருதுநகர் மாவட்டத்திற்கு 5 கோடி ரூபாய். மதுரை மாவட்டத்திற்கு 5 கோடி ரூபாய். பெரம்பலூர் மாவட்டத்திற்கு 3 கோடி ரூபாய், அரியலூர் மாவட்டத்திற்கு 2 கோடி ரூபாய் மற்றும் மீதமுள்ள 23 மாவட்டங்களுக்கு மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 50 இலட்சம் வீதம் 66.50 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கப்பட்டது.

இதுபோல, குடிநீர் வழங்கல் பணிகளுக்கென துறைத் தலைமை அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை விவரம்:—

சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு 10 கோடி ரூபாய், நகராட்சி நிருவாகத் துறைக்கு 10 கோடி ரூபாய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 5 கோடி ரூபாய், பேரூராட்சிகள் நிருவாகத் துறைக்கு 3 கோடி ரூபாய், கால்நடை பராமரிப்புத் துறைக்கு 1 கோடி ரூபாய் ஆகமொத்தம் 29 கோடி ரூபாய்.



மாநில அரசின் இந்த நடவடிக்கையானது எதிர்வரும் கோடைக்காலத்தில் பொதுமக்களுக்குத் தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக அமையும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

***திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப ஆண்டுகளில் தேசிய, சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி, இரண்டு ஆண்டுகளாக எதிர்பார்த்த அளவிற்கு உயராத வரி வருவாய், மாநில அரசுக்கு மானியங்களாலும், நலத் திட்டங்களாலும் உயர்ந்துவரும் நிதிச் சுமை ஆகியன கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை சரியாகவே சொல்லியிருக்கிறது.

அதேசமயம் இந்த நெருக்கடியிலிருந்து மீள, மத்திய அரசிடமிருந்து அதிகளவு நிதியைப் பெறமுடியும் என இந்த அரசு வைத்திருந்த நம்பிக்கை தவறானது என்பதையும் இந்த அறிக்கை ஒத்துக்கொண்டுள்ளது என்றே கருதுகிறேன். மத்திய நிதிப் பங்கீட்டின் சதவிகிதம் உயர்ந்தாலும், கிடைக்கும் நிதியின் அளவு உயரவில்லை. மாநில அரசுகளின் மூலம் நிறைவேற்றப்படும் மத்திய அரசின் திட்டங்களுக்கான நிதியை மத்திய அரசு குறைத்துள்ளது. எட்டு மத்திய அரசின் திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன. வழக்கமான மத்திய அரசின் நிதியுதவி, மாநிலத் திட்டங்களுக்கான சிறப்பு மத்திய உதவி ஆகியவை எதிர்காலத்தில் இல்லாததால் தமிழகத்திற்கு ஆண்டு வருவாய் வருடத்திற்கு 1,137 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்படும்.

பிற்பகல் 2–35

மாநில அரசுகளுக்கு இதுவரை கிடைத்து வந்த மானியங்களில், குறிப்பிட்ட தேவைகளுக்கான மானியங்களும், சாலைப் பராமரிப்பிற்கான மானியங்களும் இனிமேல் கிடைக்காது. மத்திய அரசால் செயல்படுத்தப்படும் 24 திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த நிதியாண்டில் 21,116 கோடி ரூபாய் அளவுக்கு குறையும். சேவை வரி தொகுப்பிலிருந்து தமிழகத்திற்குக் கிடைத்து வந்த பங்கு குறைக்கப்படுகிறது; மத்திய அரசால் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது என்பதை இந்த நிதிநிலை

அறிக்கை சுட்டிக்காட்டுவதாகவே கருதுகிறேன். மத்திய அரசின் நிதிப் பங்கீட்டு முறை, ஒவ்வொரு மாநில அரசும் தங்களின் அன்றாட நிருவாகத் தேவைகளுக்குக்கூட மத்திய அரசினையே சார்ந்து இருக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துகிறது. இது, மத்திய ஆட்சியாளர்கள் கூட்டாட்சி முறையிலே நம்பிக்கை கொண்டவர்கள் அல்ல என்பதைக் காட்டுகிறது. இனி, மாநில அரசுகள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள, மத்திய அரசு நேரடி வருவாயைத் தவிர பிற வருவாய் அனைத்தையும் மாநிலங்களுக்கே வழங்க வேண்டிய காலம் கனிந்துவிட்டது என்று இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக, மாநிலங்கள் உரிமைக் குரல் எழுப்பக் காலம் கனிந்துவிட்டது என்று குறிப்பிட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் மக்கள் நலத் திட்டங்களிலேயே முக்கியமானது முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமாகும். ஆனால், தகுதியற்ற ஓய்வூதியப் பயனாளிகளை நீக்குகிறோம் என்கிற பெயரில், 10, 15 ஆண்டுகளுக்கு மேலாக ஓய்வூதியம் பெற்றவர்கள் பயனாளிகள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். ஓய்வூதியம் பெற்று வந்த முதியோர்கள் எல்லாம் கண்ணீர் வடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பட்டியலை மறுபரிசீலனை செய்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணீர் வடிக்கின்ற நிலைமையில் பொதுமக்கள் யாரும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைச் சொல்கிறார்கள். இந்த அவையில் நான் மிகத் தெளிவாக இதுகுறித்து சொல்லியிருக்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சியில் 21 இலட்சம் பேருக்குதான் ஓய்வூதியம் கொடுக்கப்பட்டது. தற்போது அதைக் காட்டிலும் எண்ணிக்கை 65 சதவிகிதத்திற்கு மேல், அதாவது 37 இலட்சம் பேருக்கு ஓய்வூதியம் கொடுக்கப்பட்டு வருகிறது. இறந்தவர்கள், இரட்டைப் பதிவிலே இருக்கின்றவர்கள், விதிமுறைகளை மீறி யாரேனும் பெற்று வருகிறார்களா என்பதையெல்லாம் ஆய்வு செய்து, தகுதியுடைய அனைவருக்கும் ஓய்வூதியம் கொடுக்கின்ற



காரணத்தால்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதல்களோடு நடைபெறுகின்ற அரசால் 37 இலட்சம் பேர்கள் தற்போது ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான நிதி ஒதுக்கீடு 4,200 கோடி ரூபாய் ஆகும்.

முதியோர் ஓய்வூதியம், கடந்த ஆட்சியில் 500 ரூபாய் கொடுக்கப்பட்டது. தற்போது 1,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மையான நிலவரம். எனவே, தகுதியுள்ளவர்கள் யாரேனும் விட்டுப்போயிருப்பார்களேயானால், அதுகுறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால், அவர்களுக்கும் வழங்குவதற்கு தாயுள்ளம் கொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் இந்த அவையில் பலமுறை சொல்லியிருக்கின்றேன். ஆகவே, யாரும் கண்ணீர் வடிக்கிற நிலையில் இல்லை.

ஆதரவற்றோர்கள், விதவைகள் போன்றவர்களை, இந்த உலகத்திலே உற்றார், உறவினர், சுற்றத்தார் என அனைவரும் கைவிட்டாலும், உங்களை ஆயுள் முழுவதும் காப்பாற்றுவதற்கு நான் இருக்கிறேன் என்ற உத்தரவாதத்தை இந்தியத் திருநாட்டிலே வழங்கியிருக்கிற ஒரே மக்கள் தலைவியாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, மத்திய அரசு 200 ரூபாய் கொடுக்கிறது, 300 ரூபாய் கொடுக்கிறது, 500 ரூபாய் கொடுக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், இந்தியத் திருநாட்டிலேயே, 3 திட்டங்களுக்குப் பதிலாக 8 திட்டங்கள் வாயிலாக அனைவருக்கும் 1,000 ரூபாய் வழங்கும் ஒரே மாநிலமாக அன்னைத் தமிழகம் விளங்குகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், நேரமாகிவிட்டது. இந்த அவையில் முதியோர் ஓய்வூதியம் குறித்து நிறைய விவாதித்திருக்கிறோம். எனவே, நீங்கள் வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் இந்த அரசைத் தவறாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** 500 ரூபாயிலிருந்து ஓய்வூதியத் தொகையை 1,000/– ரூபாயாக உயர்த்திக் கொடுத்த ஒரே அரசு இந்த அரசுதான். சந்தேகம் இல்லை. ஆனால், தற்போது பயனாளிகள் நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். எனவே, மறுபரிசீலனை செய்து, அவர்களைப் புதிய பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயனாளிகள் நீக்கப்பட்டது உண்மைதான் என்று சொல்கின்றார்கள். இறந்தவர்கள், பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு இடங்களில் ஓய்வூதியம் பெற்றவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோன்று, விதிமுறைகளை மீறி பெற்று வருபவர்கள் குறித்து ஆய்வு செய்து, அவர்களை நீக்குவதற்கு, அதுவும் உரிய அதிகாரிகளாக, தாசில்தார் அவர்கள் sanctioning authority–யாக இருக்கிறார்கள் என்றால், கோட்டாட்சியர் அவர்களை வைத்து நீக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகுதியற்றவர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்குப் பரிந்துரை செய்கிறார்களா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்காக 662 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 2½ ஏக்கர், 5 ஏக்கர் நிலம் வைத்துள்ள சிறு, குறு உழவர்களும் உறுப்பினர் ஆகலாம்.



இத்திட்டம் தரும் அனைத்துப் பலன்களையும் பெறலாம். ஆனால், ஓய்வூதியம் மட்டும் பெற முடியாத இத்திட்டத்தை உழவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் வகையில் திருத்தம் செய்து, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் பயனை பெறச் செய்ய வேண்டும். அணைகளைச் சீர்படுத்துவதற்காக நிதிநிலை அறிக்கையில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 2–40*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான கருத்தைச் சொல்கிறார். உழவர் பாதுகாப்புத் திட்டத்திலே ஓய்வூதியம் பெறுகிற தகுதி அதிலே இருக்கிறது. உறுப்பினர் கூறிய சிறு, குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அமைந்ததற்குப் பின்னால்தான், ஒரு கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சம் விவசாய உறுப்பினர்களும், அவர்களைச் சார்ந்த 63 இலட்சம் உறுப்பினர்களும், ஆக மொத்தம் 2 கோடி 63 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் பயன்பெறுகிற ஒரு திட்டமாக, இந்தியாவிலே வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். நிருவாகக் காரணம் கருதி, இந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக முதியோர் உதவித் தொகை பெறுபவர்களை இங்கே இருக்கக்கூடிய CRA (Commissioner of Revenue Administration) அவர்களுடைய கண்காணிப்பிலேதான் அது வந்திருக்கிறது. உழவர் பாதுகாப்புத் திட்டத்திலே இருப்பவர்களில் அந்த விதிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கும், ரூ.1,000/– முதியோர் உதவித் தொகையினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடக்கின்ற இந்த அரசு வழங்கிக்கொண்டிருக்கிறதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைகளைச் சீர்படுத்துவதற்காக நிதிநிலை அறிக்கையில் 450 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே மிகப் பெரிய மண் அணையான பவானிசாகர் அணையையும் இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும். பவானிசாகர் அணையிலிருந்து பவானி ஆறு காவேரியோடு சேரும் கூடுதுறை வரையில் சுமார் 5 இடங்களில் தடுப்பணை அல்லது கட்டளைக் கதவணை அமைக்க முன்வரவேண்டுமென வலியுறுத்த விரும்புகிறேன்.

மத்தியில் அமைந்துள்ள புதிய அரசிடம் பல்வேறு தமிழக நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு தமிழக அரசு நிதி கோரியுள்ளது. மைய அரசின் உதவியை எதிர்பாராமல் அவினாசி அத்திக்கடவு திட்டத்தினை தமிழக அரசே முன்வந்து நிறைவேற்றி கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களைப் பாலைவனம் ஆகாமல் தடுத்திட வேண்டும்.

மனித வனவிலங்கு மோதலைக் குறைப்பதற்காகப் பல்வேறு திட்டங்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதத்தில் ஒரு ஆட்கொல்லிப் புலி, நீலகிரி மாவட்டத்தில் வனத் துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு கரடி காவல் துறையால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளது. அரிய விலங்கான புலியைக் கூட அரசே சுட்டுக்கொல்கிறது; ஆனால் தன்னுடைய வேளாண் பயிர்களைப் பாதுகாப்பதற்காக விவசாயி தன்னுடைய நிலத்தில் அமைத்துள்ள வேலியில் ஒரு குருவி சிக்கிவிட்டால்கூட அந்த விவசாயி கடுமையாக தண்டிக்கப்படுவது, நியாயமாகப்படவில்லை. இந்தச் சட்டங்களில் மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 நாள் வேலைத் திட்டத்தில், அதிக வேலை நாட்களை நாட்டிலேயே தமிழகம்தான் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பது பாராட்டுதற்குரியது. இத்திட்டத்திற்காக 5,248 கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கை ஒதுக்கியுள்ளது. அதிக வேலை நாட்களை உருவாக்கிக் கொடுக்கும் அதே வேளையில் நிர்ணயிக்கப்பட்ட முழுமையான கூலி அளவை தொழிலாளர்கள் பெற முடியவில்லையே என்பதனையும் இப்பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தொழிலாளர்களுக்கு வேலை அளவிற்குப் பதிலாக நேர அளவின்படி கூலி வழங்க முன்வர வேண்டுமெனக்



கேட்டுக்கொள்கின்றேன். மத்திய அரசு வறிய மக்களுக்கு உதவ முற்படும் இத்திட்டத்தைச் சுருக்க முற்பட்டு வருகிறது. இதன்படி தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில வட்டாரங்களில் மட்டும்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று தெரிகிறது. இவ்விஷயத்தில் தமிழக அரசு தனது நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் 'தூய்மை இந்தியா' இயக்கத்தைப் பற்றி, இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மறைந்த முன்னாள் முதல்வர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள், "தெருத்தெருவாய்க் கூட்டுவது பொது நலத் தொண்டு; ஊரார் தெரிந்துகொள்ளப் படம் பிடித்தால் சுய நலமுண்டு" என்று நீண்ட நாட்களுக்கு முன்பே சொல்லி வைத்துள்ளார். பக்கம் பக்கமாகப் பத்திரிகைகளில் துடைப்பத்தோடு படங்களைப் பார்த்தோமானால் பயனில்லை. 15 இலட்சம் வீட்டு கழிப்பறைகளைக் கிராமப்புறங்களில் அமைக்கத் திட்டமிட்டிருப்பது வரவேற்புக்குரியது. பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளிலும் தனிநபர் இல்லக் கழிப்பறைகளைக் கட்ட வேண்டிய அவசியம் உள்ளது. கழிப்பிடங்களைக் கட்ட இடமுள்ள வீடுகளில் கழிப்பிடம் கட்ட வேண்டியதைக் கட்டாயமாக்க வேண்டும். தற்போது கொடுக்கப்படும் 12,000 ரூபாயில் கழிப்பிடம் கட்டலாம்; ஆனால் கதவுகள் போடுவது சிரமம். இந்த நிதியை அதிகப்படுத்த வேண்டும். ஏற்கெனவே நகராட்சி பேரூராட்சிகளில் தூய்மைப் பணிகளில் ஈடுபட்டுள்ளோர்களை சுய உதவிக் குழு என்ற பெயரில் ஒப்பந்தப் பணிக்கு மாற்றக் கூடாது. கிராம ஊராட்சிகளிலுள்ள தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். யாரும் செய்யக் கூசுகின்ற பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ள கிராம தூய்மைப் பணியாளர்களுக்குக் கௌரவமான வாழ்க்கைக்கான ஊதியத்தை வழங்க வேண்டும்.

மிகுந்த பயனுள்ள முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்திற்கு 781 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் எலும்பு முறிவிற்கான சிகிச்சைகளைப் பெற அரசு மருத்துவமனைகளில் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. எலும்பு முறிவிற்கான சிகிச்சைகளை தனியார் மருத்துவமனைகளிலும் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவிடும் வகையில், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்திற்கு

668 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தவணை நிதி உதவி பெற்ற பயனாளிகளில், 36 சதவிகிதம் பேர் தனியார் மருத்துவமனைகளில் குழந்தைகளைப் பெற்றெடுத்த காரணத்தினால், அடுத்த தவணைத் தொகையினைப் பெற இயலாமல் உள்ளார்கள் எனவும், பண உதவி பெறுவதில் ஒரு மாதம் முதல் 26 மாதம் வரை தாமதம் ஏற்படுகிறது எனவும், 2013 ஆம் ஆண்டுக்கான தணிக்கைத் துறை அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. அதைப் போக்க அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிரசவ காலங்களில் அவசர மருத்துவத் தேவையின்பொருட்டு அருகிலுள்ள தனியார் மருத்துவமனைகளில் வேறு வழியின்றி பிரசவத்திற்காக சேரும் தாய்மார்களுக்கும் இவ்வுதவித் தொகை கிடைக்கச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 2–45

கடந்த 3 ஆண்டுகளில் ஏராளமான மருத்துவர்களும், துணை மருத்துவப் பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், மலைப் பகுதிகளில் உள்ள துணை சுகாதார நிலையங்கள், கிராம செவிலியர்கள் இல்லாத காரணத்தினால் பூட்டப்பட்டு கிடக்கின்றன. மலைப் பகுதிகளிலே வாழும் படித்தப் பெண்களுக்குப் பயிற்சியளித்து இங்கு பணியமர்த்த அரசு முன்வர வேண்டும்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை மத்திய அரசு கைவிட்டு விட்டதாக இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ஈடுசெய்யும் வகையில், இடதுசாரி அதிதீவிரவாதம் பரவ வாய்ப்புள்ள பகுதிகளில் 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சிறப்புத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்ற உள்ளதை வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தின்கீழ், எனது தொகுதியில் உள்ள மலைப் பகுதி மக்களை மனநிறைவு கொள்ளச் செய்யும்வகையில், சத்தியமங்கலம் வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரித்து தாளவாடி மலை வட்டத்தைப் புதிதாக அமைக்கவும், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கடம்பூர் மலை வட்டாரத்தைப் புதிதாக அமைக்கவும், மலைவாழ் மக்களுக்கு ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை எனது தொகுதியில் துவக்கிட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன்.



தாழ்த்தப்பட்டவர்களுக்கான துணைத் திட்ட நிதியில் கடந்த ஆண்டைக் காட்டிலும் 12,350 கோடி ரூபாயை மத்திய அரசு இந்த ஆண்டு குறைத்திருக்கிறது. அதேபோல் பழங்குடியினர் துணைத் திட்ட நிதியில் 6,737 கோடி ரூபாயை மத்திய அரசு இந்த ஆண்டும் குறைத்திருக்கிறது. அதேசமயம் பெரும் முதலாளிகளுக்கு ஏராளமான சலுகைகளை அளித்து, தான் யார் பக்கம் என்பதைக் காட்டியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** ஆனால், தமிழக அரசு தாழ்த்தப்பட்டோர் துணைத் திட்டத்திற்கு கடந்த ஆண்டு ரூ.7,603 கோடியும், இந்த ஆண்டு ரூ.11,274 கோடியும் ஒதுக்கியுள்ளது. பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு கடந்த ஆண்டு ரூ.435 கோடியும், இந்த ஆண்டு ரூ.657 கோடியும் ஒதுக்கியுள்ளதை வரவேற்கிறேன். இத்துணைத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் சுமார் 15–க்கும் மேற்பட்ட பல்வேறு துறைகள்மூலம் பிரித்தளிக்கப்பட்டு செயலாக்கப்பட்டு வருகின்றன. பல சமயங்களில் துணைத் திட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. இந்நிதி வேறு நோக்கங்களுக்குச் செலவிடப்படுகிறது. பல சமயங்களில் இந்நிதி எல்லோருக்காகவும் அறிவிக்கப்படும் திட்டங்களுக்குச் செலவிடப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான தனி சிறப்புத் திட்டங்களை உருவாக்கி அவற்றை நிறைவேற்ற இந்த நிதியைப் பயன்படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இன்னும் 3 பேர் பேச வேண்டியுள்ளது உரையை முடியுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** உயர் கல்வி பயிலும் SC/ST மாணவர்களுக்கான உதவித் திட்டத்திற்கு 675 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இடையில் மத்திய அரசின் உதவி தடைப்பட்டதால், 2013 ஆம் ஆண்டு படித்த பழங்குடி மாணவர்கள்கூட இன்னும் கல்வி உதவித் தொகையினைப் பெற இயலாமல் உள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில்தான் 2012–2013 மற்றும் 2013–2014–ல் இதுவரையிலும் இல்லாத அளவிற்கு கல்வி உதவித் தொகைகள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அரசாணை எண் 6 மற்றும் 92–ன்படி வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன. 2014–2015 ஆம் ஆண்டுக்கு மட்டும்தான் இனி உதவித் தொகைகள் வழங்க வேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஊராட்சிகளில் துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகு, 2013 ஆம் ஆண்டில் 16,500 துப்புரவுப் பணியாளர்களை ஊராட்சிகளுக்குப் பணி நியமனம் செய்தார்கள். அதற்குமுன் 10,000 துப்புரவுப் பணியாளர்கள்தான் இருந்தார்கள். கிட்டத்தட்ட 26,500 பணியாளர்கள் இப்பொழுது சிறப்பான முறையிலே பணியாற்றி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அதிலே குழு அளவு என்ற ஓர் அளவை நிர்ணயம் செய்து கூடுதலாக ஊதியம் வழங்கும் சிறப்பான திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதுமட்டுமில்லாமல், மத்தியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின்



காரணமாக ஊதியம் நிலுவையில் இருந்தபோது, 230 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி ஊதியத்தை நிலுவையில்லாமல் வழங்கினார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம், உரையை முடியுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் முதல்வர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டத்திலே உதவித் தொகை தாமதமாகக் கிடைக்கின்றது என்ற ஒரு தவறான தகவலை இந்த அவைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அளித்தார்கள். மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், குறிப்பாக கர்ப்பிணி தாய்மார்களுக்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 12,000/– ரூபாயை வழங்குகின்றார்கள். அந்த 12,000/– ரூபாயும் பதிவு செய்த 7 மாதத்திற்குப் பிறகு 4,000/– ரூபாய், குழந்தை பிறந்ததற்குப் பிறகு 4,000/– ரூபாய், முத்தடுப்பு ஊசிகளை முறையாகப் போட்டதற்குப் பிறகு 4,000/– என இந்தியாவிலேயே ECS-மின்னணு தீர்வு சேவை மூலமாக அவர்களுடைய வங்கிக் கணக்கிலேயே செலுத்துகின்ற அற்புதமான திட்டத்தை இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் செயல்படுத்தினார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–50

அதுமட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கு செவிலியர்களுடைய சேவை தேவை என்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இதுவரை

385 ஒன்றியங்களில் 416 நடமாடும் மருத்துவக் குழுக்களை அமைத்து, நேரடியாக, எளிதில் செல்ல முடியாத பகுதிகளுக்கு, மலைவாழ் மக்களுக்குப் பிரத்யேகமாக நடமாடும் மருத்துவக் குழுக்கள்மூலம் சேவை அளிக்கப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் முதல்வர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களைக் கடவுளாக நெஞ்சில் வைத்து வணங்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மக்கள் அதிகம் வாழும் பகுதி தமிழ்நாடு. இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களின் உடலில் உயிர் ஒட்டியிருப்பதற்கான பிரதான காரணம், அவர்கள் உணவாக உட்கொள்ளும் மாட்டு இறைச்சி ஆகும். கடந்த சில தினங்களாக சில மாநிலங்களில் மாட்டு இறைச்சி உண்ணத் தடையும், தண்டனையும் விதிக்கப்பட்டு வருவதும், தமிழகத்திலே மாட்டு இறைச்சியைத் தடை செய்ய வேண்டுமென்று சிலர் குரல் எழுப்புவதும் இந்த மக்களிடையே ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் தமிழகத்தில் மாட்டு இறைச்சியைத் தடை செய்ய வாய்ப்பில்லை என்கின்ற உத்தரவாதத்தை இந்த அரசு வழங்க வேண்டுமெனக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதி திராவிட மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக பல்வேறு கல்வி உதவித் தொகை திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு எவ்வாறெல்லாம் செவ்வனே செயல்படுத்தி வருகிறது என்பதைப் பற்றி சில விளக்கங்களை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவற்றில் முதன்மையானது, Post Matric கல்வி உதவித் தொகை திட்டமாகும்.



2010–2011 ஆம் ஆண்டு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்குப் பராமரிப்புப் படி மற்றும் கல்விக் கட்டணங்கள் அரசால் வழங்கப்பட்டு வந்தன. சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் தகுதியுள்ள மாணாக்கர்களுக்கு அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் வழங்கப்படும் கல்விக் கட்டண அளவிலே மட்டும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவ ஆதி திராவிட மாணவ, மாணவிகளின் உயர் கல்வி விகிதத்தினை உயர்த்தும் உன்னத நோக்கோடு அரசாணை நிலை எண் 6, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 6–1–2012–ல் வெளியிடப்பட்டது. அவ்வரசாணையின்படி, சுய நிதி கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் உட்பட) அனைத்து விதமான படிப்புகளுக்கும் இலவசக் கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதி திராவிட, பழங்குடியின மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நியமித்த சுய நிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு நிர்ணயித்த, திருப்பிச் செலுத்தப்படாத கட்டாயக் கல்விக் கட்டணங்கள் அனைத்தையும் Post Matric கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் கல்வி ஆண்டிலிருந்து வழங்க அரசாணையிட்டது.

Post Matric கல்வி உதவித் தொகை திட்டத்தினை சுய நிதிக் கல்லூரிகளுக்கும் நீட்டித்து ஆணையிடப்பட்ட பின்பு, இத்திட்டத்திற்கு பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

2012–2013 ஆம் ஆண்டு 6,72,257 பயனாளிகளுக்கு 374.83 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2013–2014 ஆம் ஆண்டு 6,82,014 பயனாளிகளுக்கு 882.68 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2014–2015 ஆம் ஆண்டில் நாளது தேதி வரை 5,73,523 பயனாளிகளுக்கு 534.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2014–2015 ஆம் கல்வியாண்டிற்கு 676 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் 2013–2014 ஆம் கல்வியாண்டிற்கு வழங்கப்பட வேண்டிய பராமரிப்புப் படி மற்றும் கல்விக் கட்டணங்கள் நிலுவைத் தொகை மற்றும் 2014–2015 ஆம் கல்வியாண்டிற்கு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மற்றும்

கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பராமரிப்புப் படி மற்றும் கல்விக் கட்டணம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, சுய நிதி கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் பராமரிப்புப் படி மற்றும் கல்விக் கட்டணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 2–55

இத்திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:

அரசாணை நிலை எண் 92, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 11–9–2012–ன்படி திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்தத் தேவையான விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாணை நிலை எண் 28, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 29–4–2013–ன்படி 2013–2014 ஆம் கல்வியாண்டு முதல் Post Matric கல்வி உதவித் தொகை திட்டப் பயனை மாணாக்கர்கள் கல்வி நிலையங்களில் சேமிப்புக் கணக்குமூலம் பட்டுவாடா செய்யும்பொருட்டு, சேமிப்புக் கணக்கு துவக்குவது கட்டாயமாக்கி ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைக் கண்காணிக்க இரண்டாம் நிலை அலுவலர்கள் அடங்கிய கண்காணிப்புக் குழுவினை நியமித்து, தொடர்ச்சியான கண்காணிப்பில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த இணை இயக்குநர் தலைமையில் மாநில அளவிலான கண்காணிப்புக் குழு அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண் 44, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 15–7–2014–ன்படி இத்திட்டத்தினைக் கண்காணிக்க மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைத்து அதன் பணிகளை நிர்ணயம் செய்து, ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 2013-2014 ஆம் கல்வியாண்டு முதல் பொறியியல், மருத்துவம் படிப்பிற்கான கலந்தாய்வின்போது (counselling) இத்திட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வை மாணாக்கர்களிடம் ஏற்படுத்தும்வண்ணம், கலந்தாய்வு நடைபெறும் இடங்களில் இத்துறையின் சார்பாக இரண்டு சிறப்பு தாசில்தார்கள் அடங்கிய அலகு அமைக்கப்பட்டு,



துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. மேலும், கலந்தாய்வில் கலந்துகொண்டு கல்லூரிகளில் ஒதுக்கீட்டாணை பெறும் தகுதியுள்ள மாணாக்கர்களிடம் கல்விக் கட்டணங்கள் வசூலிக்கக்கூடாது என்றும், அத்தொகையினை இத்துறை செலுத்தும் என்றும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து கல்வித் துறை இயக்ககத் தலைவர்களுக்கும் இத்திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்வியாண்டும் இத்திட்டத்திற்கான நிதியொதுக்கீடு செய்யும்போது அதனைப் பற்றிய விவரங்களையும் மாணாக்கர்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் முன்னணி செய்தித் தாள்களில் இத்துறைமூலம் விளம்பரம் செய்யப்படுகிறது. 2013–2014 ஆம் கல்வியாண்டில் நிலுவைத் தொகை ரூ.320 கோடியினை வழங்கும்போது அனைத்து கல்லூரி நிருவாகங்களையும் நேரடியாக இயக்குநர், ஆதி திராவிடர் நல அலுவலகத்திற்கு வரவழைத்து, இணைய தளத்தில் கல்லூரிகளில் விண்ணப்பித்த மாணாக்கர்களின் விவரம், அசல் சாதிச் சான்று, வருமானச் சான்று, கல்லூரி அரசிடம் பெற்ற அங்கீகார விவரம் போன்றவற்றை நேரடியாக சரிபார்த்தப் பிறகு, மாணாக்கர்கள் மற்றும் கல்லூரி நிருவாகங்களுக்குக் கல்வித் தொகையை மின்னணு தீர்வு ECS முறையில் வழங்கப்பட்டது. Post Matric கல்வித் தொகை திட்டத்தின்கீழ் பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட தொழில்நுட்ப படிப்புப் பிரிவுகளில் மாணவர்கள் சேர்க்கை வருடந்தோறும் அதிகரித்துள்ளது. மாதிரிக்கு பொறியியல் படிப்பு பிரிவில் வருட வாரியான சேர்க்கை விவரம் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளது:

| ஆண்டு | துறை | பயனாளிகள் | |
|---|---|---|---|
| 2012–2013 | ஆதி திராவிடர் | 22,264 | |
| | பழங்குடியினர் | 468 | |
| | | மொத்தம் | 22,732 |
| 2013–2014 | ஆதி திராவிடர் | 27,417 | |
| | பழங்குடியினர் | 718 | |
| | | மொத்தம் | 28,135 |
| 2014–2015 | ஆதி திராவிடர் | 29,740 | |
| | பழங்குடியினர் | 863 | |
| | | மொத்தம் | 30,603 |

இதிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்கள் அதிகளவில் பயன்பெற்றுள்ளனர் என்பதுதான் உண்மையான நிலை என்பதை நான் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளதை மேற்காணும் அட்டவணையில் நாம் தெளிவாகக் காணலாம். மேலும், மேற்காணும் திட்டத்தின் பலனாக, கலை, அறிவியல் படிப்புப் பிரிவுகளை விடுத்து பொறியியல், மருத்துவம், மருத்துவம்சார் படிப்புகள், பல்தொழில்நுட்ப படிப்புகள் உள்ளிட்ட வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ள தொழில்நுட்ப பாடப் பிரிவுகளை ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவர் இனத்திற்கு மாறிய ஆதி திராவிடர் மாணாக்கர்கள் நாடுவதும் அதிகரித்துள்ளது அட்டவணையிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப பாடப் பிரிவுகளை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் நாடுவதே இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதற்குச் சான்றாகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.*

***திரு. எம். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர், கழகத்தினுடைய காவல் தெய்வம், உலகத் தமிழர்களின் ஒரே பாதுகாவலர், தமிழக மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன், *(மேசையைத் தட்டும் ஒலி) 2015–2016* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய பெண் குலத்து பொன் விளக்கு! மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, எனது விவாதத்தினைத் தொடங்குகின்றேன். இருண்ட தமிழகத்தை ஒளிமிகுந்த தமிழகமாக, தலை நிமிர வைத்த தன்னிகரில்லாத தலைவி எங்கள் அம்மா! செயல்முறைகளைக் கொண்டு தலைமுறைகளை வாழ வைக்க, வழி செய்த வரலாறு எங்கள் அம்மா! *(மேசையைத் தட்டும் ஒலி)* நாங்கள் வாழும் ஒவ்வொரு நொடியிலும் நாளும் திட்டங்கள் தரும் நல்ல அரசே எங்கள் அம்மா! வாழும் ஒவ்வொரு நொடியிலும் நாங்கள் வணங்கும் தெய்வமே, எங்கள் அம்மா! ஈடு இணை இல்லாத



இமயமே, உலகத்தின் பார்வையை ஒரு சேர ஈர்த்த இன்முகமே, ஏழை மக்களின் வாழ்வை சோலைவனமாக்கிய சுடர் ஒளியே!

*பிற்பகல் 3–00*

கோயில் கருவறையில் திரை விலகக் காத்திருக்கும் பக்தரைப் போல கோடி ஜனங்கள் கும்பிட்டுக் காத்திருக்கும் குல தெய்வமே! கும்பிட்ட கரம் விலகும் முன்னே வரம் கொடுக்கும் குல சாமியே! *(மேசையைத் தட்டும் ஒலி)* படிக்கப் புத்தகம், சுமக்கப் பை, எழுதி, வரைய பேனா, பென்சில், தூரம் கடக்க மிதிவண்டி, உள்ளங்கைக்குள் உலகை அடக்க மடிக்கணினி என கல்விக் கண் திறக்கும் கலியுலகத்தின் தாயும் கலைமகளின் உருவம் தானே! இலையில் வீற்றிருக்கும் இன்னொரு சரஸ்வதி தானே! பூமியெங்கும் வாழுகின்ற பொன்மனத்துத் தமிழர்கள் எல்லாம் போற்றுகின்ற போதி மரத்தின் பூங்கொத்தே! புகழ் மணக்கும் தமிழுக்கு பொன்மனச் செம்மல் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றும் புகழ் சொத்தே. தேளின் கொடுக்கு தேனெடுக்க வந்தால் அது பூவிற்கே ஆபத்து என மீத்தேன் படையெடுப்பை விவேகத்தால் தடுத்தவரே! மண்ணை மலடாக்க மாபாதகம் செய்ய நினைத்தோரை மண்ணோடு மண்ணாக்கிய காவேரித் தாயே! *(மேசையைத் தட்டும் ஒலி)* நதி காத்து, இனம் காத்து, மொழி காத்து, தீந்தமிழ் நாட்டின் தீரா குறை தீர்த்த தீபகற்பத்தின் திசைகாட்டியே எங்கள் அம்மா!

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே புதிதாக ஏதுமில்லை, ஏதுமில்லை என்று புலம்புவோர்களுக்கு வரலாற்றுச் சாதனை படைத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியினுடைய நிதிநிலை அறிக்கையைப் பாராட்ட மனமில்லை என்பதுதான் மக்களுடைய மனநிலையாக இருக்கின்றது. தமிழக வரலாற்றிலும் முதன்முறையாக தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் ஆட்சி வந்த முதலாண்டிலேயே நிறைவேற்றிய ஒரே முதலமைச்சர், நாடு போற்றும் மகத்தான தலைவர் *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுமே. *5* ஆண்டுகள் முடியுந்தறுவாயில்கூட முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று கேட்டபோது இன்னும் *3* மாதம் இருக்கிறது என்று சொன்னவர்கள்தான் இன்றைக்கு இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களை எல்லாம் இன்றைக்குத் தமிழக மக்கள் தூக்கியெறிந்து மண்ணோடு

மண்ணாக்கியிருக்கின்றார்கள். தமிழகத்தின் மக்களுக்கு வாக்குறுதி அளித்த திட்டங்கள் அனைத்தையும் முதலாண்டிலேயே நிறைவேற்றிய நிலையில் பின் தொடர்ந்த ஆண்டுகளில் மக்கள் நலத் திட்டங்களை விரிவுபடுத்தியும், சமூக நலப் பாதுகாப்பிற்கான நலத் திட்ட உதவிகளைத் தொடர்ந்து வழங்கியும், மிக முக்கியமான மக்களின் இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றக்கூடிய துறைகளுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கி வரும் ஆட்சிதான் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு.

தொடர்ந்து 5 ஆண்டுகளாக வரியில்லாத நிதிநிலை அறிக்கை தந்து மக்களின் நலன் காக்கும் அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. எந்த நிலையில் இந்த மக்கள் நலன் காக்கும் நிதிநிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு உலகப் பொருளாதார வீழ்ச்சி, கச்சா எண்ணெய் வீழ்ச்சியினால் ஏற்பட்டுள்ள பொருளாதார வருவாய் வீழ்ச்சி; அதைப்போல, மத்திய அரசின் நிதியுதவிகள் குறைக்கப்பட்ட நிலைமை, 14–வது நிதி ஆணையத்தின் பரிந்துரையில் பல்வேறு திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதி அடியோடு நிறுத்தப்பட்ட நிலையிலும் இன்றைக்கு மக்கள் நலன் காக்கின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இந்தச் சிறப்பான வரியில்லாத நிதிநிலை அறிக்கையை வழங்கியதோடு மட்டுமல்லாமல், 650 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகளையும் அளித்திருப்பதை இந்த நாட்டு மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வரவேற்றுப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சீரிய நிருவாகத் திறமையால் இன்றைக்கு மொத்த உற்பத்தி மதிப்பு வளர்ச்சி 9 சதவீதத்திற்கும் கூடுதலாகும் என்ற செய்தி மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கின்றது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினுடைய மாட்சிமைக்கு நற்சாட்சிதான் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களான மக்கள் அளித்த வரலாற்றுச் சாதனை மிக்க தீர்ப்பு என்பதை பேசுகின்ற எதிர்க்கட்சியினர் உணர்ந்து பார்க்க வேண்டும். 2015–2016 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மத்திய அரசு மலைப்பகுதி மக்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களைக் கைவிட்ட நிலையிலே 'மலைவாழ் மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கு நான்



இருக்கின்றேன்' என்று சொல்லி மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்கு உத்தரவாதம் தந்து இடதுசாரி தீவிரவாதம் தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ரூபாய் 75 கோடி ஒதுக்கியிருப்பதை அந்த மலைவாழ் மக்கள் இன்றைக்கு நன்றியோடு பாராட்டுகின்றார்கள்.

அதைப்போல, சட்டம்–ஒழுங்கைச் சிறப்பாகப் பாதுகாக்கின்ற அரசாக இன்றைக்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு சட்டம்–ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக 5,568.81 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது சட்டம்–ஒழுங்கிலே இந்த ஆட்சிக்கு இருக்கின்ற அக்கறையைக் காட்டுகின்றது.

பிற்பகல் 3–05

நீதி நிருவாகத் துறைக்கு ரூ.850.70 கோடி ஒதுக்கியிருப்பது நீதித் துறையினுடைய சிறப்பான செயல்பாட்டில் இந்த ஆட்சி எந்த அளவிற்கு அக்கறை கொண்டிருக்கின்றது என்பதற்கு ஒரு சிறப்பான சான்றாக அமைந்திருக்கின்றது. அதைப்போல, தமிழ் வளர்ச்சிக்காக ரூ.46.77 கோடி ஒதுக்கீடு செய்து 13,327 பக்கங்களைக் கொண்ட தமிழ்ச் சொல் இலக்கண அகராதியை எண்முறைப்படுத்தி இணைய தளத்தில் வெளியிட நடவடிக்கை எடுத்திருப்பது தமிழ் வளர்ச்சியிலே ஒரு முத்திரைப் பதித்திருக்கின்ற செயலாக இன்றைக்கு உருவாக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் அதிகபட்ச ஒதுக்கீடாக இன்றைக்கு முதன்மைத் துறையாக இருக்கின்ற வேளாண்மைத் துறையிலே பல முத்தான திட்டங்களை உருவாக்கி ரூ.6,613.68 கோடியை ஒதுக்கியிருப்பது விவசாயிகளிடம் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. குறிப்பாகச் சொல்லப்போனால் இரண்டு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு இலாபம் என்ற தாரக மந்திரத்தோடு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு வேளாண்மைப் பெருமக்களிடம் மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டு பல்வேறு திட்டங்களைத் தமிழகத்தில் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு காவேரிப் பிரச்சினையில் மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டப் போர் நடத்தி நம்முடைய உரிமையைத் தொடர்ந்து நிலைநாட்டுகின்ற வகையிலே, காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட வைத்து,

தொடர்ந்து அதில் நம்முடைய உரிமையைப் பாதுகாக்கின்ற வகையில் மேகதாதுவில் கர்நாடகா அணை கட்டுகின்ற முயற்சியை எல்லாவகையிலும் தடுத்து நிறுத்துகின்ற உத்தரவாதத்தினை அளித்ததோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு காவேரி டெல்டா விவசாய மக்களுடைய வயிற்றிலே பால் வார்க்கின்ற வகையிலே, *27–3–2015* அன்று இந்த மாமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தினைக் கொண்டுவந்து, நிறைவேற்றச் செய்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒரு குழுவாக அழைத்துச் சென்று பாரதப் பிரதமரிடம் நம்முடைய தீர்மானத்தினை, கோரிக்கையைத் தெரிவிக்கின்ற வகையில், அந்த அற்புதமான செயலைச் செய்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு விவசாயிகள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதைப்போல, மக்கள் நலம் காக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பல்வேறு துறைகளில் சிறப்பான சாதனைகளைத் தொடர்ந்து சாதித்துக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சிக்கு மக்கள் அளித்த தீர்ப்புதான் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் *37* இடங்களை வாரி வழங்கினார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுமட்டுமல்லாமல், நடந்துமுடிந்த ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலிலும் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நம்முடைய கழகத்தினுடைய வேட்பாளராகப் போட்டியிட்ட இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற சகோதரி திருமதி சீ. வளர்மதி அவர்களை வெற்றிபெறச் செய்து மிகப் பெரிய சாதனையை தமிழ்நாட்டு மக்கள் செய்துள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் பக்கம்தான் தமிழ்நாட்டு மக்கள் இருக்கின்றார்கள் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் வருவார்கள், மீண்டும் வருவார்கள் என்று சொல்லி, *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். நீங்கள் *5* நிமிடத்தில் உரையை முடியுங்கள். *2* நிமிடத்தில் முடிக்கிறேன் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2014–2015* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசின் கையாலாகாத செயலைப் பார்க்கும்போது, மாநில அரசுக்குப் பல்வேறு வேதனைகளை அளித்துள்ளதை நாம் பார்க்கிறோம். குறிப்பாக காவல் துறையினை நவீனமயமாக்கும் திட்டம், சுற்றுலா மேம்பாடு, ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம், பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி மற்றும் உணவு பதப்படுத்துவதற்கான தேசியத் திட்டம் போன்ற *8* மத்திய அரசுத் திட்டங்கள் கைவிடப்பட்டிருப்பது வருத்தம் அளிக்கின்றது. மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரகக் குடிநீர் திட்டம், தேசிய சுகாதாரத் திட்டம், தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் போன்ற *24* திட்டங்களின் நிதியைக் குறைத்துள்ளது மிகுந்த வேதனையளிக்கின்றது. முந்தைய ஆட்சியைக் குறை சொன்ன இந்த அரசு மோடி ஆட்சியை குறை சொல்ல ஏன் முன்வரவில்லை என்று நான் கேட்கிறேன்.

*பிற்பகல் 3–10*

ஒவ்வோர் ஆண்டும் நிதி அதிகரிக்க வேண்டும். ஆனால் நிதி குறைந்துகொண்டு இருக்கிறதே என்ன காரணம் என்றே தெரியவில்லை. சிறைத் துறையைப் பொறுத்தமட்டில் Tamil Nadu Prison Rules, Rule 355-ன்படி ஆலோசனைக் குழு தமிழக மத்திய சிறைகளில் மற்றும் பெண்கள் சிறப்புச் சிறைகளிலே பல ஆண்டுகளாகக் கூடவில்லை. எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை இந்தப் பிரச்சினையில். நீங்கள் சிறைத் துறை பற்றி நிதிநிலை அறிக்கையில் தெரிவித்திருக்கிறீர்கள். இதைக் கவனிக்க வேண்டும் என்பதற்காக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்வீர்கள் என்றும், நிதிநிலை அறிக்கையில் அதற்கான அறிவிப்பு வரும் என்றும் எதிர்பார்த்தேன். வட்டியாவது

தள்ளுபடி செய்வதற்கு நீங்கள் முன் வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையிலே ஏராளமான காலியிடங்கள் இருக்கின்றன. அந்தக் காலியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். விவசாயிகள் வாங்கிய கடனை இரத்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எதிர்பார்ப்பதாகச் சொன்னார்கள். இந்தியாவிலேயே வட்டியில்லா பயிர்க்கடன் வழங்குகின்ற ஒரே மாநிலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிநடத்தும் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற ஆண்டு 5,000 கோடி ரூபாய் கடன் கொடுத்தார்கள். இந்த ஆண்டு 5,500 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. வறட்சி ஏற்பட்ட காலங்களில் வறட்சி நிவாரணம் கொடுத்த அரசு மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு. இந்தியாவிலேயே வேறு எந்த அரசும் கிடையாது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். கூட்டுறவு வங்கி சொந்த நிதியிலிருந்து கடன் கொடுப்பது இல்லை. மக்களுடைய டெபாசிட், அவர்களுடைய காப்பீடு, மத்திய வங்கியிலே வாங்குகின்ற கடன், மாநில வங்கியிலே இருந்து கடன் பெறுகிறது; இதுபோன்ற கடன்களை வைத்துதான் விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற அந்த கடனை உரிய காலத்திலே கட்டிவிட்டால் மாண்புமிகு மக்களின் முதல்வரே வட்டியைக் கட்டிவிடுகிறார். எனவே, விவசாயிகளுக்கு பாதிப்பு என்ற நிலையே இல்லாமல் போகின்றபோது கடனை இரத்து செய்யவேண்டுமென்று சொல்வது தவறான கருத்து என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** விவசாயிகளுடைய நலனுக்காகத்தான் அதை சொன்னேன்.



**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு அம்மா அவர்கள் 5,500 கோடி ரூபாய்க்கு தற்போது 200 கோடி ரூபாய் வட்டி மானியம் கொடுத்திருக்கிறார்கள். கூடுதலாக சென்ற ஆண்டுகூட 5,000 கோடி ரூபாய் கொடுத்து, இதுவரை 5,101 கோடி ரூபாய் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக மானியம் மட்டும் 200 கோடி ரூபாய்க்கும் மேலாக இருக்கிறது. பட்ஜெட்டிலே கொடுத்திருக்கிறார்கள். இப்போது 200 கோடி ரூபாய். எனவே, எதிர்காலத்தில் கூடுதலாகத்தான் வாய்ப்பு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்திலே ரேஷன் கார்டு வழங்குவதிலே பிரச்சினை இருக்கிறது. ஒரு வீட்டிலே, ஒரு குடும்பத்திலே ஒரே கூரைக்கு கீழே பல குடும்பங்கள் வசிக்கலாம். ஆனால், அதிகாரிகள் ஒரேயொரு ரேஷன் கார்டு மட்டும்தான் கொடுக்கிறார்கள். அந்த வீட்டில் பல குடும்பங்கள் இருந்தாலும் ஒரு கார்டுதான் கொடுக்கிறார்கள். அது போன்ற பிரச்சினை இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் தனித்தனியாக ரேஷன் கார்டு வழங்க அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 3–15*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் குடும்ப அட்டை உரியவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்படி என்று சொன்னால், மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற தமிழகத்தில்தான், நான் ஏற்கெனவே சொன்னதுபோல 5,300 கோடி ரூபாயை உணவுக்கு மானியமாக வழங்குகின்றார்கள். அதிலே கேட்டவர்கள் அனைத்து பேர்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளுக்குட்பட்டு வருகின்ற அத்தனை மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் இப்போது 11 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 3,57,000 குடும்ப அட்டைகள், போலி அட்டைகள் என கண்டுபிடிக்கப்பட்டு

அவை நீக்கப்பட்டுள்ளன. கேட்பவர்களுக்கெல்லாம் வழங்கிவிட்டால் தமிழகத்தில் இருக்கின்ற மக்கள் தொகையைவிட குடும்ப அட்டைகளில் உள்ள மக்கள் தொகை அதிகரித்துவிடும். 1,97,00,000 குடும்ப அட்டைகள் தற்போது உள்ளன. இந்த 1,97,00,000 குடும்ப அட்டைகளோடு மறுபடியும், மறுபடியும் கேட்கின்றவர்களுக்கு எல்லாம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் தற்போதுள்ள மக்கள் தொகை எண்ணிக்கையைவிட குடும்ப அட்டைகளில் இருப்பவர்களுடைய எண்ணிக்கை கூடுதலாகிவிடும். எனவே, மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நோக்கம் எல்லாம் சாதாரண மக்கள் பயனடைய வேண்டும் என்பதுதான். அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தி இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் உணவுப் பாதுகாப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குடிமைப் பொருள் உரியவர்களுக்குச் சென்றடைய வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைப்பு நல்கவேண்டும். உரிய ஆவணங்கள் கொடுக்கப்படுகிறபோது அவர்களுக்கு 60 நாட்களுக்குள்ளாக குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி உள்ளவர்களுக்குக் கொடுப்பதற்காகத்தான் நான் கேட்கிறேன். நான் சொல்வது ஒரு வீட்டிலே பல குடும்பங்கள் இருக்கின்றன. ஒரே ஒரு குடும்ப அட்டைதான் கொடுப்போம் என்று சொன்னால், பிரிந்து வாழ்கிறவர்களுக்கு ஏன் கொடுக்கவில்லை என்ற பிரச்சினை இருந்து வருகிற காரணத்தினால்தான் நான் இதைக் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வீட்டில் வசிக்கிறவர்களுக்கு தனித் தனி சமையல் அறை இருந்தால் அவர்களுக்குக் குடும்ப அட்டை உண்டு. ஒரே



வீட்டில் கூட்டுக் குடும்பமாக இருக்கிறவர்களுக்கு இல்லை. ஒரே வீட்டிலே இருந்தாலும், அவர்களுக்குத் தனித் தனி சமையல் அறைகள் இருக்கிறபோது நிச்சயமாக அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் உண்டு என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** வருங்காலத்தில் கொடுத்துவிட்டால் ரொம்ப சந்தோஷம். உயர் கல்வியைப் பொறுத்தமட்டில் அதிகமாக நிதி ஒதுக்கப்படும் என்று நினைத்தேன். ஆனால், நிதி ஒதுக்கப்படவில்லை. அனைத்துத் துறை இளநிலை பட்டப் படிப்புகளை இலவசமாக்கினால் நன்றாக இருக்கும். சாதாரண ஏழைகள்கூட உயர் கல்வி படிப்பதற்கு வாய்ப்பு இருக்கும். வேலைவாய்ப்பிற்கு ஏற்ற கல்வி வழங்கும் திட்டம் நமக்கு வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைச் சொல்கிறார்கள். உயர் கல்வித் துறையில் அதிகமான நிதி ஒதுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளில் ரூ.6,417 கோடிதான் ஒதுக்கினார்கள். ஆனால், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டுகளில் 15,169 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், கடந்த ஆண்டு நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி 3,621 கோடி ரூபாய். இந்த ஆண்டு 3,696 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உரையை முடியுங்கள். இப்போது நேரம் 3–17 ஆகிறது. (குறுக்கீடு) நேரம் இல்லை, நீங்கள் இரண்டு நிமிடங்கள்தான் கேட்டீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** ஒரு உறுப்பினருக்கு 15 நிமிடங்களாவது கொடுங்கள். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மேம்படுத்துவது பற்றியோ காலி இடங்களை நிரப்பும் நடவடிக்கையைப் பற்றியோ அறிக்கையில் எதுவும் சொல்லவில்லை. பள்ளிக் கல்வித் தரத்தை அறிக்கையில் தனியார் போல் உயர்த்தும் திட்டம் வேண்டும். அந்தத் திட்டம் பற்றி இங்கு சொல்லவில்லை. அரசு பள்ளிக் கூடங்களின் தரம் பின்தங்கி வருகிறது. தரமான கட்டடங்கள், அதற்கான பேருந்து வசதிகள் தேவை. கிராமப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகள் இப்போது மூடப்பட்டு வருகின்றன. தனியார் பள்ளியை முறியடிக்கக்கூடிய நிலையிலே அரசுப் பள்ளிகளில் மாற்றம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வெளிநாடுவாழ் தமிழர் நல ஆணையம் அமைப்பது பற்றி நான் ஏற்கெனவே பேசியிருந்தேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகள் மூடப்பட்டு வருகின்றன என்று பொத்தாம்பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஏதாவது ஒரு பள்ளியைக் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அதற்கு நாங்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றோம். இதற்கு முன்பும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கான அரசுப் பள்ளிகள் மூடக்கூடிய நிலையில் இருக்கின்றன என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இங்கு இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள், பொதுமக்கள் எல்லாம் புதிய, புதிய பள்ளிகள் திறக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கக்கூடிய காலத்திலே இவர்கள் பள்ளியை மூடுகின்றார்கள் என்று எந்த அர்த்தத்தில் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. அதற்கு விளக்கம் அளிக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைத் பொறுத்தமட்டில் நான் சொல்கிறேன். நான் வாழ்கின்ற கிராமத்தில்கூட பள்ளிக்கூடத்தில் 40 பேர் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் இரண்டு ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான் படித்த பள்ளிக்கூடத்திலே, இதேபோல உள்ளது என்று என்னால் சொல்ல முடியும். இதை நான் குறையாகச் சொல்லவில்லை. தனியார் பள்ளிக்கூடங்களைவிட நம்முடைய அரசுப் பள்ளிகூடங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், ஆதாரம் இல்லாமல் ஏதாவது பேசிக்கொண்டிருக்காதீர்கள். உட்காருங்கள், நேரம் ஆகிவிட்டது.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதிப் பிரச்சினையைப் பற்றி இன்னும் பேசவில்லை. இரண்டே இரண்டு நிமிடங்கள்தான் கொடுத்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், தொகுதிப் பிரச்சினையை எழுதிக் கொடுத்து விடுங்கள், அதை நான் பதிவு செய்துகொள்கிறேன்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** பின்வரும் தொகுதிக் கோரிக்கைகளைப் பதிவு செய்ய வேண்டுகிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

மீன் வளத்திற்கு அதிக நிதியாக 728.68 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. குளச்சல் துறைமுகம் மொத்தம் சொல்லப்பட்ட எஸ்டிமேட் 87 கோடி ரூபாய். ரூ.12 கோடி தமிழக அரசு நிதி வரவேண்டியுள்ளது. மத்திய அரசு நிதி 24 கோடி ரூபாய் வரவேண்டியுள்ளது. ஆக, குளச்சல் துறைமுகப் பணியை விரைவுபடுத்தி வருகின்ற ஜூன் மாதத்தில் முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேல் துறைமுகத்திற்கு சிறப்பு சேர்க்க மேலும்

100 அடி நீளம் நீட்டிக்கவும் எல்லா infrastructure பணிகளும் செய்ய சுமார் ரூ.45 கோடி தேவைப்படுகிறது.

மேலும் கடியப்பட்டினம், குறும்பனை, மண்டைக்காடு, புதூர் கடற்கரைப் பகுதிகளில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டுகிறேன்.

தேங்காய்ப்பட்டினம் மீன்பிடி துறைமுகப் பணி தொய்வில் உள்ளது. அந்தப் பணியை விரைந்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னாள் அமைச்சர் மாண்புமிகு லூர்தம்மாள் சைமன் பெயரை குளச்சல் மீன்பிடித் துறைமுகத்திற்குச் சூட்ட வேண்டுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், தனியார் காடுகள் பிரச்சினையால் ஏழை விவசாயிகள் சொத்தை வாங்கவோ, விற்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அரசு ஐவர் ஆய்வுக் குழுவை நியமித்துள்ளது. விவசாயிகளின் நலன் கருதி தயவு செய்து சாதகமான முடிவை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

மக்கள் வாழும் பகுதியில் புலிகள் சரணாலயம் அமைக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்த்தேக்கம் செய்யக்கூடிய சுமார் 3,000 குளங்கள் உள்ளன. அந்தக் குளங்களைத் தூர் வார மாவட்ட நிருவாகம் அனுமதிப்பதில்லை. ஆகவே, விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இதனால், மழைநீரைச் சேமித்து வைக்க முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, விவசாயிகள் நலன் கருதி தனியார்களே குளங்களைத் தூர் வார அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

2004 ஆம் ஆண்டு குளச்சல் பகுதியில் சுனாமி பேரழிவின்போது ஆயிரக்கணக்கான மக்கள் உடைமைகளையும், வீடுகளையும், உயிர்களையும் இழந்ததால், தமிழக அரசு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆயர் லியோன் காலனியை ஒதுக்கி சுமார் 560 வீடுகளை கட்டிக் கொடுத்தது. அந்தப் பகுதி '2C' பட்டா நிலம். அந்த மக்கள் ஒரு RC மாதா தேவாலயத்தைக் கட்டி பிரார்த்தனை நடத்தி வருகின்றனர். அந்தப் பகுதியின் பேரூராட்சியான ரீத்தாபுரம் பேரூராட்சி மேற்கூறிய ஆலயத்திற்கு மின் இணைப்பு வழங்க அனுமதி வழங்கியுள்ளது. கிராம அதிகாரி, வருவாய்த் துறை அதிகாரிகளும் மின் இணைப்பு வழங்க சிபாரிசு



செய்தும் 8 ஆண்டுகளாக மின் வாரியம் மேற்கூறிய ஆலயத்திற்கு மின் இணைப்பு வழங்கவில்லை. ஆகவே, தமிழக அரசு '2C' பட்டா பகுதியில் ஆலயம் கட்டப்பட்டிருந்தாலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கை என்பதால் இந்த ஆலயத்திற்கு மின் இணைப்பு வழங்க முன்வர வேண்டும்.

குளச்சல் நகராட்சியில் திடக் கழிவுகளால் துர்நாற்றமும், அருகில் உள்ள கிராம மக்களுக்கு தொற்றுநோய் ஏற்படும் அபாயமும் இருப்பதால் குளச்சல் நகராட்சியில் திடக் கழிவுத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்த வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சீ. வளர்மதி அவர்கள்.

பிற்பகல் 3—20

***திருமதி சீ. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி) அவள் அடிதொழ மறுப்பவர் மனிதரில்லை, மண்ணில் மனிதரில்லை. துன்பமும், தொல்லையும் ஏற்றுக்கொண்டே நம்மை சுகம்பெற வைத்திடும் கருணை வெள்ளம்' என்ற கான வரிகளை (மேசையைத் தட்டும் ஒலி) தனதெனக் கொண்ட எங்கள் கருணைத் தாயின் கனிவுப் பார்வையால், பொய் தகர்த்த எண்ணம், பொன்னிகர்த்த உள்ளம், மெய் வழியில் நின்று மேவி வாழும் கொள்கையோடு விளங்கும் எங்கள் அன்னையாள், ஞானம் மிக்க மனிதர், நல்லறிவுப் புனிதர், ஊனமற்ற உணர்வில் ஓங்கி நிற்கும் அறிஞரால் அடையாளப்படுத்தப்பட்டு, 1983—ல் கழகத்தின் அடிப்படை உறுப்பினராகி, திருச்சி சட்டக் கல்லூரியில் மாணவர் அணிச் செயலாளராகவும், பின்னர் திருச்சி மாநகர் 58—வது வட்ட மகளிர் அணிச் செயலாளராகவும், அதன்பின் திருச்சி மாநகர் மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் மற்றும் இணைச் செயலாளர் பொறுப்புகளில் கழகப் பணியாற்றி பின்னர் பொதுக் குழு உறுப்பினராகி, கடந்த 13 ஆண்டுகளாக மாவட்டக் கழக இணைச் செயலாளராகவும், கடந்த 2011—ல் 58—வது வட்ட மாமன்ற உறுப்பினராகவும், திருச்சி மாநகராட்சி நகரமைப்புக் குழுத் தலைவராகவும், இருந்த என்னை தற்பொழுது மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களால் சிறப்புப் பெற்ற திருவரங்கம் சட்டமன்றத் தொகுதியில் (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் பிரதிநிதியாக அடையாளம் தெரியும் வகையில் முகவரி அளித்து என் போன்ற இலட்சோப லட்ச கழகத் தொண்டர்களுக்கு வாழ்வளித்து வருபவர் எங்களின் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஸ்ரீ இராமானுஜர் பெரும்பாதம் எய்திய பதியாம் திருவரங்கப் பதியிலே நடந்தத் தேர்தலில் வேட்பாளராக அறிமுகப்படுத்தி, கழகத் தலைவியின் கடைக்கண் அருளோடு மண்ணின் மக்கள் என எல்லோர் ஆதரவும் எழிலாய் நிற்க எளியேனும் வெற்றிபெற்று இந்தப் பேரவையில் இருப்பதற்காக கைம்மாறு கருதாத நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

*2015–2016* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் ஆங்கிலத்தில் ‘maiden speech’ என்றும் தமிழிலே ‘கன்னிப் பேச்சு’ என்றும் சொல்லப்படுகின்ற அந்த ஆதிப் பேச்சில் என்னை ஐக்கியப்படுத்திக்கொள்வதில் உள்ளபடியே நான் பெருமைப்படுகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெஞ்சமெல்லாம், அணுவெல்லாம் நிறைந்த தாயை, நிலைத்திடும் உயிராக நின்ற தாயை, சீர்புகழ் பாடுவோர் சொல்லிலாத் தாயை, சிறப்புற சாதனைகள் செய்த தாயை, காலம் வென்ற அந்தக் கருப்பொருளை, கன்னித் தமிழின் முழுப் பொருளை, ஞாலம் உணர்ந்த மெய்ப் பொருளை, நயந்து உரைக்கும் அறக்கடலை, தரணியிலே வரலாற்றால், அறத்தால், பண்பால், தனிச் சிறப்பில் மிதக்கின்ற எங்கள் தாயை விண்ணுலகமும், மண்ணுலகமும் பூசிக்க, விடியலை வாழ்வினில் ஏற்றி வைத்து, என் காலங்கள் யாவையும் மாற்றி வைத்த அந்தக் கற்பகம் தந்த அற்புத அணியை ஒப்பனையின்றி போற்றிப் பணிந்து மாண்புமிகு மக்களின் முதல்வராம் எங்கள் தாயின் எழிலார் திசைநோக்கி, எண்சாண் கிடத்தி பண்புடன் பணிந்து, பணிவாய் வணங்கி எனது கன்னிப் பேச்சை, பொன்னி அரிசியால் புதுப் பொங்கலிட்டுப் படைக்கின்றேன்.

மேட்டுக்குடி வாழ்க்கை மேன்மேலும் உயர்ந்துவர நாட்டுக்குடி வாழ்க்கை நடுத் தெருவில் நிற்கலாமோ என்று எண்ணும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் இந்த நல்லரசின் *2015–2016* ஆம் ஆண்டிற்கான இந்த நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில்



ஒரு பந்தயக் குதிரையை படைவீரர் அணி வகுப்பில் நிறுத்தி வைத்ததுபோல் நின்று கொண்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வரிகளே இல்லாத இந்தப் புரட்சி பட்ஜெட், புதுமை பட்ஜெட்டில் ரூபாய் *650* கோடிக்கு வரிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பசுமை எரிசக்தி உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் உயிரி எரிபொருள் பயோமாஸ்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு வரி விலக்கு, மீனவர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மீன் கயிறுகள், மீன்பிடி மிதவைகள், மீன்வலை முறுக்கு நூல், மீன்பிடி விளக்குகள் மற்றும் மீன்பிடி துடுப்புகள் போன்ற மீன் பிடிப்புக்குப் பயன்படும் துணைப் பொருட்கள்மீது விதிக்கப்படும் மதிப்புக் கூட்டு வரி முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்படும் என்ற அறிவிப்பு ஆகியவை வரவேற்கத்தக்கவை.

*பிற்பகல் 3–25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த இரண்டரக் கலந்திட்ட இவ்வரசு மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன் செயல்படும் நல்லரசு. இதுமட்டுமா, அனைத்து வகையான கொசு வலைகளுக்கு தற்போது விதிக்கப்படும் ஐந்து சதவிகித மதிப்புக் கூட்டு வரி முற்றிலுமாக விலக்கிக்கொள்ளப்படும் என்ற அறிவிப்பு; செய்யும் தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்ற நெசவுத் தொழிலுக்கு முன்பாக, நூலுக்குப் பசையிடுவது தொடர்பான ஒப்பந்தப் பணிகளுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்கு; மின்சேமிப்புக்கான கருவிகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும்விதமாக அனைத்து வகையான ஒளி உமிழ் டையோடு விளக்குகள் (LED lamps) மீது தற்போது விதிக்கப்படும் மதிப்புக் கூட்டு வரி *14.5* சதவிகிதத்திலிருந்து *5* சதவிகிதமாகக் குறைக்கப்படும் என்ற அறிவிப்பு ஆகியவை மிகச் சிறந்த அறிவிப்புகளாகும்.

அதேபோல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையினரை ஊக்குவிக்க *10* குதிரைத் திறன் வரையிலான மோட்டார்

பம்புகள்மீது தற்போது விதிக்கப்படும் மதிப்புக் கூட்டு வரி 14.5 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்படும் என்ற அறிவிப்பு; மக்களுடன் ஒன்றிப்போன கைப்பேசிகள்மீது தற்போது விதிக்கப்படும் மதிப்புக் கூட்டு வரி 14.5 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்படும் என்ற அறிவிப்பு; வறுமை ஒழிப்புக்கு முன்னுரிமைக் கொடுத்து அதற்காக ரூபாய் 862 கோடி ஒதுக்கீடு செய்தது குறிப்பிடத்தக்கவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரத் திட்டங்களில் ஒன்றான, தமிழகம் முழுவதும் 15 இலட்சம் குடும்பங்களுக்கு தனி நபர் கழிப்பறைகளைக் கட்ட திட்டம்; இவ்வரசால் ஏற்கெனவே, தொடங்கியுள்ள தூய்மைக் கிராமம் இயக்கத்திற்கு ஆண்டுக்கு 150 கோடி ரூபாய் நிதி பகிர்வு மானியத்திலிருந்து ஒதுக்கீடு; நேரடி மானியங்களுக்காக ரூபாய் 12,936 கோடி நிதி ஒதுக்கீடு, அதாவது, உணவுத் துறை மானியத்திற்காக ரூபாய் 5,300 கோடி; மின்சார மானியத்திற்காக ரூபாய் 7,136 கோடி, போக்குவரத்துத் துறையில் டீசல் மானியத்திற்காக ரூபாய் 500 கோடி ஆகியவையும் சிறப்புத் திட்டங்களில் அடக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளியில் வாழை சாகுபடியாளர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும்விதமாக ஒருங்கிணைந்த உற்பத்தி மற்றும் குளிர்சாதன சேமிப்புக் கட்டமைப்பினை உருவாக்கித் தந்த மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி (மேசையைத் தட்டும் ஒலி) அளித்த இந்த நிதிநிலை அறிக்கை விவசாயிகளின் குடும்பங்களுக்கு என்றென்றும் ஒளியூட்டும். அதுபோல், இந்த நிதிநிலை அறிக்கையில் அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகத் திட்டத்திற்கு 50 கோடி ரூபாய் நிதியொதுக்கம்; மகளிர் சுகாதாரத் திட்டத்திற்கு 60.58 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு; கடந்த நான்கு ஆண்டுகளில் 41,830 அங்கன்வாடி மையங்களுக்குச் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது; வரும் நிதியாண்டில் மேலும் எஞ்சியுள்ள 12,609 அங்கன்வாடி மையங்களுக்கும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பு; அதன்மூலம் அங்கன்வாடி மையங்களிலும் சமையல் எரிவாயு இணைப்பு தற்போது தன்னிறைவு என்ற நிலை; பாரம்பரிய நகரங்களின் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரமும்,



வேளாங்கண்ணியும் சேர்க்கப்பட்டது ஆகியவை குறிப்பிடத்தக்க திட்டங்களாகும்.

கடந்த நான்கு ஆண்டுகளில் 182 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், தரம் உயர்த்தப்பட்டவகையில் 107 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 401 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.

விலையில்லா மடிக்கணினி திட்டத்திற்கு ரூபாய் 1,100 கோடி நிதியொதுக்கீடு; பள்ளிக் கல்வித் துறைக்கு ரூபாய் 20,936.50 கோடி நிதியொதுக்கீடு; உயர் கல்வித் துறைக்கு ரூபாய் 3,696.82 கோடி நிதியொதுக்கீடு என்பது வரவேற்கத்தக்கது.

பிற்பகல் 3–30

இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கத்திற்காக நிதி ஒதுக்கீடு ரூபாய் 100 கோடியிலிருந்து 150 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சாதனைகளைப் படைப்பவர்கள் எங்கள் மகராசி மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது சாதனை மலர்ச்சோலையிலே மகிழம் பூக்களாக எப்பொழுதும் மலர்ந்துகொண்டிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வரி இல்லா நிதிநிலை அறிக்கையைத் தந்த நல்ல அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்கள் ஏற்றம்பெறும் வகையில் வறியோருக்கும், ஏழை எளியோருக்கும் பயன்படும் விதமாக இந்த வரியில்லா நிதிநிலை அறிக்கையில் பங்கேற்க அனுமதி அளித்த, பார்ப்போர் போற்றும் அம்மாவின் திசை நோக்கி வணங்கியும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறியும் இந்நிதிநிலை அறிக்கையினை வரவேற்று எனது கன்னிப் பேச்சை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31–3–2015) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*27. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*28. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*29. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*30. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*ஏதுமில்லை*

*******